அர்ச்சிராதி

அருங்கலைக்கோன், ஸ்ரீசடகோபன் பொன்னடி, சேவா ரத்னா, தமிழ்ப்பேரவைச் செம்மல், கலைமாமணி, ஆய்வுத்தமிழரசு, பொதுமறைச் செம்மல், வைணவ இலக்கிய மாமணி


பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

முன்னாள் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்







ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

அர்ச்சிராதி

அருங்கலைக்கோன், ஸ்ரீசடகோபன் பொன்னடி, சேவா இரத்னா,
தமிழ்ப்பேரவைச் செம்மல்,கலைமாமணி, ஆய்வுத்தமிழரசு,
பொதுமறைச் செம்மல், வைணவ இலக்கிய மாமணி

பேராசிரியர் முனைவர்

ந சுப்பு ரெட்டியார்

முன்னாள் வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்
தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்



1916 2016

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

அர்ச்சிராதி

First Edition: Aug 1977
Second Edition: Feb 2020

Published by:
ந சுப்பு ரெட்டியார் 100
Centenary Committee Publications
AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

IBSN:978-81-943850-9-7

9 788194 385097

Wrapper design: **Centenary Committee**
Printed at: DJ Prints, Chennai – 600 095

Foreword

Archirathi is one of the Eighteen Rahasyas of Pillailogachariar which describes the path of Jeevathma to Paramapatham. The treatise is written in Sanskritised-Tamil (Manippravalam) which cannot be read and comprehended by a Tamil reader. Prof. Dr. N. Subbu Reddiar retired Foundar-Professor and Head of the Department of Tamil, Sri Venkateswara University, Tirupathi who is known by T.T. Devasthanam has rendered the book in a simple read able Tamil which can reach even to an ordinary lay Tamil reader who can easily read and enjoy the philosophy of Vaishavism. The T.T. Devasthanam is happy to publish it for the benefits of even the lay public and offer its thanks to Dr.Reddiar.

Executive Officer,

T.T. Devasthanam

'வெற்பு' என்று 'வேங்கடம்' பாடி
'வீடு'[1] ஆக்கி நிற்கும் ஆழ்வார் பெருமக்களின்
திருவுள்ளங்களிலும் அடியேன் உள்ளத்திலும்
நிரந்தரமாக எழுந்தருளியிருக்கும்
'வேங்கடமேய விளக்கின்'
இணைத்தாமரைத் திருவடிகளில்

பக்திப் படையல்

வண்ணமார் திங்கள் கதிரவன் முதலாய்
மாண்புறும் ஒளியினில் விண்ணில்
மண்ணினில் கடலில் யோகிய ருளத்தில்
வதிதலால் பயனிலை யென்று
எண்ணிநெஞ் சுருகி யாவரும் நோக்கி
எழில்வியப் பெய்தவேங் கடத்தில்
நண்ணியெற் கருளும் மாதவ முகுந்தன்
நல்லடிக் குரியதிந் நூலே.

1. நான்முகன் திருவந்தாதி - 40

டாக்டர் பூமா வேங்கடகிருஷ்ணன்
B.sc.,M.A.,B.Ed.,Ph.D

அணிந்துரை

ஒரு ஜீவான்மாவானது இவ்வுலகை விட்டு நீங்கியதும், ஏற்கெனவே செய்துள்ள பாவ புண்ணியங்களுக்குச் சேர நரகத்தையோ? சுவர்க்கத்தையோ, மீண்டும் பிறப்பையோ, பரமபதத்தையோ அடைகிறது. அந்த ஜீவாத்மா நரகத்திற்குச் செல்லும் வழிக்கு 'யாமயகதி' என்றும், சுவர்க்கத்திற்குச் செல்லும் வழிக்கு 'தூமகதி' என்றும், பரமபதத்திற்குச் செல்லும் வழிக்கு 'அர்ச்சிராதி கதி' என்றும் பெயர்கள் கூறப்படுகின்றன.

'அர்ச்சி :' என்ற வடமொழிச் சொல் சூரியனைக் குறிக்கும். பரமபதத்திற்குச் செல்லும் வழியில் முதலில் ஜீவாத்மா கடக்க வேண்டியது சூரியனாகிய வாசலை ஆகையால் இவ்வழி அர்ச்சிராதி (அர்ச்சியை ஆதியில் உடையது) என்று வழங்கப் பெறுகிறது. திருமங்கையாழ்வார், '**காரார் புரவியேழ் பூண்ட தனியாழி, தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு, ஆராவமுதம் அங்கெய்தி**'' என்று சிறிய திருமடலிலும், ''**மன்னும் கடுங்கதிரோன் நன்னடுவுள் அன்னதோரில்லி யினூடுபோய், வீடென்னும் தொன்னெறிக் கண் சென்றாரை....**'' என்று பெரிய திருமடலிலும் சூரிய மண்டலத்தைத் தாண்டிச் செல்லும் அர்ச்சிராதி கதியைப்பற்றிக் குறிப்பிடுகிறார். ''**இருளகற்றும் எரிகதிரோன் மண்டலத்தூடு ஏற்றிவைத்து**'' என்று பெரியாழ்வாரும் அருளிச்செய்துள்ளார்.

அர்ச்சிராதி கதியின் மூலமாக பரமபதம் சென்று பகவானை அநுபவிப்பது பற்றி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்துள்ள நூலின் பெயரே அர்ச்சிராதியாகும். இது பிள்ளைலோகசார்யர் அருளிச் செய்த பதினெட்டு இரகசிய நூல்களில் ஒன்றாகும். நாலாயிர திவ்யப்பிரபந்தப் பாசுரங்களை மிக மிக அதிகமாக

துணை ஆசிரியர், 'கீதாசாரியன்',
7, தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

இந்நூலில் பிள்ளைலோகசார்யர் கையாண்டுள்ளார். மேலும் பல பல வடமொழி மேற்கோள்களும் எடுத்தாளப் பெற்றுள்ளன. மணிப்ரவாள நடையில் அமைந்துள்ள இந்நூலை மிக எளிதில் அனைவரும் படித்துப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் பல்கலை வித்தகர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் மிக எளிய தமிழில் இந்நூலை ஆக்கித் தந்துள்ளார். வடமொழி தென்மொழி மேற்கோள்களுக்குரிய பொருள் களையும் தெளிவாகக் காட்டி அம்மேற்கோள்கள் இடம்பெறும் நூல்களையும் துல்லியமாகத் தந்துள்ளார்.

பல்வேறு துறைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ள டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள், தமது முதியவயதிலும் சோம்பாமல் மேலும் மேலும் நூல்களை எழுதி வருகின்ற ஆர்வமும் ஆற்றலும் நம்மை வியக்க வைக்கிறது. என்போன்ற இளம்வயதினருக்கு, பேராசிரியர் சுப்புரெட்டியார் அவர்கள் அவர்களுடைய மாணவி நிலையில் உள்ள அடியேனை, இப்புத்தகத்திற்கு ஓர் அணிந்துரை எழுதித் தரவேண்டும் என்று பணித்தது அடியேன்பால் அவருக்குள்ள அன்பையே காட்டுகிறது. அவர் மேலும் பல்லாண்டுகள் எல்லா நலன்களுடனும் வாழ்ந்திருந்து, எழுத்துலகுக்குச் சீரிய பணிகளை ஆற்றிட வேண்டும் என்று எல்லாம் வல்ல ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமான் திருவடித்தாமரைகளில் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

- பூமா வேங்கடகிருஷ்ணன்

நூல் முகம்

நின்றதெந்தை ஊரகத்து
இருந்ததெந்தை பாடகத்து
அன்று வெஃகணைக் கிடந்தது
என்னிலாத முன்னெலாம்
அன்றுநான் பிறந்திலேன்
பிறந்தபின் மறந்திலேன்
நின்றதும் இருந்ததும்
கிடந்ததும்என் 'நெஞ்சுளே'

- திருமழிசைபிரான்

முன்னைய பிறப்புகளிலும் இன்றைய பிறப்பிலும் செய்த தவப்பயனின் விளைவாக ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலும் ஆசாரியர் வியாக்கியானங்களிலும் ஆழங்கால் பட்டு அநுபவிக்க நேர்ந்தது. அதன் பயனாக பிள்ளை - உலக ஆசிரியரின் பதினெட்டு இரகசியங்களில் ஆழங்கால்பட்டு அநுபவித்தேன். 'அர்ச்சராதி' எழுதும்படி அடியேனின் மனம் தூண்ட அதனை எழுதும்பேறு பெற்றேன். சற்றேறக்குறைய இருபது ஆண்டுகள் திருமலையப்பன் அடிவாரத்திலே நிறுவப்பெற்றுள்ள திருவேங்கடவன் பல்கலைக்கழத்தில் தமிழ்துறை நிறுவனப் பேராசிரியனாகப் பணி புரிந்து நாலாயிரம் - நம்மாழ்வார் தத்துவம் என்னும் பொருள் பற்றி டாக்டர் பட்டம் பெற்றதன் பயனாக திருமலை திருப்பதி தேவஸ்தானம் மூலம் 'அர்ச்சிராதி' வெளிவரும் பேற்றையும் பெற்றேன்.

இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கியவர் டாக்டர். பூமா வேங்கடகிருஷ்ணன். என் அருமை நண்பர் டாக்டர். M.A. வேங்கடகிருஷ்ணன் அவர்களின் வாழ்க்கைத் துணைவி. இந்த அம்மையார் பி.எஸ்சி. (கணிதம்), எம்.ஏ. (வைணவம்), பி.எட்., பிஎச்.டி. பட்டங்கள் பெற்றவர், பரம்பரையாக வைணவ மரபு வழி வந்தவர். கணவரைப் போல் தாமும் ஆழ்ந்து கற்க வேண்டும் என்று ஆசைப்படுபவர்; கூரிய அறிவுடையவர் அணிந்துரை வழங்கிய அம்மையாருக்கு என் இதயங் கலந்த நன்றி ; சிறந்த

வைணவத் திலகமாகத் திகழவேண்டும் என்று என் வாழ்த்துகளையும் ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நூல் அச்சு வாகனம் ஏறி நூல் வடிவம் பெற்று வைணவ உலகத்தில் நடையாடக் காரணமாகயிருந்த திருமதி. ஆர். தேவகி அவர்கட்கு (அவ்வை, எண் 1, 3வது மாடி, புதூர் 13-ஆவது தெரு, அசோக் நகர், சென்னை - 600 083 போன் : 55688527) என் இதயம் கலந்த நன்றி.

முன்னைய என் தமிழ் - வைணவப்பணியைக் கண்டு மகிழ்ந்து தொடர்ந்து அதனை இடையறாது ஆற்றி வருவதற்கு நல்ல உடல்நிலை, மனவளம், குன்றாத கண்ணொளி தந்து அடியேனை ஊக்குவிக்கும் 'வேங்கட மேய விளக்கிற்கு' புருஷகார பூதையாகிய பெரிய பிராட்டியார் மூலம் எண்ணற்ற சரணாகதி வணக்கங்கள்.

அடியேன்,
ந. சுப்புரெட்டியார்

'வேங்கடம்'
13-14, அண்ணா நகர்,
சென்னை - 600 040
மே - 2005

உள்ளுறை

அணிந்துரை v

நூல் முகம் vii

1. முதல் பகுதி 3

2. இரண்டாம் பகுதி 19

3. மூன்றாம் பகுதி 31

4. நான்காம் பகுதி 41

5. பரமபத சோபானம் - ஐந்தாம் பகுதி 53

6.. ஆழ்வார் பாசுரங்களில் - ஆறாம் பகுதி 69

7. மணவாள மாமுனிகள் 102

அர்ச்சிராதி

முதல் பகுதி

இயல் - 1

அர்ச்சிராதி - முதற் பகுதி

திருமகள் கேள்வனான சர்வேசுவரனுக்கு நித்தியவிபூதி (பரமபதம்), லீலாவிபூதி (இப்பூவுலகம்) என்ற இருவிபூதிகள் அடிமையாக இருக்கும். அவற்றுள்போக விபூதியாகிய நித்திய விபூதியிலுள்ளவர்கள் 'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப''[1] என்று ஆழ்வார் கூறுகிறபடி, அதாவது பெரியபிராட்டியாரும் எம்பெருமானும் களித்து வாழ்கின்ற நித்திய விபூதியிலுள்ளவர்கள் அவனுடைய இச்சைக்கு இசைந்து நடப்பர். பல கோடி நூறாயிரம் நித்தியர்களும் முக்தர்களும் அங்கு இருக்கும்போது 'திருமகளும் நீயுமே' என்ற பிரிநிலை ஏகாரம் இட்டு பேசுவது பொருந்துமா? என்று ஐயம் பிறக்கும். இதற்குப் பரிகாரமாக நம்பிள்ளையின் ஸ்ரீசுக்தி : ''இருவருடைய அபிமானத்திற்குள்ளே திரிபாத்விபூதி[2]யாக அடங்கிக்கிடக்கும், வாசல்தோறும் ஈசுவரர்கள் இங்கேயிறே'' என்பது. அங்கு நித்தியர்களும் முக்தர்களும் அடிமையைச் செய்து கொண்டிருக்கும் உறைப்பினால் தனிப்பட்டுத் தோன்றாமல் திவ்விய தம்பதிகளின் 'அபிமானத்திற்குள்ளே அடங்கிக் கிடக்கின்றபடியாலே அவர்களைப் பிரித்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை; இந்நிலத்து மனைதோறும் 'நானே கடவுள், நானே கடவுள்' என்று இருப்பதுபோல திருநாட்டில் அகந்தையுடன் திரிகின்றவர்கள் ஒருவரும் இல்லையாதலால் திவ்விய தம்பதிகளைச் சொன்னதுவே போதும் என்றபடியாம். இந்தத் திவ்விய சேவையை இங்கே காட்டிக் கொடுப்பதனால் அந்நிலத்து இந்திரிய சுகங்களையும் கைவல்ய மோட்சம் என்கின்ற அற்ப ஆனந்தத்தையும் காறிஉமிழ்ந்ததாகச் சொல்லுகின்றார் என்பதை அறிய வேண்டும்.

1. திருவாய். 4.9:10. நிலா நிற்ப - அழகு நிற்ப.

2. திரிபாத்விபூதி - பரமபதம். திரிபாதம் - மூன்று கால் பங்கு. ஒப்பிடுக: தா.பா. மௌனகுரு: ஆங்காரத்தின் ஆற்றல் ஆணவத்தினும் வலிது. அறிவினை மயக்கிடும். 'அரிகரப் பிரம்மாதி தம்மொடு சமானம் என்னும்'.

ஆனால் இந்த லீலாவிபூதியிலுள்ளவர்கள் அவனது சங்கற்பத்தை அநுசரித்து அறிவிலராய் அவனை அகல்வதற்குக் காரணமானவற்றையே செய்து கொண்டிருப்பர். இந்நிலையைப் பிள்ளை உலகாசிரியர் மிக அற்புதமாக விளக்குவர் : ''எப்போதும் அஞ்சலி செய்து கொண்டும், ஆனந்தித்துக் கொண்டும் வாயால் 'நம:' என்று நவிற்றிக் கொண்டும் இருப்பதே சுவேத தீயவாசிகளின் இலட்சியம். அதுவே மூக்தர்கட்கும் இலட்சணமாகும்''[3] என்ற கூற்றுக்கு எதிராக ''இரண்டாகப் பிளந்து விழுந்தாலும் விழுவனேயொழிய இவ்வாறு வணங்கமாட்டேன். இஃது என் உடன் பிறந்த குற்றம். அவரவர் சுபாவம் மீற முடியாதன்றோ?''[4] என்றும் ''நானே ஈசுவரன்; நானே போகங்களை அநுபவிப்பவன்; நான் இயற்கையிலேயே சித்தனாக இருப்பவன்; பலமுடையவனும் சுகமுடையவனும் நானே''[5] என்றும் இருப்பவர்கள் லீலாவிபூதியிலுள்ளவர்கள். மற்றும், ''யானே என்தனதே''[6] -'யான்' 'எனது' என்ற அகங்காரமமகாரங்களுடன் அவர்கள், ''பணியா அமரர்''[7] - எவரையும் பணியவேண்டாத நித்திய சூரிகளின் இருப்புக்கு எதிராக, ''மற்றோர் தெய்வம் பாடியாடிப் பணிந்து ''[8] - தேவதாந்தரங்களைப் பலபடியாக வழிபட்டு இருப்பவர்கள். இன்னும், ''மிக்கார் வேதவிமலர்''[9] - சிறந்தவர்களான வேதம் வல்ல பரமைகாந்திகள் போன்று ''பெருமக்களாக''[10] -சிறந்தவர்களாக இராமல், ''சிறியார் சிவப்பட்டார்''[11] - சைவசமயத்தினர் மிகவும் நீசராகி ஒழிந்தனர். மேலும், ''அயர்வறும் அமரர்கள்''[12] - மறப்பு இல்லாத நித்திய சூரிகளைப் போல திவ்விய யஜ்ஞாகோபந்தராயிராமல், ''அறிவிலாமனிசராய்''[13] - தத்துவஞானம் இல்லாத மனிதர்களாய், 'ஒளிக் கொண்ட சோதி''[14] - ஞானம் முதலிய ஒளிகளுக்கு ஒளியைத் தருவதான ஒளியுருவத்திற்கு எதிராக, ''அழுக்குடம்பை''[15] - அசுத்தங்களோடு கூடிய உடலைப் பரிக்கிரகித்து இருப்பவர்கள். மேலும் ''விண்ணோர் பரவும் தலைமகன்''[16] - நித்திய சூரிகள்

3. மகாபாரதம் - சாந்திபர்வம்
4. இராமாயணம் - யுத்தகாண்டம் - 36.11
5. கீதை 16:14
6. திருவாய் 2.9:9.
7. மேலது 8.3:6
8. மேலது 4.10:7
9. மேலது 2.9:8
10. மேலது 3.7:4
11. நான்.திருவந். 6
12. திருவாய் 1.1:1
13. திருமாலை - 13
14. திருவாய் 2.3:10
15. திருவிருத் - 1
16. திருவாய் 2.6:3

புகழ்கின்ற எம்பெருமான் என்பதற்கு எதிராக, ''உலகில் கண்டவா தொண்டரைப்பாடி''[17] - உலகில் பிறருக்கு இழி தொழில்களைச் செய்து வாழ்கின்ற நீசர்களை மனம் போனபடி சிறப்பித்துக் கூறி, ''உனக்கே நாம் ஆட்செய்வோம்''[18] - எம்பெருமானுக்கு மட்டிலுமே நாம் அடிமை செய்யக் கடவோம்' என்று ஆண்டாள் கூறியவாறு அப்பெருமானுக்கு அடிமை செய்யாமல், ''மாரனார் வெஞ்சிலைக்கு ஆட் செய்யும்''[19] -மன்மதனுடைய அழகிய கொடிய வில்லுக்கு (விஷயப் பிரவணராய்த்) திரிகின்றவர்க்கு அடிமை பூண்டு வாழ்பவர்கள். மேலும், இவர்கள் ''தொண்டு பூண்டு அமுதம் உண்ணா''[20] - (எம்பெருமானின் அடியார்களாய் அவன் குணங்களைப்பாடி பரவசராய்க் கூத்தாடி என்ற வகைகளால்) அடிமைத் தொழிலை மேற்கொண்டு (பகவானுடைய குணாநுபவமாகின்ற) அமுதத்தைப் புசிக்காமல், ''பாவையர்வாய் அமுதம் உண்டு''[21] - மாதர்களுடைய இதழமுதத்தைப் பருகிக் காலம் கழிப்பார்கள். இன்னும் ''முக்தனான ஆன்மா பரமான்மாவின் சங்கற்பத்தால் (கைங்கரியம் புரிவதற்கு உறுப்பாகி) பல உடல்களைப் பெற்றுள்ளான்''[22] - என்ற கூற்றுக்கு எதிராக ''குலந்தான் எத்தனையும் பிறந்து''[23] - எல்லாக் குலங்களிலும் பிறந்து ''உருவார் சக்கரம் சங்கு சுமந்து இங்கு உம்மொடு ஒருபாடு உழலாதே''[24] - வடிவழகார்ந்த திருவாழி திருச்சங்குகளைச் சுமந்து கொண்டு இங்கு எம்பெருமானோடு ஒரு பக்கத்திலிருந்து கொண்டு திரியாமல், ''ஆக்கையின்வழி உழன்று''[25]. - சரீரத்தினுடைய வழியிலேயே நடந்து கெட்டுத் திரிவார்கள். மேலும், ''ஒரு காலே சரணம் என்றவனுக்கும் உனக்கே அடிமை என்றவனுக்கும் எல்லாப் பூதங்களினின்றும் ஏற்படும் அச்சத்தைப் போக்குகின்றேன். இது என் விரதம்''[26] - என்கின்றவனுடைய விரதத்திற்கு எதிராக, ''யாதானும் பற்றி நீங்கும்''[27] - எந்த விதத்தினாலாவது (எம்பெருமானை விட்டு)

17. பெரி.திரு.1.1:7
18. திருப். 29
19. பெரு. திரு. 3:3
20. திருமாலை - 5
21. பெரி. திரு. 1.3:5
22. சாந்தோக்ய உபநிடதம் 7.26:2
23. பெரி. திரு. 1.9:4
24. திருவாய் 8.3:7
25. மேலது 3.2:1
26. இராமாயணம் யுத்தகாண்டம் 18:3
27. திருவிருத். 95

விலகும்படியான விரதத்தை ஏறிட்டுக்கொண்டு, ''அவர் தரும் கலவியே கருதி ஓடினேன்''[28] - பெண்கள் தரக்கூடிய சிற்றின்பத்தை ஆசைப்பட்டு அந்தப் பெண்கள் சென்ற வழியையே பின்பற்றி ஓடினேன் என்றவாறு ''அலம்புரிந்த நெடுந்தடக்கைக்கும்''[29] - 'போதும், போதும்' என்று சொல்லும்படி கொடுக்கவல்ல நீண்ட பெரிய திருக்கைகட்கும் எட்டாதபடி ஓடி, 'அற்பசாரங்கள் அவை சுவைத்து அகன்று''[30] - கீழான விஷயங்களையே அநுபவித்து எம்பெருமானை விட்டு நீங்கிப் போகும்படியாக இருப்பவர்கள்.

இவர்கள் தன்மையை (கீழான நிலையை)ப் பார்த்துக் கைவிடாமல் தன்னுடைய இயல்பான சம்பந்தமே ஏதுவாக விடமாட்டாமல் ''எதிர்சூழல்புக்கு''[31] - எனக்கு எதிரே அவதரித்துத் திரிகின்ற சர்வபூத சுக்ருதான சர்வேசுவரனுடைய முயற்சிச்சிறப்பு ஒரு நாள் வரையில் ஒரு காரணமாகப் பலித்து, சமாச்சிரயணம் பண்ணிச் ''செய்த வேள்வியனாய்''[32] - எம்பெருமானுடைய சொரூப சுபாவங்களை அறிந்தவனாய், சம்சாரத்தின் கொடுமையை அநுசந்தித்துப் பாம்பின் வாயிலகப் பட்ட தேரை போலவும், காட்டுத் தீயில் எறும்பு போலவும்''[33] - இரண்டு பக்கமும் நெருப்பும் பற்றி எரிய அவற்றின் நடுவில் அகப்பட்டு வருந்தும் எறும்பு போலவும், ''ஆவாரார் துணை என்று அலை நீர்க்கடலுள் அழுந்தும் நாவாய் போலவும்''[34] - காப்பார் ஒருவரும் இல்லையே என்று கதறிக் கொண்டு அலை எறிகின்ற கடலினுள்ள அமிழ்கின்ற மரக்கலம் போலவும், ''ஆற்றத் துளங்கி''[35] - மிகவும் நடுங்க, ''பல நீ காட்டிப்படுப்பாயோ''[36] - பலவகையான சிற்றின்பங்களைக் (அற்ப சாரங்களை) கண்ணிலே காண்பித்து முடிக்க நினைக்கின்றாயோ? ''இன்னங் கெடுப்பாயோ''[37] - (ஏதோ சூது செய்து) இன்னமும் கெடுக்க நினைக்கின்றயோ? ''ஐவர் திசை திசை வலித்தெற்றுகின்றனர்''[38] - ஐம்பொறிகள் ஒவ்வொரு மூலையாக இழுத்துத் தாக்குகின்றன; ''கூறை சோறு இவைதா என்று குமைத்துப் போகார்''[39] - 'ஆடை சோறு இவற்றைக் கொடு' என்று அடர்த்துக் கொண்டிருந்த (பஞ்சேந்திரியங்கள்)

28. பெரி. திரு. 1.1:1
29. திரு. நெடுந். 6
30. திருவாய் 3.2:6
31. மேலது 2.7:6
32. திருவாய் 5.7:6
33. பெரி. திரு. 11.8:4
34. திருவாய் 5.1:9
35. பெரி. திரு. 11.8:4
36. திருவாய் 6.9:9
37. மேலது 6.9:8
38. மேலது 7.1:10
39. பெரி. திரு. 7.7:9

விட்டுப்போகின்றன; இல்லை என்று இந்திரியங்களின் கொடுமையை நினைத்துக் கூப்பிட்டு, ''எண்ணாராத் துயர்விளைக்கும் இவை என்ன உலகியற்கை''[40] - எண்ண முடியாத துன்பங்களை விளைவிக்கின்றவையான இந்த உலகப் பயணங்கள் என்ன!'' உயிர்மாய்தல் கண்டாற்றேன்''[41] - (திடீரென்று) மாய்ந்து போவதாகின்ற இந்த உலகப் பயணத்தைக் கண்டு சகிக்கமாட்டேன்: ''உலகினதியல்பே''[42] - இப்படிப்பட்ட உலகினது சுபாவம் என்ன பரிதாபம் ஐயோ! என்று சம்சாரிகள் இழவுக்கு நொந்து ஆற்றமாட்டாமல் இருப்பர்.

அடுத்து, ''பேயரே எனக்கு யாவரும்''[43] - இவ்வுலகத்தார் அனைவரும் என்னைப்பொறுத்தமட்டிலும் பைத்தியக் காரர்களே; ''நாட்டு மானிடத்தோடு எனக்கரிது''[44] - (எல்லாம் உன் திருவடியே என்று இருக்கின்ற) எனக்கு நாட்டிலுள்ள மனிதர்களோடு நட்பு செய்வது கீழ்மையானது என்றும், ''நாட்டாரோடு இயல் ஒழிந்து''[45] உலகத்தாரோடு நட்பைத் தவிர்த்து என்றும் ஆழ்வார்கள் அருளிச்செய்தபடியே பிராட்டிக்கு அரக்கிமார்களிடம் நட்பு கீழான நிலையானாற் போலே, ''மெய்யில் வாழ்க்கையை மெய் எனக் கொண்டு''[46] - உலகத்தோடும் உலகப்பொருள்களோடும் பொருந்தி வாழ்வதை பாரமார்த்திகமாகக் கருதுகின்ற, ''உண்டியே உடையே கந்தோடுகின்ற''[47] உணவையும் உடையையுமே விரும்பிக் (கண்டவிடமெல்லாம்) ஓடித்திரிகின்ற சௌரிசிந்தா விமுகரான சம்சாரிகளுடன் நட்பு தீமையானதாய், ''இந்நின்ற நீர்மை யாம் உறாமை''[48] - இவ்வண்ணமான இயல்பை (பிறப்புத் துன்பத்தை) இனிமேல் யாம் அடையாதபடி, ''எங்கு இனித்தலைப் பெய்வன்''[49] - இனி எங்கே கிட்டுவேன்; ''நாளேல் அறியேன்''[50] - நான் பிரிந்து துக்கப் படவேண்டிய நாள் இன்னும் எத்தனை நாள் உண்டென்று அறிகின்றிலேன்; ''வானுலகம் தெளிந்தே என்று எய்துவது''[51] - இந்த சம்சாரக் கலக்கங்கள் நீங்கி பரமபதம் அடையும் நாள் எதுவோ? ''தரியேன் இனி''[52] - இனிமேல் நான் ஆறி இருக்க முடியாத நிலையில் இல்லை; ''கூவிக் கொள்ளும்

40. திருவாய் 4.9:1 41. மேலது 4.9:1 42. திருவாசிரியம் - 6 அடி
43. பெரு. திரு. 3.8 44. பெரியாழ். திரு. 5.1:5
45. திருவாய் 10.6:2 46. பெரு. திரு. 3:4 47. பெரு. திரு. 3:4
48. திருவாய் 3.2:9 49. திருவிருத்.1 50. திருவாய் 9.8:4
51. பெரு. திரு. 6.3:8 52. திருவாய் 5.8:7

காலம் இன்னும் குறுகாதோ''[53] - என்னை அழைத்துக் கொள்ளும் காலம் இன்னும் அண்மையானதாக ஆகக் கூடாதோ? என்று பகவதநுபவம் பெறாமையாலே பெருவிடாய்ப்பட்டு ''தீயோடு உடன் சேர்மெழுகாய்''[54] நெருப்பினுடன் சேர்ந்த மெழுகின் தன்மையை உடையேனாய், ''காணவாராய் என்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து''[55] - நான் காணவாராய் என்று பலகாலும் சொல்லிப்பார்க்கின்ற கண்களும் கூப்பிடுகின்ற வாயும் பசையற உலர்ந்து, தளர்ந்து இருப்பான். இந்நிலையிலும் காணப் பெறாமையாலே ''ஒரு பகல் ஆயிரம் ஊழியாய்''[56] - நீ (காட்டுக்குப்) போகின்ற ஒரு பகல் ஆயிரம் யுகமாகக் கழியா நின்றது.

''செய்ய வேண்டியதைச் செய்து முடித்தவர்கள் மரணத்தை இனியனான விருந்தாளியைப் போல எதிர் நோக்குகின்றார்கள்''[57] - என்று கூறியுள்ளபடி ''ஆக்கை விடும் பொழுதை''[58] - உடல் தொலையும் நாளை எண்ணி, மாமுனிவருடைய உச்சிஷ்டத்தை விரும்பும் அரசகுமாரனைப் போலே, தான் விடத்தக்கது என்று கருதின உடலை விரும்புகின்ற ஈசுவரனை ''மங்கவொட்டு''[59] - ஒருவராலும் தப்பவொண்ணாத படி நீ கட்டின இச்சரீரத்துடன் பெரிய மாயையினைக் கழித்துத் தருவதற்கு உடன் படல் வேண்டும் என்று விரும்பி, ''உண்டிட்டாய் இனி உண்டொழியாய்''[60] - நிரந்தரமாகப் புசித்தாய்; குறையையும் புசித்தாக வேண்டும்: ''முற்றக்கரந் தொழித்தாய்''[61] - ஒருபடியாலும் அறிய வொண்ணாதபடி மறைந்து நிற்கின்றாய். ''திருவாணை நின்னாணை கண்டாய்''[62] - பெரிய பிராட்டி மேல் ஆணை, நின் மேல் ஆணை; ''இனி நான் போகல் ஒட்டேன்''[63] - இனி மேலும் ஒருநாளும் அகன்று போக இசையமாட்டேன் என்று தடுத்தும் வளைத்தும் பெறவேண்டும்படி பரமபக்தி தலையெடுத்து நிற்கின்றது; அவ்வளவோடு இல்லாமல் உக்தி மாத்திரத்தில் அந்வயித்து இருக்கின்றது; ''நானும் பிறந்தமை பொய்யன்றோ''[64] - நான் பிறந்ததும் பொய்யாகக் கடவதன்றே?

53. மேலது 6.9:9
54. மேலது 6.9:6
55. மேலது 8.5:2
56. திருவாய் 10:3:1
57. இதிகாச சமுச்சயம்
58. திருவாய் 1.2:9
59. மேலது 10.7:10
60. மேலது 10.10:6
61. மேலது 10.10:8
62. மேலது 10.10:2
63. மேலது 10.10:1
64. நாச். திரு. 10:4

''தங்கள் தேவரை வல்ல பரிசுவருவிப்பரேல் அது காண்டும்''[65] - தம்மால் கூடிய வகைகளாலே அழைப்பாராகில் அப்போது (அவனை) நாம் சேவிக்கப் பெறுவோம் என்று சொல்லுகின்ற படியே, பழுதாகாத தொன்றறிந்து''[66] - பழுது படாத (சிறந்த) ஒரு வழியை அறிந்து கொண்டு, ''வேறாக ஏத்தியிருக்குமவரைப் பற்றுதல்செய்து''[67] - விலட்சணமாக மதித்து பகவத் விஷயத்தில் ஆழ்ந்திருக்கும்மவரைப் பற்றுதல்செய்து, ''தெளிவுற்று வீவின்றி நிற்குமவனுக்கு''[68] - சொரூபத்தில் தெளிவு பெற்று, அந்தத் தெளிவுக்கு ஒருநாளும் பிரிவில்லாமல் இருக்குமவனுக்கு, சரீராவசான காலத்திலே ஈசுவரன் தன் திருவடிகளிலே தலைசாய்ப்பான். அன்று தொடங்கி ''வட்டியாய் வளர்ந்த கடன் போலே''[69] - ''உன் அடியார்க்கு என் செய்வன் என்றே இருத்தி''[70] - உன் அடியவர்களுக்கு (எத்தனை நன்மை செய்தாலும் திருப்தி பெறாமல்) இன்னமும் என்ன நன்மை செய்வோம் என்று பாரித்திரா நின்றாய் என்று ஆழ்வார் கூறியபடியே பெருந்தனிவாளனாய், பதில் உபகாரம் தேடித் தடுமாறி ''திருத்திப் பணி கொள்''[71] - அவர்களுடைய தடைகளைப் போக்கி அடிமை கொள்ள நினைத்து, பல்வாங்கின பாம்பு போலே சம்சாரம் மறுவலிடாதபடி அடியறுக்கச் செய்தேயும் 'பிணம் எழுந்து கடிக்கின்றதோ?' என்று அதிகமாக ஐயுற்று, அமர்ந்த நிலத்திலே கொண்டு போகையிலே விரைந்து 'இவன் விடாய் குளப்படி' என்னும்படி கடல் போலே ''முற்றுப் பருகினான்''[72] - (என்னை) மீதமில்லாமல் கபளீகரித்தான் என்னும்படிப் பெருவிடாயையுடையவனாய், ''ஒருமா நொடியும் பிரியான்''[73] - ''ஒரு நொடிப் பொழுதில் ஒருமாப் பொழுதும்''[74] பிரிந்து நிற்கின்றான் இலன் என்று சொல்லும்படி தசரதசக்கரவர்த்தி, பெருமாள் திருமுடிசூட்டும் நிகழ்ச்சிக்கு வசிட்டர் வாமதேவர் முதலானோர்களை அழைத்துப் பாரித்தாற்போலே, நித்திய சூரிகளை அழைத்து வழியைப் கோடிப்பித்தான் (எம்பெருமான்).

65. மேலது 10:10
66. திருவாய்7.5:11
67. மேலது 18
68. திருவாய் 7.5:11
69. மகாபாரதம் உத்தியோகம் 47:22
70. பெரி. திருவந். 53
71. திருவாய் 3.5:11
72. திருவாய் 9.6:10
73. மேலது 10.7:8
74. மா - மிகச்சிறிய எண், 1/20 இதுவும் அவ்வளவினைக் கொண்ட காலத்தையுணர்த்துகிறது.

"இரவு ஒரு சாமம் இருக்கும் பொழுது இராமபிரான் தன் அரண்மனையில் முழுமையாக அலங்காரம் செய்வித்தான்"[75] - என்று கூறியவாறு "வீடுதிருத்தி"[76] - மோட்ச நிலையிலும் சில திருத்தங்களைச் செய்து ஒழுங்குப்படுத்தி, அநாதிகாலார் ஜிதங்களாய் இவன் ஆசாரிய சமாச்சிரயணம் பண்ணின அன்றே தொடங்கி "அருளென்னும் தண்டால் அடித்து"[77] - கிருபையாகின்ற ஒருதடியினாலே புடைத்து என்னும்படி மூக்கும் "முகமும் சிதைந்து"[78] - முகம் வாடியிருக்கும்படி செய்து பண்டுபோல் வீற்றிருத்தல் (தவிர்ந்து) "மடி அடக்கி நில்லாதே சரக்கு வாங்கி"[79] - (பாவங்களே! இதுகாறும் என் நெஞ்சில் வீற்றிருந்தீர்கள்; அதனைத் தவிர்ந்து, துணியை இடுக்கிக் கொண்டு நெருக்கமாக நிற்பதைவிட கால் பேர்ந்து வெளிக் கிளம்பிப் போவதன்றோ அழகிது "மருங்குங் கண்டிமால்"[80] - சமீபத்தில் காணோம் என்னும்படி ஒளிந்து இருக்கின்ற பூர்வாகங்களையும் உத்திராகங்களையும் அநுகூலர் விஷய மாகவும் பிரதிகூலர் விஷயமாகவும், வருணனைக் குறித்துத் தொடுத்த அம்பை மருகாந்தாரத்திலே விட்டாற் போலே அசல் பிளந்தேறிட்டு, இவனோடு சம்பந்தமுடையராய் நரகநுபவம் பண்ணுகிறவர்களை "முக்தியடைபவனுக்கு அநுகூலரா யிருந்தவர் அனைவரும் எங்கிருந்தாலும் புண்ணிய உலகங்களை அடைகின்றனர்" என்று கூறியவாறு ஸ்வர்கஸ்தராம்படி நினைப்பிட்டு, "பிராணன் முதலிய ஐந்து காற்றுக்கும் தேவதையாய் கருடன் முதலிய ஐந்து மூர்த்தியான வைநதேயனின் தார்ட்சய ரூபத்தால் சுமக்கபட்டவர்"; "செழும் பறவை தானேறித்திரிவான்"[81] - அழகிய கருடன் மீதேறித் திரிபவனான எம்பெருமான் என்று சொல்லுகிறபடியே, "அருள் ஆழிபுள் கடவீர்"[82] - கருணைக் கடலான பெரிய திருவடியை நடத்துவீராக என்று இவன் ஆசைப்பட்டபடியே. "கொற்றபுள் ஒன்றேறி"[83] - வெற்றி பொருந்திய ஒரு கருடப் பறவையை மேற்கொண்டு வந்துதோன்றி, "மஞ்சுயர் பொன்மலைமேல் எழுந்த மாமுகில் போன்று"[84] - மேகமண்டலத்தளவும் ஓங்கின ஒரு பொன் மலையின் மீதெழுந்த காளமேகம் போன்று

75. இரா. அயோத் 6:5
76. திருவாய் 1.5:10
77. பெரி. திருவந். 26
78. மேலது - 69
79. மேலது - 30
80. மேலது - 54
81. திருவாய் 10.6:5
82. திருவாய் 1.4:6
83. பெரி. திரு. 8.1:8 (தாய்ப்பாசுரம்)
84. மேலது 9.2:8

இருக்கின்ற வடிவை அநுபவித்து ஆதிவாசிகரை அழைத்தருளி இவனை சத்கரிக்கும் முறைப்படி சத்கரிக்குமாறு அருளிச் செய்தான் (எம்பெருமான்).

அதன்பிறகு ''ஆகையால் வெப்பம் அடங்கப் பெற்ற வனாய், மனத்தில் ஒடுங்கிய இந்திரியங்களோடு கூட (சீவன்) எந்தப் பயனை மனத்தில் விரும்பினானோ, அந்தப் பயன் காரணமாகவே மறுபிறப்பிற்காகப் பிராணவாயுவை அடைகிறான்''[85] - சீவனுடைய மரண காலத்தில் அடியவனோடு கூடியவர்க்கு, இந்திரியம் மனத்தோடு சேர்ந்து, மனம் பிராணனோடு சேர்ந்து, பிராணன் பரமான்மாவின் பக்கலிலே சேரும்''[86] - என்கின்ற வாக்கியங்களின்படி புறக் காரணங்கள் (பாஹ்யகாரணங்கள்) அந்தக்கரணத்திலே சேர்ந்து, அந்தக் கரணம் பிராணனோடு சேர்ந்து, பிராணன் சேதநனோடு சம்பந்தித்து, இவன் பூதசூக்கும விசிஷ்டனாய் பரமான்மாவின் பக்கலிலே சேர்வான். அடுத்து, கர்ம காலத்தில் ஆதித்திய கிரணத்தாலே ஆப்தனானவன் நிழல் மரத்தின் அடியில் இளைப்பாறுதல் போலே, சம்சாரதாப வெப்பத்தில் உழல்பவனான இவன் வாசுதேவ மரமாகிய நிழலைக்கிட்டி, அமைதியை (விஸ்ரமித்து) அடைந்து, திருக்கோவலூருக்குப் போகும்போது திருமங்கை யாழ்வாருக்கு ''தான் உகந்த ஊரெல்லாம் தன் தாள் பாடி''[87] - (எம்பெருமான்) திருவுள்ளம் உவந்து எழுந்தருளியிருக்கின்ற திருப்பகுதிகளிளெல்லாம் அவனுடைய திருவடிகளைப் பாடி என்று ஆழ்வார் கூறியருளினபடி திருவுலகளந்தருளின திருவடிகளே கட்டுச் சோறு ஆமாப்போலே, ''முக்தியடையும் சீவனுக்கு துவய அநுசந்தாநம் வழிநடைக்குக் கட்டமுதாகும்'' ''(சீவன் மரணமடைந்தபின்) வெகுதூரம் நடந்தால் பசி தாகங்களால் மயக்கமடைந்த சீவனுக்குத் தாமரைக் கண்ணனின் திருநாமசங்கீர்த்தனமாகின்ற அமுதமே கட்டமுதாகும்.'' (சீவன் மரணமடைந்தபின்) வெகுதூரம் நடந்தால் பசி தாகங்களால் மயக்கமடைந்த சீவனுக்குத் தாமரைக் கண்ணனின் திருநாமசங் கீர்த்தனமாகின்ற அமுதமே கட்டமுதாகும்''[88] - என்கின்றபடியே துவயவசனமேகட்டமுதமாகவும், இந்த அர்ச்சிராதிமார்க்கத்தால் (பரமபதம்) செல்பவர் அனைவரும் முக்தி மார்க்கத்தை விரும்புபவர்கள்''[89] - என்றவாறு அர்ச்சிராதிமார்க்கமே

85. 4.2.2 ஸ்ரீபாஷ்யத்தில் எடுக்கப்பட்ட சுருதிவாக்கியம்.

86. சாந்தோக்கியம் 6.8:6

87. திருநெடுந். 6

88. கருடபுராணம்

89. சாந்தோக்கியம் 4:1

''பெருவழி''[90] - யாகவும், ''அண்டத்தப்புறத்து உய்த்திடும் ஐயனாய்''[91] - அண்டங்களுக்கு அப்பாலுள்ள பரமபதத்தில் (அன்பர்களைச்) செலுத்தவல்ல சுவாமியாய், ஆப்தனாய், ''படர்கொள் பாம்பு அணைப்பள்ளி கொண்ட''[92] - விரிவான சேஷசயனத்தில் பள்ளி கொண்டிருக்கும், ''சுரிகுழல் கமலக்கண் கனிவாய்க்காள மேகமான''[93] - திருக்குழல் ஒழுங்கையும், செவ்வித் தாமரை மலர்ந்தாற் போன்ற கடைக்கண் நோக்கையும், உள்ளுள்ள ஆசைமிகுதியை (அபிநிவேசத்தைக்) கோட்சொல்லித்தரும் மூறுவலையும் கொண்ட காளமேகமான அரங்கத்துறையும் ''இன்துணைவனே''[94] - கோயிலில் கண் வளர்ந்தருளும் நல்ல துணைவனான திருமாலே வழித்துணையாகவும், விரஜை நதி தீரமும், திவ்விய விருட்சமும் ஐரமதஹ்ரத தடமுமே அமைதியான தலமாகவும், ''மாமண்டபமே''[95] - புகலிடமாகவும், அர்ச்சிராதி புருஷர்களே உசாத்துணையாகவும், ''சூழ்விசும் பணிமுகிலினுடைய''[96] - எங்கும் பரந்த ஆகாயத்திலே அழகிய மேகங்களினுடைய மூழக்கமே பயணபடத் தொனியாகவும் அமைந்து ''வழியைத் தரும் நங்கள் வானவர் ஈசனான''[97] - வழிபாடாகிய கைங்கரியத்தைத் தந்தருள்கின்ற நமது தேவாதி தேவனான ஹார்த்தன் ''வழிபட்டோட அருள்''[98] - பாகவர்கள் செய்யும் கைங்கரிய மார்க்கத்திலே நானும் உடன்பட்டு நடக்கும்படியாக, ''வானேற வழிபெற்று''[99] - அர்ச்சிராதிமார்க்கத்தைக் காட்டிக் கொடுக்க அதனைப் பெற்று, போக்கிலே யொருப்பெற்று, பிரீதியதிசயத்தாலே அநாதிகாலம் தன்னைக் குடிமைகொண்டு போந்த சம்சாரத்தை ''நரகத்தை நகு நெஞ்சே''[100] - மனனே! சம்சார பூமியை நோக்கிச் சிரித்திடுக என்பதைப் புரிந்து பார்த்துச் சிரித்து ''மாக வைகுந்தம் காண்பதற்கு''[101] - பரமாகாசமான வைகுந்தத்தைக் காண்கைக்குப் பண்டே உண்டான ஆசை கொந்தளித்து மேலே மேலே பெருக, பிராட்டியும் விபீஷணப் பெருமாளும் இலங்கையினின்றும் புறப்பட்டாற் போலே இதய கமலத்தினின்றும் புறப்பட்டு ''இதயத்தைச் சுற்றி நூறும்

90. பெரி.திரு. 10.9:5
91. மேலது 7.10:5
92. திருவாய் 10.1:4
93. மேலது 10.1:1
94. பெரி. திரு. 3.7:6
95. திருவாய் 10.9:11
96. மேலது 10.9:1
97. மேலது 3.9:3
98. மேலது 8.10:4
99. மேலது 10.6:5
100. திருவாய் 10.6:5
101. மேலது 9.7:3

ஒன்றுமாக உள்ள நூற்றொரு நாடியிலும்''[102] - சுழுமுனை என்ற பெயருடைய மூர்த்த நாடியாலே வித்யா மகாத்ம்யத்தாலும் தேவயாது சுமிருதியாலும் பிரசந்நனான ஹார்த்தன் கைவிளக்குப் பிடித்துக் கொண்டு போகப் போய், சிரக் கபாலத்தைப் பேதித்து, ''சூரியரச்மிகள் இந்த நாடிகளில் நுழைந்துள்ளன. இந்த நாடிகளிலிருந்து கிளம்பிப் பரவுகின்றன. அவை இந்தச் சூரியனிடம் சம்பந்தப்பட்டுள்ளன. முத்தியடையும் சீவன் இந்தச் சூரிய கிரணங்களால் மேலே செல்லுகின்றான்''[103] - என்று உபநிடதம் குறிப்பிடுகின்றபடியே, அந்நாடியோடு சம்பந்தப்பட்டு ஆதியாஸ்மியை அநுசரித்துக் கொண்டு, ஓங்காரம் எனப்படும் பிரணவமாகின்ற தேரில் ஏறி, மனம் சாரத்தியம் பண்ணப்போகும்போது ''கையார் சக்கரத்தினின்று''[104] - திருக்கையில் பொருந்திய திருவாழி யாழ்வானிடமிருந்து எல்லா வடிவும் புதுக்கணிக்குமாபோலே உபய விபூதிகளும் புதுக்கணித்து கடல் தன் காம்பீரியமெல்லாம் குலைந்து கீழ்மண்ணோடு மேல்மண்ணெறிந்து அலைந்து வருகின்ற திரைகளைக் கையாகக் கொண்டு கூத்தாடின. ''ஆழ்கடல் அலைத்திரை கையெடுத்து ஆடின''[105] - பெரிய மலைகளைத் தோரணங்களாக ஒழுங்குபடுத்தி எங்கும் தொழுது கொண்டிருந்தனர். ஆகாயமெங்கும் பூரண கும்பங்களாலே (நிரை குடங்களாலே) நிறைந்தது - ''உயர் விண்ணில் பூரணம் பொன்குடம் பூரித்தது''[108] - ஆதிவாகிகள் ''தூப நன்மலர் மழை பொழிந்து''[109] - தூபம்சமர்ப்பிப்பதுடன் பூமழை பொழிந்தவர் களானார்கள்; ''கை படைத்த பயன்பெற்றோம்' என்று தொழுது நின்றார்கள். முனிவர்கள் இரண்டருகும் நின்று கொண்டு 'இங்கே எழுந்தருள வேண்டும்' என்று நல்வரவு கூறி உபசரித்தார்கள். ''இவர்கள் இங்குத் தங்கிப் போவார்களோ, இவர்கள் இங்குத்தான் தங்கிப் போவார்களோ'' என்னும் நகையாலே பார்த்தவிடமெங்கும் ''இமையவர் எதிரெதிர் இருப்பிடம் வகுத்தனர்''[110] - தேவர்கள் இவர்கள்

102. கட உபநிடதம் 2.6:6 சாந்தோக்கியம் 8.6:6

103. சாந்தோக்கியம் 8.6:2,5

104. திருவாய் 5.1:1

105. மேலது 10.9:1

106. மேலது 10.9:2

107. திருவாய் 10.9:2

108. திருவாய் 10.9:2 (உயர்ந்த ஆகாசத்தில் பூரணகும்பம் நிறைத்து வைத்தாற் போன்றிருந்தது)

109. மேலது 10.9:3

110. மேலது 10.9:4

செல்லுகின்ற வழியில் தங்கும் இடங்களைச் சமைத்தார்கள். துவாதசாதித்தியர்களும் மற்றுமுள்ளவர்களும் ஆதிவாகிக கணங்களும் "பார்த்தருளீர், பார்த்தருளீர்" என்று இருகைகளை நிரையே காட்டிக் கொண்டு சென்றார்கள். அவர்களால் இயக்கப்பெற்று ஒலிக்கின்ற முரசவாத்தியங்கள் அலைகடல் முழக்கத்தினை ஒத்திருந்தன. வழியில் வருணன் இந்திரன் பிரஜாபதி ஆகிய தேவர்கள் தம்தம் இருப்பிடங்களிலுள்ள வாசலில் வந்து "போதுமின் எமதிடம் புகுதுக"[111] - 'இங்ஙனே எழுந்தருள வேண்டும்; எங்கள் அதிகாரங்களைக் கைக்கொள்ள வேண்டும்' என்று வேண்டினார்கள். இந்நிலையில் கின்னரர்களும் கெருடர்களும் கீதங்கள் பாடினார்கள். மேலுலகங்களில் உள்ள வைதிகர்கள் - வேள்விகளை இயற்றுவோர் - தங்கள் வேள்வியின் பலன்களை இவர்கள் திருவடிகளில் சமர்ப்பித்தார்கள். வேறு சிலர் நறுமணம் மிக்க தூபங்களை எங்கும் பரவுமாறு இட்டார்கள். "காளங்கள் வலம்புரி கலந்தெங்கும் இசைத்தனர்"[112] - திருச்சின்னங்களையும் வலம்புரிச் சங்குகளையும் எல்லா இடங்களிலும் ஒலிக்கச் செய்தனர். ஆதிவாசிகளின் தலைவர்களுடைய மனைவிமார்கள் 'ஆழியான் தமர்களே, நீங்கள் சுவர்க்காதி பதங்களை ஆளுங்கள்!' என்று சொல்லி அன்புடன் மகிழ்ந்து வாழ்த்தினார்கள். மங்களாகாசனம் செய்தார்கள் என்றபடி. அப்சரமாதர்கள் பல்லாண்டு இசைத்த நிலையில் "மருதரும் வசுக்களும், தொடர்ந்தெங்கும் தோத்திரம் சொல்லினர்"[113] - மருத்துக் கணங்களும் அஷ்டவசுக்கணங்களும் தங்கள் எல்லைக்கு அப்பால் செல்லக்கூடிய இடங்களிலும் சென்று இவன் செவிப்படும்படி பல்லாண்டு பாடினார்கள். அவர்கள் இங்ஙனம் தொடர்ந்து செல்வதற்கு அடிஎன்? என்னில்: "கண்ணன் விண்ணூர் தொழவே சரிகின்றச் சங்கம்"[114] - "காண்பது எஞ்ஞான்று கொலோ?"[115] - "மாகவைகுந்தம் காண்பதற்கு என் மனம், ஏகம் எண்ணும் இராப்பகல் இன்றியே"[116] - என்றும், "ஒளிக்கொண்ட சோதியுமாய் உடன் கூடுவது என்று கொலோ?"[117] - என்றும் இருக்கையாலும் என்க. இங்ஙனம் 'பிறப்பிலி பின்னே நடந்து மற்று எல்லாம் கை

111. திருவாய் 10.9:5
112. திருவாய் 10.9:6
113. திருவாய் 10.9:7
114. திருவிரு 47
115. திருவாய் 5.9:6
116. திருவாய் 9.3:7
117. திருவாய் 2.3:10

தொழப்போய்''[118] - எல்லோரும் சேவிக்கும்படியாக பெரிய சத்காரத்தோடு போகும்போது ''முக்தியடைபவர்கள் அர்ச்சிரபிமானி புருடனையே அடைகின்றனர். அர்ச்சிரபிமானியிடமிருந்து அஹ்ரபிமானி தேவதையையும், அஹ்ரபிமானியிடமிருந்து சுக்ல பட்சாபிமானி புருஷனையும் அடைகின்றனர்''[119] - என்றும், ''அர்ச்சிஸ்ஸூ, அஹஸ்ஸூ, சுக்கிலபட்சம், உத்தராயணமாகின்ற ஆறுமாதங்கள் என்று சொல்லப்படும் வழியிலே செல்லுகின்றவர்களாய், பிரம்மத்தை அடையத்தக்க பொருளாக உபாசிக்கிறவர்களான உபாசகர்கள் பிரம்மத்தை அடைகின்றனர்''[120]-என்றும் சொல்லுகின்றபடியே அர்ச்சிராதி புருடர்கள் வழி நடத்தப்போம்.

118. பெரி. திரு. 3.7:8

119. சாந்தோக்கியம் 4.15:5

120. கீதை 8.24

அர்ச்சிராதி

இரண்டாம் பகுதி

இயல் - 2

அர்ச்சிராதி - இரண்டாம் பகுதி

அர்ச்சிராதி தேவதைகளில் அக்கினி சிறிது தூரம் வழி நடத்துகின்றான். அடுத்து, அஹஸ், சுக்கிலபட்ச, உத்த ராயண,வருஷ(சம்வத்சர), வாயு தேவதைகள் முறையே வழிநடத்துகின்றனர். இவர்கள் பதங்களைக் கடந்து தொடர்ந்து சூரிய மண்டலத்துள் புக்கு, அதாவது ''மன்னும் கடுங்கதிரோன் மண்டலத்தின் நல்நடுவுள் அன்னது ஓர் இல்லியின் ஊடுபோய்''[1] - நிலைபெற்ற மிக்க வெப்பமுள்ள கிரணங்களையுடையவனான சூரிய மண்டலத்தின் நட்ட நடுவே வாய்கொண்டு வருணிக்க முடியாத நுண்ணிய துவாரத்தின் வழியே சென்று, பொன்மயமாய், காலசக்ர பிரவர்த்தகமான ''தேரார் நிறை கதிரோன் மண்டலத்தைக் கீண்டுபுக்கு''[2] - தேரிலே பொருந்தியிருப்பவனும் நிறைந்த கிரணங்களையுடைய வனுமான சூரியனுடைய மண்டலத்தைப் பிளந்து கொண்டு அவ்வழியே புகுந்து, எதிர் விழிக்க வொண்ணாதபடி எல்லையற்ற பேரொளியுடன் எதிரே ஓர் ஆதித்தியன் செல்லுமாபோலே சென்று, அவன் அருகே சென்று, கிரக நட்சத்திரக் கூட்டங்கட்கு நிர்வாககனாய் அமிர்தமயமாயிருக்கும் சந்திரனைக் கிட்டி, அவன் வழிநடத்துகின்றான். நீர்க் கடவுளான வருணனும், தேவர்களின் தலைவனான இந்திரனும், முக்தராகப் போகுமவர்களை எல்லா முறைகளாலும் புகழ் மாலை சூட்டுவார்கள். சுரர்கள் அசுரர்கள் கந்தவர்கள், இராக்கதர்கள் இவர்களின் தலைவனான பிரஜாபதியையும் சென்றுகிட்டி அவர்கள் உலகங்களையும் கடந்து செல்கின்றான். அடுத்து அண்டகடாகத்தைப் பிளந்து கொண்டு நீர், நெருப்பு, வாயு, ஆகாயம், அகங்காரம், மகாந், அவ்யக்தம் ஆகிய ஆவரணங்கள் ஏழையும் ''முடிவில் பெரும்பாழான''[3] - நித்தியமாயிருக்கின்ற மூலப் பிரகிருதியையும் கடக்கின்றான்.

1. பெரி. திருமடல். 16
2. சிறிய திருமடல். 13
3. திருவாய் 10.10:10

முன்பு சம்சாரியாக இருந்த காலத்தில் இருள் சூழ்ந்த நிலையில் நீரும் நிழலும் இல்லாமல் "மார்க்கத்தின் விரிவைக் கேட்டு அஞ்சுகின்றேன்"[4] - என்கின்றபடியே, கேட்டபோதே துளங்க வேண்டும் படியான கொடியவழியிலே யமபடர் பாசங்களாலும், புத்திரர் மனைவி மய பாசங்களாலும் கட்டுண்டு, யமதூதராலே இழுப்புண்ட, "துடைவழிநாய்கள் கவர"[5] - (யமலோகத் திலுள்ள) செந்நாய்கள் துடையிலே கவ்வ, சக்தி, சங்கு, தோமரம், சாயகம், சூலம் முதலியவற்றால் நோவுபட்டு, புலி போன்ற கிங்கரரான இராக்கதர் உடம்பெங்கும் சீழும் குருதியும் வடிய, பசியும் தாகமும் மேலிட்டு, தூதரைச் சோறும் தண்ணீரும் வேண்டி மூக்கும் முகமும் உதடும் பல்லும் தகர்ந்து, கையும் காலும் ஒடிந்து, கூப்பிட்டுப்போன இழவு தீர - சுகோத்தரமான மார்க்கதாலே இவ்வெல்லை கடந்தபோதே தொடங்கிக் கண்டாரடைய சக்கரிக்க, தனக்கு உபாயமான "பாரளந்த பாதபோது"[6] - முன்பு பூமி முழுவதையும் அளந்தருளிய 'பாதமலர்' போலவும் "அந்தரம் ஏழினூடு செல உய்த்தபாதம்"[7] - 'மேலுலகங்கள் ஏழினுள்ளும் செல்லும்படி நடத்தப் பெற்ற திருவடி' போலவும் வேகமாக நடையிட்டுச் சென்று சப்த ஸ்பர்சாதிகளாகிற சிம்ஹவியாக்ராதிகளைத் தப்பி, சம்சாரமாகின்ற "பெருந்தூற்றி"[8] - னின்றும் பெரிய புதரினின்றும், புறப்பட்டு, தாபத்திரயமாகின்ற காட்டுத்தீயில் அகப்பட்ட துன்பங்க ளெல்லாம் தீர, அமுதப் பெருக்கான விரஜையாற்றில் படிகின்றான்.

உடனே "வன்சேற்று அள்ளலையும்"[9] - கொடிய சேற்றின் அடர்த்தியையுடைய தூலதேகத்துக்குக் காரணமான சூக்கும தேகத்தையும் தூலசூக்கும தேகத்துக் காரணமான கர்மவான ரேணுவையும் கழித்து, மேகத்தால் மறைக்கப்பெற்ற ஆதித்ய மண்டலம் போலவும் இராகு பற்றின சந்திரமண்டலம் போலவும், சேற்றில் அழுத்தினமாணிக்கம் போலவும், "அழுக்கு உடம்பிலே"[10] - அகப்பட்டுத் திரோஹிதஸ்வருபனான இவன் அதுவும் நீங்கப் பெற்று, "அந்த விரஜா நதியைத் தொட்ட வுடன்" என்கின்றபடியே, விரஜா நதியின் நீரைத்தொட்ட

4. பார. அச். 100.61
5. பெரியாழ் 4.5:5
6. திருச்சந். 66
7. பெரி. திரு. 11.4:5
8. திருவாய் 10.10:8
9. திருவிருத். 100
10. திருவிருத். 1

தனாலே திரோதயகமான சூக்கும உடலும் கழியப் பெறுகையாலே. "கோடி சூரியசமமான ஒளியையுடைய" உதித்தாற்போலே கண்கொண்டு காணாதபடி எல்லையற்ற ஒளியை (தேசு)யுடையவனாய் "விரஜைநதிக்கரையிலே இருக்கும் அமாநவனைக் கிட்டி" என்கின்றபடியே நான்கு தோளனாய், திருவாழி, திருச்சங்கு, திருக்கதை இவற்றைத் தரித்தவனாய் விரஜைநதிக்கரையிலே எழுந்தருளியிருக்கும் அமாநவனை அடைந்து நெருங்கி அவன் திருக்கைகளாலே தொட்டுணர்ந்து, பின்னர் லாவண்யம் சௌந்தர்யம் முதலிய கல்யாண குணங்களையுடைத்தாய், சுத்த சத்துவமாய், பரமேட்டியுமான விசுவம் நிவ்ருத்தம் சர்வம் என்னும் பஞ்ச சக்திமயமாய், ஞானாநந்த ஜனகமாய், பகவநுபவத்துக்கு உறுப்பாய், ஒளி கொண்ட சோதி உருவாயுமுள்ள திவ்விய திருமேனியைப் பெற்று, இந்திராதி பதங்கள் போலே கர்ம சாத்தியமாய், நஸ்வரமாய், குணத்திரயாத்மகமாய் இருப்ப தல்லாமல் பகவானுடைய அன்புக்கு இருப்பிடமாய், நித்தியமாய் சுத்த சர்வாத்மகமாய், "இல்லை கண்டீர் இன்பம்"[11] - 'துன்பங்களிலே சிலவற்றை இன்பம் என்று மயங்குகின்ற நிலையே ஒழிய இன்பத்தைத் தரக்கூடியதாய் ஒன்று இல்லை' என்பதற்கு எதிர்த்தட்டாக, "நலம் அந்தம் இல்லதோர் நாடாய்"[12] - ஆனந்தம் அளவிறந்திருப்பதான திருநாடாய், "இருள் தருமா ஞாலத்துக்கு"[13] - எதிர்த்தட்டாக தெளிவிசும்பு திருநாடு"[14] - 'பரமபதமாகிய திருநாடு' என்கின்றபடியே தெளிதாகிய சேண்விசும்பாய், சனகாதி முனிவர்களின் நெஞ்சுக்கும் நிலமல்லாததாய் காலம் நடையாடாததாய், ஆனந்த ஜனகமான தாய், பகவதாநு கூல்யக போகரான நித்திய சித்தராலே நெருங்கி அவர்களாலும் அள்விடவொண்ணாத அளவையும், ஐசுவர்யத் தையும் ஸ்வபாகமாகவுடைத்தான திவ்விய தேசத்தை (திருநாட்டை)க் "கண்கள் ஆரளவும் நின்று"[15] - 'கண்கள் திருப்தி பெறுமளவும் நின்று' கண்டு, "விண்ணைத் தொழுது"[16] - ஆகாயத்தை நோக்கி அஞ்சலிபண்ணி தொழுது அமாநவ பரிசரத்திலே திருச்சங்கு, காளபேரிகைகளின் முழக்கத்தைக் கேட்டு "ஓடுவார் விழுவார் உகந்து ஆலிப்பார், நாடுவார்

11. திருவாய் 9.1:5 *12. மேலது 2.8:4*
13. மேலது 10.6:1 *14. மேலது 9.7.5*
15. பெரி.திரு. 7.10:9 *16. திருவாய் 4.4:1 (தாய்பாசுரம்)*

நம்பிரான் எங்குற்றான் என்பார்''[17] - 'ஓடுவாரும், வழுக்கி விழுவாரும், உகப்புக்குப் போக்கு வீடாக கும்பலாகக் கோஷிப்பாரும், பிள்ளையைத் தேடுவாரும் நமக்கு உபகாரனான கண்ணன் எங்குத் தான் உளான் என்பாரும், ''கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்; தொண்டீர் எல்லீரும் வாரீர்''[18] - கண்ணுக்குப் பரமபோக்கியமான நிலைமைகளைக் கண்ணுற்றோம்; கண்ணுற்றோம்; கண்ணுற்றோம்; பாகவதர்கள் அனைவரும் வாருங்கள் வாருங்கள்' என்பாராய்ப் பெரிய ஆர்ப்பரவத்தைச் செய்து திரள் திரளாகப்புறப்பட்டு வருகின்ற நித்திய முக்தருடைய ஆனந்த களகளத்தைக் கண்டு அநுபவித்துக் கொண்டு, பெரிய பிரீதியுடன் போகிற அளவிலே, ''அந்த முக்த புருடனை நோக்கி ஐந்நூறு அப்சரஸ்ஸுக்கள் ஓடி வருகின்றனர். நூறு பேர் கையில் மாலை ஏந்தியும், நூறு பேர் கையில் ஆடைகளை ஏந்திக்கொண்டும் வருகின்றார்கள்''[19] - என்று உபநிடதமும், ''அன்று அந்தத் தேவர்களும் சாத்யர்களும் தூயஉள்ள முடையவராய் வந்து'' என்று கூறுகின்றபடி திவ்விய மால்யம், திவ்விய அஞ்சனம், திவ்விய சூர்ணம், திவ்விய வஸ்திரம், திவ்விய ஆபரணம் ஆகியவற்றைத் தரித்தவண்ணம் ஐந்நூறு அத்திவ்வியமால்யம், திவ்வியாபரணங்கள், திவ்வியாங்கராகங்கள் முதலியவற்றால் அலங்காரனாக இருக்கின்றபடியைக் கண்டு ''புனையிழைகள் அணிவும் ஆடை உடையும் புதுக்கணிப்பும் - நினைவும் நீர்மையதன்று''[22] - 'ஆபரணங்கள் பூணும் அழகும், சேலை உடுக்கும் அழகும், வடிவில் பிறந்த புதுமையும் ஆகிய பெருஞ் சிறப்பு (வைலட்சண்யம்) நினைக்கக் கூடியதாக இல்லை' என்று வியப்புடன் கொண்டாடுவார்கள். பின்னர், அநேகமாயிரம் கொடிகளாலும், முத்து மாலைகளாலும், மேற்கட்டிகளாலும் அலங்கரிக்கப் பெற்ற திவ்விய விமானத்தைப் பெரிய திருவடி கொண்டுவர, அதில் இவனை ஏற்றித் தோத்திரம் பண்ணிக் கொண்டு போவார்கள்.

திவ்விய காந்தாரத்தளவில் சென்ற நிலையில் வேறு சில அப்சரப் பெண்கள் நானாவித உபகாரங்களை ஏற்றிக் கொண்டு எதிரேத்தி சத்கரிக்க, பின்பு திவ்வியகந்தம், பிரம்மகந்தம்

17. பெரியாழ் திரு. 1.1:2 18. திருவாய் 5.2:2 19. கௌஷீ 1.34
20. கௌஷீ 1.34 21. திருப்பல் 9
22. திருவாய் 8.9:5 (குட்டநாட்டு திருப்புலியூர் பதிகம்)

தொடக்கமான அப்ராக்ருத கந்தங்களை மூகர்ந்து சர்வகந்தனாய் ''கொடியணி நெடுமதில் கோபுரம் குறுகினர்''[23] - அலங்காரமாக எடுத்துக்கட்டின கொடிகளையுடைய உயர்ந்த மதில்களை யுடைய தலைவாசலைக்கிட்ட, திருவாசல் காக்கும் முதலிகள் ''வைகுந்தன் தமர் எமர்; எமது இடம்புகுக''[24] - ''வைகுந்த நாதனின் அடியார்கள் எமக்கு சுவாமிகள்' என்று பெரிய ஆதரத்தோடு சத்கரிக்க, ''மக்களால் நிறைந்த அந்தப்புர வாசலைக் கடந்து''[25] - என்றும், ''கவாடம் கடந்து புக்கு''[26] - (திருநறையூர் சந்நிதியின்) திருக்காப்பை நீக்கிச் சென்று என்றும் கூறுவது போல் நெஞ்சையும் கண்ணையும் வருத்தி மீட்டுக் கொண்டு 'அயோத்தியை' என்றும் 'அபராஜிதை' என்றும் சொல்லப்படுகின்ற ''ஏர்கொள் நல்வைகுந்தத்துள்''[27] - மிகச் சிறந்த திருநாட்டிலே ''ஒருவண்ணம் சென்று புக்கு''[28] - ஒருவிதமாகச் சென்று புகுந்து ''வைகுண்டம் என்கின்ற திவ்விய நகரத்திற்கு வணக்கம்''[29] - என்று ''கண்ணன் விண்ணூரைத் தொழுது''[30] - எம்பெருமானுடைய பரமபதத்தைத் தொழுது ''வைகுந்தத்து அமரரும் முனிவரும்''[31] - வைகுந்தத்தில் உள்ள கைங்கரிய நிஷ்டரும் (அமரர்), குணாநுபவ நிஷ்டரும் (முனிவரும்) 'கடலில் நீர் ஸஹ்யத்திலே ஏறக் கொழித்தாற் போலே' சம்சாரியான இவன் இத்தேசத்தில் வரப்பெறுவதே!' என்று வியந்து கொண்டாடுகின்றனர்.

பின்னர் ''கோயில் கொள் தெய்வங்களான''[32] பெரிய திருவடி, சேனாதிபதியாழ்வான் (சேனை முதலியார்) தொடக்க மானவர்கள் முக்தனை தம்தம் திருமாளிகைகளிலே கொண்டு புக்கு, இவனை, ஆசனத்திலே உயர இருக்க வைத்து, தாங்கள் தரையிலே அமர்ந்து கொண்டு, தங்கள் துணைவிமார் நீர் வார்க்க திருவடிகளை விளக்கித் தங்கள் துணைவிமார்களுக்கு ''தேவர் வைகல் தீர்த்தங்களே''[33] - நித்தியசூரிகள் எப்போதும் தங்கள் துணைவிமார்களிடத்தில் இவர்கள் பரமபவித்திரர்களே என்று இவனுடைய பிரபாவத்தைச் சொல்லி, சத்கரிக்கும் முறைப்படி சத்கரிக்கின்றனர்.

23. திருவாய் 10.9:8
24. மேலது 10.9:9
25. இராம அயோத். 16.[illegible]
26. பெரிய திருமடல் 71
27. பெரி. திரு. 4.8:10
28. திருவாய் 6.1:7
29. நித்திய கிரந்தம் 13
30. திருவிருத். 47
31. மேலது 10.9:9
32. மேலது. 8.6:5
33. மேலது 7.10:3

பின்னர் சடகோபனும், திவ்வியசூர்ணங்களும், பூர்ண கும்பங்களும், மங்கள தீபங்களும் ஏந்திக்கொண்டு வேறு தேசங்களுக்குச் சென்று வந்த மகனைக் கண்ட தாய்மாரைப் போலே குளிர்ந்த முகத்தையுடைய "மதிமுகமடந்தையர் வந்தெதிர் கொள்ள"[34] - சந்திரன் போன்ற முகத்தையுடையவர் களான பரிசாரிகைகள் எதிரே வர, பெருந்தெரு வழியாக உள்ளேபுக்கு திவ்விய ஆவரண ஸதஸகஸ்ராவ்ருதமான "செம்பொன் செய்கோயிலை"[35] - க் கிட்டி "வைகுண்டதிவ்விய விமானத்திற்கு வணக்கம்"[36] - என்று தண்டனிட்டு ஒருபாட்டம் மழை விழுந்தாற் போலே தன்னுடைய வருகையாலே தளிர்த்துச் செருந்தி இலையும் மரமும் தெரியாதபடி பலவிதமான நிறத்தையும் கந்தத்தையுமுடைய அப்ராக்ருத மலர்களாலே நெருங்கித் தேன் வெள்ளமிடுகின்ற கற்பகச் சோலைகளாலும் திவ்விய கந்தமுடைய நானாவிதமான பூக்களாலும் நிறைந்த அளவிறந்த உத்தியாவனங்களாலும் இரத்தினங்களாலும் சமைந்த லீலாமண்டபங்களாலும் அபூர்வ சத் விஸ்மய ஜனகங்களான கிரீட சைலங்களாலும், வைகுண்ட நாதனுக்கும் விளையாடிப் பொழுது போக்கும் இடங்களாய், செவிகளுடைய மயிர்க் கூச்சிடும்படி இனிய பேச்சுகளையுடைய சுகசாரிகா மயூர கோகிலம் முதலியவற்றாலும் ஆகுலங்களாய மாணிக்கம் முத்து பவளம் முதலியவற்றாலே சமைந்தபடிகளை யுடையதாய், நித்திய முக்தர்களுடைய திருவுள்ளங்கள் போலே குளிர்ந்து, தெளிந்து, அமிர்த ரசங்களான திவ்விய நீர்களாலே நிறைந்து நானாவித பறவைக்கூட்ட சமாகீர்ணமாய் துளும்பி எங்கும் சொரிகின்ற தேன் வெள்ளத்தையுடையதாய், "மாதர்கள் வாண் முகமும் கண்ணும் ஏந்தும்"[37] - பெண்களின் ஒளி பொருந்திய முகத்தையும் கண்ணையும் தாங்கும்படியாக என்று கூறும் வண்ணம் "மதிமுக மடந்தையருடைய"[38] - திருமுகங்கட்கும் திருக்கண்களுக்கும் போலியான தாமரை செங்கழுநீர் முதலிய அப்ராக்ருத பூக்களையுடைய ஓதநெடுந்தடங்களாலும், நானாவித பூம்படுக்கைகளாலும், பரிமளம் போலே பூக்களிலே படிந்து மது வெள்ளத்திலே முழுகிப் பாட்டுகளாலே அநுமேயங்களான தெய்வ வண்டுகளினுடைய திவ்வியகானத்தாலும் கிட்டினாரைப் பிச்சேற்றுகின்ற திவ்யோத்தி

34. மேலது 10.9:10 35. பெரி. திரு. 4.3:1
36. நித்திய கிரந்தம் 13 37. திருவாய் 5.9:7 (திருவல்லாழ் பதிகம்)
38. மேலது 10.9:10

யான சதசகஸ்ரங்களாலும் சூழப்பட்டு, நானாவித இரத்தினங்களாலே சமைந்த இடங்களையுமுடையதாய் அநேகமாயிரம் இரத்தினத் தூண்களாலே அலங்கரிக்கப் பெற்றதாய் உபய விபூதியிலுள்ளாரும் ஒரு மூலையிலே அடங்கும்படி இடமுடையதாய், தாமரை, செங்கழுநீர் சந்தனம், அகில், கர்ப்பூரம் முதலியவற்றை அளைந்து வருகின்ற மெல்லிய காற்றாலே ஸேவ்யமாநமாய், நிரதிசிய ஆனந்தமயமான ''திருமாமணி மண்டபத்தை''[39] - அடைந்து ''ஆனந்தமயம் என்கின்ற (சிறந்த) மண்டபத்திற்கு வணக்கம்''[40] - என்று கூறி தண்டனிட்டு ''அப்பால் முதலாய் நின்ற அளப்பரிய ஆரமுதை''[41] - பரமபதத்திலே உபய விபூதிகட்கும் முதல்வனாக எழுந்தருளியிருப்பவனும் (சொரூபரூப குணங்களில்) அளவிடக் கூடாதவனும் அருமையான அமிர்தம் போன்றவனுமான அழகிய எம்பெருமானை எப்போதும் ஒக்கப் பருகுகையாலே இளகிப் பதித்து ''வைகுந்தக் குட்டனோடு''[42] - பரமபதத்திலுள்ள நித்திய சூரிகட்குப் பரிந்து நோக்கவேண்டுப்படியான பருவத்தையுடை வனோடு, ஸாம்ய பந்நராய் அநுபவஜனிதமான ஹார்ஷப்பிரகர்ஷத்துக்குப் போக்குவிட்டு சாமகானம் பண்ணுவர். ''செஞ்சொற் கவிகாள் உயிர்காத்து ஆட் செய்மின்''[43] - செவ்விய சொற்களையுடைய கவிகளே! உங்களைப் பாதுகாப்புடன் நோக்கிக் கொண்டு கவிபாடுங்கள்' என்று இன்ப ஆற்றிலே சீல குணமாகிய ஆழங்காலிலே கொண்டைக் கோல் நாட்டுவார்; சொந்த ஆசாரியனைக் குறித்து ''இழை கொள் சோதிச் செந்தாமரைக்கண் பிரான் இருந்தமைகாட்டினீர்''[44] - திருவாபரணங்களாலான சோதியையுடையவனும் செந்தாரை போன்ற திருக்கண்களையுடையவனுமான எம்பெருமான் வீற்றிருக்கும் படியை நீங்களே காட்டினீர் என்பார், ''உற்றேன்; உகந்து பணி செய்து உன பாதம் பெற்றேன்; ஈதே இன்னம் வேண்டுவது எந்தாய்!''[45] - எம்பெருமானே! உனது (திருவடிகளைக்) கிட்டப்பெற்றேன்; திருவாய்மொழி பாடுகையாகின்ற கைங்கரியத்தை உவப்புடன் செய்து உன் திருவடிகளை அணுகினவனானேன்; இவ்வநுபமே தினந்தோறும் இருக்க வேண்டும் என்பது விருப்பம் என்பார்; ''என் முடிவு

39. *திருவாய் 10.9:11* 40. *நித்திய கிரந்தம் 13* 41. *திருநெடுந். 14*
42. பெரியாழ்வார் திரு. *3.6:3* 43. *திருவாய் 10.7:1*
44. *திருவாய் 6.5:5* (தொலைவில்லிமங்கலம் பதிகம்) 45. மேலது *10.8:10*

காணாதே என்னுள் கலந்தானை, சொல் முடிவு காணேன் நான் சொல்லுவதென்? சொல்லீர்''[46] - எனது தாழ்வைக் கணிசியாமல் என்னுடன் கலவி செய்தவனான எம்பெருமானை நான் சொல்லி முடிக்கும் வகையறியேன்; என்னவென்று சொல்லலாம்? நீங்களே சொல்லலாம் என்பார், ''நமோ நாராயணாய''[47] - என்பார் என்கின்றபடியே ''ஓவாது உரைக்கும் உரை''[48] - யான ''ஓம் நமோ நாராயணாய'' என்ற பெரிய திருமந்திரத்தைச் சொல்லி, ''தோள்களை ஆரத்தழுவி, என் உயிரை அறவிலை செய்தனன் சோதீ!''[49] - தோள்களை நன்றாகத் தடவிக் கொடுத்து பரிபூரண விக்ரயம் செய்துவிட்டேன், சோதியே' என்று ஆன்மப்பொருளைச் சமர்ப்பணம் செய்வார், ''உருகுமால் நெஞ்சம்''[50] - நெஞ்சு கட்டுக் குலைந்து உருகாநின்றது என்றவாறு ஆழ்வார்பட்டதுபட்டு ''வல்வினையேனையீர்க்கின்ற குணங் களையுடையாய்''[51] - பாவியேனை இருபிளவாக்குகின்ற திருக்குணங்களையுடையவனே' என்று அம்பு பட்டாரைப் போலே உழைப்பார் ''மேலைத் தொண்டு உகளித்து''[52] - மேலான கைங்கரியரசம் அதிசயித்து என்கின்றபடியே அடிமைச் சுவை தலை மண்டையிட்டு, ''நம:' என்று சொல்லிக் கொண்டு இருப்பதே இலட்சணமாகும்''[53] - என்றும், ''நம: என்ற சொல்லுகின்றார்கள்'' என்றும் என்கின்றபடியே ''அந்தித் தொழும் சொல்லை''[54] - (கைங்கரிய ரசத்தினுடைய) சரமதசையிலே நம: என்று சொல்லுகின்ற சொல்லைச் சொல்லுவாராய், இப்படிப் பிரளய நீரில் அலைவாரைப் போலே, ஆனந்தக் கடலிலே அலைந்து, நித்திய முக்தர் சொல்லுகின்ற ''செவிக்கினிய செஞ்சொல்லே''[55] - காதுக்கு அமுதமான செவ்விய சொற்களாலே ''வெஞ்சொலாளர்களுடைய''[56] - கொடிய சொற்களைச் சொல்பவர்களாகிய (யமதூதர்களுடைய) கடுஞ் சொல்லைக் கேட்ட இழவுதீரச் செவிக்கிரையிட்டுக் கொண்டுபோய், திவ்வியஸ்தானத்தைக் கிட்டி, அப்பே ரோலக்கத்தின் நடுவே, தந்தாம்திருமுடிகளிலே திவ்வியா யுதங்களைத் தரித்துக் கொண்டு கூப்பின கைகளும் தாங்களுமாயிருக்கின்ற அஸ்திர சஸ்திராக்யரான திவ்விய

46. மேலது 2.5:8 47. நாச் திரு. 5.1:1 48. முதல் திருவந். 95
49. திருவாய் 8.1:10 50. மேலது 9.6:1 51. மேலது 8.1:8
52. மேலது 10.8:7 53. மகாபாரதம் - சாந்தி - 23 54. திருவாய் 10.8:7
55. மேலது 10.6:11 56. பெரி. திரு. 5.8:4

புருஷர்களும், தம்முடைய சங்கல்பத்தாலே சகல உலகப் படைப்பு, காப்பு, அழிப்புகளைப் பண்ணக் கடவரான சேனை முதலியார் முதலிய திவ்விய புருஷர்களும் வரிசையாகச் சேவித்திருக்க.

[illegible]

[illegible]

அர்ச்சிராதி

மூன்றாம் பகுதி

இயல் - 3

அர்ச்சிராதி - மூன்றாம் பகுதி

உபய விபூதியும் தொழிலாக வகுப்புண்ட மிகமிக அற்புதமயமான ''கோப்புடைய சீரிய சிங்காசனத்து''[1] - அழகிய சிங்காசனத்தில் பன்னிரண்டு இதழ்களையுடைய நானா சக்தி மயமான திவ்விய பொற்றாமரைப் பூவின் கர்ணிகையில் புஷ்பசஞ்சய விசித்திரமான திவ்விய யோக படுக்கையின்மேல் அநேகமாயிரம் சந்திரர்களை உருக்கி வார்த்தாற்போல் குளிர்ந்த தன்மையுடையவனாய், கல்யாண குணங்களுக்கு அந்தம் (முடிவு) இல்லாமையினால் அனந்தன் என்றும், எல்லாவித கைங்கரியத்தில் ஈடுபடுவார்க்கெல்லாம் உவமான பூமியாக இருக்கையால் சேஷன் என்றும் திருநாமமுடையவனாய், பகவத அநுபவத்திற்குப் போக்கு வீடாகப் பலவாகிய தலைகளை யுடையவனாய், சைத்தியம், மார்த்தவம் சௌரப்பியம் (மணம்) முதலிய குணங்களுக்கெல்லாம் கொள்கலமான திருவனத்தாழ் வானாகிய படுக்கையிலே, வெள்ளிமலையின் உச்சியில் (ரஜசகிரியின் உச்சியில்) அநேகமாயிரம் ஆதித்தியர்கள் ஒருசேர உதித்தாற்போலே இருக்கின்ற ஆயிரம் பணாமுடி மண்டலங் களில் சோதிமண்டலத்தின் நடுவில் ''உலகத்திற்குச் சுவாமி''[2] - என்கின்றவனுக்கும், தன் பூர்த்தியாலே பொறி புறவந்தடவ வேண்டும்படியான பூர்த்தியையும், ''வாசஞ்செய் பூங்குழலாள்'' - பரிமளம் மிக்க கூந்தலையுடையவள் என்கின்றபடியே நாற்றத்துக்கும் நாற்றங்கட்டலாம்படியான பூங்குழலையும் புண்டரீகாட்சனையும் கூடக் குடநீர் வார்ப்பித்துக் கொண்டு ஒரு மூலையிலே குமிழி நீருட்டும் படியான ''வடிக்கோல வாள் நெடுங்கண்''[3] - வடிகட்டின அழகுகையும் ஒளி பொருந்திய நீண்ட திருக்கண்களையும் போகத்திற்கு ஏகாந்தமான ஒப்பனை போலே பால்ய மத்தியத்திலே மெய்க்காட்டுகின்ற இளமை

1. திருப்பாவை - 23 2. தைத். நாரா. 1:11
3. இரண். திருவந். 82

யையும், பேசில் பிசகும்படியான சௌகுமார்யத்தையும் ''பித்தர் பனிமலர்மேல்பாவைக்கு''[4] - குளிர்ந்த செந்தாமரைப் பூவிற் பிறந்த பெரிய பிராட்டியார் விஷயத்தில் பெரிய வியாமோகம் கொண்டவர் என்கின்றபடியே அல்லாதவர்கள் பக்கல் போலே நூல் பிடித்துப் பரிமாற வொட்டாத போக்கியதா மூதிர்ச்சியையும், போகோபோத்கோத கேளியிலே பகவத் வைஸ்வரூப்யத்தைச் சிருங்கிக்கும்படியான பெருமையையும் உடையவளாய், திவ்வியபரிசனங்களை தத்தத வஸ்தாநு ரூபமாக திவ்விய பரிசர்யையிலே நியோகியா நிற்பாளை எல்லா ஆன்மாக்களுக்கும் ''சார்வு நமக்கென்றும்.... தேனமரும் பூமேல் திரு''[5] - தேன் நிறைந்த தாமரைப் பூவில் வசிப்பவளான பெரியபிராட்டியார் நமக்கு எப்போதும் சரணமாய் சிலரூபகுண விலாசாதிகளாலே ''உனக்கேற்கும் கோலம்''[6] - உனக்கு ஏற்றிருக்கின்ற வடிவு படைத்தவளாய் இருக்கின்ற ''ஒசிந்த ஒண்மலராளாள்''[7] - துவண்ட திருமேனியையுடைய பெரிய பிராட்டியார் வலப் பக்கத்தில் எழுந்தருளியிருக்க (அதாவது அருள் தேவியான பெரிய பிராட்டியார் வலப்பக்கத்தில் எழுந்தருளி இருக்கும்), அவளையும் விஞ்சின பொறுமை முதலிய திருக் குணங்களையும், நாவால் தொகைக்க ஒண்ணாத அழகையும் உடையவளாய், அவளுக்கு ''நிழல் போல் பவரான''[8] - இரண்டு நாச்சிமார்களும் வலப்பக்கத்திலும் எம்பெருமானைச் சேவித்திருக் கின்றனர். எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் நிலை எப்படி யுள்ளது? இந்த மூன்று தேவிமார்களுக்கும் நடுவே மூன்று மின்னற் கொடிகளுடன் கூடிய தாமரை பூத்தொரு காளமேகம் வெள்ளி மலையில் படிந்திருக்குமாறு போலே ''முடிச்சோதியாய் உனது மூகச் சோதி மலர்ந்ததுவோ?''[9] - உன்னுடைய திருமுக மண்டலத்தின் சோதி (உயர்மூகமாக வளர்ந்தது) திருவபிடே கத்தின் (கீரிடத்தின்) சோதியாய் மலர்ச்சி பெற்றதோ? என்கின்ற படி திருமுக மண்டலத்தின் ஒளி வெள்ளம் மேல்நோக்கிக் கொழித்தாற் போலலேயாய், நீ உபய விபூதிக்கும் நிர்வாககன் என்பதைக் கோள் சொல்லித் தரக் கடவதாய், தன் புகராலே அல்லாத புகரையடைய முட்டாக்கு இடுகின்ற ''விண் முதல் நாயகன் நீள் முடி''[10] - பரமபத நாதனான பெருமானது நீண்ட கீரிடம் என்கின்ற திருவபிடேகத்தையும் கண்டார் கண்ணும்

4. திருநெடுந். 18 5. மூன். திருவந். 100 6. திருவாய் 10.10:6
7. திருவாய் 6.7:8 8. திருவிருத். 3 9. திருவிருத். 3.11
10. திருவருத். 50

நெஞ்சும் இருளும்படி இருண்டு சுழன்று அட்டமிச் சந்திரனிலே (எட்டாம் நாள் சந்திரனிலே) அமிழ்த தாரை விழுந்தாற்போலே திருநெற்றியில் சாத்தின திருநாமத்தை மறைப்பது காட்டுவதாய் அசைந்து விழுகின்ற ''பூந்தண் துழாய் விரைநாறு கண்ணி''[11] - குளிர்ந்து பரிமளம் வீசப் பெற்ற திருத்துழாய் தண்மாலை யையும், ''நீலப் பனியிருங் குழல்களையும்''[12] - கறுத்துக் குளிர்ந்து பரந்த திருக்குழல்களையும் சௌகுமார்யாதி சயத்தாலே குறுவேர்(வை) பரம்பினாற்போலேயாய், ''நயத்தார்க்கு நச்சிலை''[13] - ஆசைப்பட்டவர்களுக்கு நஞ்சாய் இருக்கும் நிலையான திருநெற்றியையும் அலர்ந்து குளிர்ந் திருக்கின்ற இரண்டு தாமரைப்பூக்களைப் பதத்தாலே அமுக்கியாடுகின்ற இரண்டு வண்டொழுங்கு போலேயிருக்கின்ற ''தன்கைச் சார்ங்கம் அதுவே போல்''[14] - தன் திருக்கையிலுள்ள சார்ங்கம் என்ற வில்லைப்போன்ற திருப்புருவங்களையும், கலந்து பிரிந்த வர்களுக்கு ''இணைக்கூற்றங்களாய்''[15] - இரண்டு எமன்களாய் அல்லாதவர்களைத் ''தாயாய் அளிக்கக்''[16] - கடவதாய் (எல்லாப்பிராணி கட்கும்) தாய்போல் அருள்புரியக் கடவதாய், சேதநர்பக்கல் வாத்சல்யம் முதலிய திருக்குணங் களாலும் ''செய்யாள்''[17] - சிவந்த நிறமுடைய பிராட்டியை எப்போதும் ஒக்கக் கடாட்சிக் கையாலும், உபய விபூதி ஐசுவர்யத்தாலும் சிவந்து ''உலகத்துக்குச் சுவாமியும்''[18] - தனக்குத்தானே ஈசுவரனும் என்கின்ற பிரமாணம் வேண்டாதபடி ''அனைத்துலகும் உடைய அரவிந்தலோசன''[19] - எல்லா உலகுக்கும் சுவாமியான செந்தாமரைக் கண்ணனை என்கின்றபடி சர்வேசுவரத்து வசிஷ்நமாய், வேறோர் அழகில் செல்ல வொட்டாமல் தனக்கே அற்றுத் தீரும்படி பண்ணி ''தாமரைக் கண்ணனை விண்ணோர் பரவும் தலைமகனை''[20] - 'தாமரைமலர் போன்ற திருக்கண்களையுடையவனும் நித்திய சூரிகள் போன்றும் சுவாமிகள்' என்கின்றபடியே திரிபாத் விபூதியையும் எழுந்து வாங்கிக் கூப்பிடும்படி பண்ணக் கடவதாய், குளிர்ந்து செவ்வி பெற்று, பெரிய பெருமாள் திருக்கண்கள் போலே

11. திருவாய் 2.6:10 12. மேலது 9.9:1 13. மேலது 7.7:7
14. நாச். திரு. 14:6 15. திருவாய் 7.7:1 16. பெரி. திரு. 7.1:9
17. திருவாய் 9.4:1 18. கௌஷீ 1.34 19. திருவாய் 6.7:10
20. திருவாய் 2.6:3

''கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி''[21] - கறுத்தநிறமுடையனவாய், விசாலமானவை களாய், பிரகாசம் உடையனவாய், செவ்வரி படந்திருப்பனவாய் ''இலங்கொளி சேர் அரவிந்தம்''[22] - மிக்க ஒளியையுடைய தாமரை இதழ்போலே நீண்டு மிதோபத்தஸ்பர்த ஸ்புரித ஸபரத்வந்த் வலளிதங்களாய், அழகோலக்கம் கிளம்பினால் அடையாளங்களான ''தூது செய் கண்கள்''[23] - தூது போகின்ற கண்களையும், ''மாட்டுயர் கற்பகத்தின்வல்லியோ கொழுந்தோ அறியேன்''[24] - '(அக்கண்களின்) அருகே ஓங்கியிருப்பதொரு கற்பகத்தினுடைய கொடியோ? கொழுந்தோ? அறிகின்றிலேன்' என்று நித்திய சந்தேகஜநகமான ''கோல நீள்கொடி மூக்கையும்''[25] - திருமூக்கையும், அதனுடைய பல்லவோல் லாஸம் போலேயிருக்கின்ற திவ்விய கபோலங் களையும், அதனுடைய நவ குஸுமம் போலேயாய், ''நிலா முத்தம், தவழ்கதிர் முறுவல் செய்து''[26] - (நின்னுடைய) பல்லாகின்ற நிலாவினையுடைய அதரத்தினது கதிர் உள்ளடங்காதே புறம்பே தவழும்படி புன்முறுவல் செய்து என்கின்றபடியே முழுமதியம் முழுநிலாவைச் சொரிந்தாற் போலே திருமுத்தின் ஒளியைப் பிரவகிக்கின்ற ஸ்மிதத்தையும் ''கோலந்திரள் பவளக் கொழுந்துண்டம்''[27] - போலேயாய் சௌந்தர்யம், சௌகு மாரியம் முதலான நலங்களெல்லாம் ஒருசேரத் திரண்ட பவளத்தினுடைய கொழுவியதொரு முறிபோல, பேச்சில் செல்ல வொட்டாதே வாய்க்கரையிலே நீச்சாம்படி பண்ணி, நட்டாற்றிலே தெப்பத்தைப் பறிப்பாரைப் போலே அநுபவ பரிகரமான சிந்தையைக் கவர்ந்து, கூப்பிடும்படிப் ப்ண்ணக் கடவதாய், ''கள்வப் பணிமொழி களுக்கு''[28] - கிருத்திரிமமான தாழ்ந்த மொழிகளுக்கு ஆகரமான திருவதரத்தையும், 'இலகு விலகு மகரகுண்டலத்தன்''[29] - மிகவிளங்கி அசைகின்ற மகர குண்டலத்தினையுடையவன் என்கின்றபடியே பிரீத்யாதி சயத்தாலே தலையசைப்பு பண்ணுகையாலே அசைந்து திகழ்ந்தங்களிலே முட்டி தேஜஸ் அலையெறிந்து லாவண்ய சாகரத்திலேயேறித் துள்ளுகின்ற ''மின்னுமாமணி மகர குண்டலங்களையும்''[30]- சொலிக்கின்ற சிறந்த மணிக்

21. அமலனாதி 8 22. பெரி. திரு. 2.5:8 23. திருவாய் 9.9:9
24. மேலது 7.7:2 25. மேலது 5.5:6 26. மேலது 9.2:5
27. மேலது 7.7:3 28. மேலது 10.3:4 29. மேலது 8.8:1
30. பெரி. திரு. 8.1:3

கழுத்தின் மகரக் குழைகளையும், காந்தி சைத்திய மார்த்தவ சௌரப்பியாதி குணங்களாலே ''சுற்றும் ஒளி வட்டம் சூழ்ந்து''[31] - ஒளி பொருந்திய மண்டலம் (எப்போதும்) நாற்புறமும் சுழன்று என்கின்றபடியே எல்லாக் கலைகளும் நிறைந்ததாய், சர்வாஹ்லா தகரமாய், மறு நீங்கின சந்திர மண்டலத்தையும், அப்போதலர்ந்த செந்தாமரைப் பூவையும் தோற்பிக்கக் கடவதாய், கிட்டினாரைப் பிச்சேற்றி, ''மையேற்றி மயக்கும் மாயமந்திரமான''[32] - பிச்சேறப் பண்ணி அறிவு கெடுகைக்கு சொக்குப் பொடியான ''கோளிழை வாண் முகத்தையும்''[33] - தன்னொளி தானே தனக்கு ஆபரணமான அழகிய முகத்தையும், நாய்ச்சிமாருடைய கை ஆபரணங்களாலே முத்ரிதமாய், கரமுக தருண க்ரீவா கம்பு ப்ரதிமமான திருக்கழுத்தையும் நாய்ச்சிமாருடைய திருச்செவிப் பூக்களாலும், கர்ண பூஷணங்களாலும் விகசிதமான திருக்குழற் கற்றையாலும் உண்டான விமர்திதத்தாலே ''படுக்கையில் சீதையின் தலையாலே அலங்கரிக்கப் பெற்றதாய்''[34] - என்கின்ற படியே அலங்கருதாடகளாய், இரண்டு கட்டத்திலும் மந்தர கிரியைக் கடைந்து மடுத்தாற் போலே திண்ணியவாய், உபய விபூதியையும் தன் நிழலிலே நோக்கக் கடவனவாய், கணையத்திற்குள்ளே இருப்பாரைப்போலே தன்னை அண்டை கொள்ளுகையாலே, சம்சாரத்தில் இருக்கச் செய்தேயும் நித்பரனாம்படி பண்ணி, ''அலம்புரிந்த''[35] - போதும் போதும் என்று சொல்லும்படி கொடுக்கவல்ல என்கின்றபடியே தனக்கு உபய விபூதியையும் வழங்கி திவ்வியாஸ்திர புஷ்பிதங்களாய் இருக்கிற ''கற்பகக் காவன நற்பல திருத்தோள்''[36]களையும் பெரிய பிராட்டியாருக்குக் கோயிற் கட்டணமாய், நித்தியானுபவம் பண்ணாநிற்கச் செய்தேயும், ''அகலகில்லேன் இறையும்''[37] - ஒருகணமும் பிரிந்திருக்கமாட்டேன் என்னும்படி பிச்சேற்றக் கடவதாய், அவள் திருவடிகளில் சாத்தின செம்பஞ்சுக் குழம்பாலும் பூமிப்பிராட்டியாருடைய ''கொங்கைமேற் குங்குமத்தின் குழம்பாலும்''[38] - முலைகளில் மேலே பூசப்பட்ட குங்குமத்தின் குழம்பாலும் அலங்கரிக்கப்பட்டதாய், வனமாலை விராஜிதமாய் பெரிய பிராட்டியாருக்கு ஹிரண்யப் பிராகாரமான

31. *பெரியாழ். திரு. 1.4:3* 32. *நாச்திரு. 2.4* 33. *திருவாய் 7.7:8*
34. *இராமா. யுத்த 21:6* 35. *திருநெடுந். 6* 36. *திருவாய் 6.6:6*
37. *மேலது 6.10:10* 38. *நாச். திரு. 8:7*

''கோலமா மணியாரமும் முத்துத்தாமமும்''[39] - கௌத்துபம் முதலான - அழகிய சிறந்த இரத்தினங்களால் செய்யப் பெற்ற மாலையும் முத்து மாலையும் கௌத்துவம் முதலான ''குருமாமணிப்பூண் குலாவித் திகழுகின்ற''[40] - மிகவும் சிறந்த கௌத்துவ ஆபரணம் அசைந்து விளங்கும் அழகிய திருமார்பையும், காளமேகத்திலே மின்கொடி படர்ந்தாற் போலே திருமேனிக்குப் பாபாகரஸாவகமாய், அழகு வெள்ளத்திற்கு அணை கட்டினாற் போலே இருக்கின்ற ''வெண்பூரி நூலையும்''[41] - சுத்தமான பூணூலையும் ''உள்ளத்துள் நின்று உலாகின்றதே''[42] - (என்) நெஞ்சினுள் நிலைத்து நின்று உலாகின்றதே' என்கின்றபடியே நித்திய முக்தருடைய திருவுள்ளங்களில் அழகுகொண்டு ஏறுகின்ற ''திருவுதர பந்தத்தையும்''[43] - திருவயிற்றில் சாத்தியுள்ள உதரபந்தம் என்னும் திருவாபரணத்தையும் சௌத்தரிய சாகரம் இட்டளப் பட்டுச் சுழித்தாற் போலே நெஞ்சையும் கண்ணையும் சுழியாறுபடுத்துகின்ற திருவுந்தியையும் பாஞ்சசந்நியத்தையும் திருவாழியையும் சந்திர ஆதித்திரியர்களாகக் கருதி ''ஆங்கு மலரும் குவியும்''[44] - 'ஏககாலத்திலே மலர்வதும் மூடிக் கொள்ளுவதுமாய் இராநின்றது' என்கின்றபடியே அலருவது குவிவதாய், விதிசிவ நிதானமான நாபிகமலத்தையும் ''துடி நேர் இடையையும்''[45] - உடுக்கு போலிருக்கின்ற இடுப்பையும், சந்த்யாராக ரஞ்சிதமான ஆகாயம்போலே இருக்கின்ற திருவரைக்குப் பரபாகரசாவகமாய், திருவரை பூத்தாற் போலே யிருக்கின்ற ''அந்திபோல் நிறத்தாடையையும்''[46] - செவ்வானம் போன்ற நிறத்தையுடைய பீதாம்பரத்தையும் ரம்பாஸ் தம்பாதி கம்பீரமான திருத்தொடைகளையும் தாமரை நாளம் போலே கண்டகிதங்களான திருக்கணைக் கால்களையும், சங்கரதாங்க கல்பகத்வ ஜாரவிந்தாங்குச வஜ்ரலாஞ்சனமாய், நாய்ச்சிமாருங் கூட கூசித் தொடவேண்டும்படி ஆதியந்தம் மிருதுக்களாய், ''தேனே மலரும்''[47] - தேனோடு கூடிமலர்கின்ற என்கின்ற படியே நிரதிசய போக்கியங்களான ''துயரறு சுடரடிகளையும்''[48] -துக்கங்களைப் போக்குகின்ற சோதிமயமான போலே யிருக்கின்ற திருவடிகளையும் லாவண்ய சாகரத்தினுடைய

39. அமலனாதி - 9 40. பெரியாழ். திரு. 1.2:10
41. திருவிருத். 79 42. அமலனாதி - 4 43. அமலனாதி - 4
44. மூன். திருவந். 67 45. திருவாய் 8.5:3 46. அமலனாதி. 3
47. திருவாய் 1.5:5 48. மேலது 1.1:1

திரையொழுங்கு திருவிரல்களையும், அதிலே அநேக சந்திரர்கள் தோன்றினாற் போலே இருக்கின்ற திவ்விய நகங்களையும் வயிரவுருக்காய் ஆண்களையும் பெண்ணுடை யுடுத்தி பந்துக்களோடு உறவு அறுத்து நாட்டை பகை விளைத்து, ''சேணுயர் வானத்திருக்கும் தேவபிரான் தன்னை''[49] - மிகவும் உயர்ந்த பரமபதத்தில் எழுந்தருளி இருக்கின்ற நித்திய சூரி நாதனை ''குதிரியாய் மடலூர்தும்''[50] - 'அடங்காப் பெண்ணாய் மடலூரக் கடவோம்' என்கின்றபடியே கண்டபோதே கையும் மடலுமாய்ப் புறப்படும்படிப் பண்ணக்கடவதாய், கண்டபோதே எல்லாவிடாயும் கெட்டு, கண்டகண்கள் மயிரெறியும்படி இருண்டு குளிர்ந்து சாம்யாபந்நரான நித்திய சூரிகளினுடைய நெஞ்சையும் கண்ணையும் படையறுத்து ''இன்னார் என்று அறியேன்''[51] - இன்னார் என்று தெரிந்து கொள்ளமாட்டு கின்றிலேன் (பெருமையைப் பார்க்குமிடத்து தேவன் என்னலாம்படி இருந்தது; எளிமையைப் பார்க்குமிடத்து மனிதரிலே ஒருவன் என்னலாம்படி இருந்தது), ''பண்டு இவரைக் கண்டறிவ தெவ்வூரில்''[52] - 'இப்பெரியவரை இதற்கு முன்னம் நாம் பார்த்திருப்பது எந்தவூரிலே' என்று மதிமயங்கும்படிப் பண்ணக் கடவதாய் சகலஜன ஜீவாதுவாய், வைதக்ய வித்யாக்ருஹமாய் மநோரதமாம் அபூமியாய் ஸ்ருத்யந்த வாக்ய சர்வசுவாமியாய், மாணிக்கச்செப்பிலே பொன்னையிட்டு வைத்தாற் போலேயிருக்கப் ''பொன்னுரு வான''[53] - பொன் போன்ற சொருபத்தையுடைய நித்தியாத்ம சொருபத்துக்குப் பிரகாசமாய் ஒன்றுக்கொன்று தள்ளி இட்டளத்தில் வெள்ளம் போலே சுழித்து நின்றி துழாவுகிற ஆயுத ஆபரணங்களுடைய ''சோதி வெள்ளத்தினுள்ளே''[54] - பெருவெள்ளத்தினுள்ளே உத்நேய மான ''கரிய கோலத் திருவுருவையும்''[55] - நீலமேகம் போல் கறுத்ததாய் அழகியதான பிராட்டியோடு கூடிய திவ்விய ரூபத்தையும், நித்திய சூரிகள் அடுத்தடுத்துப் பார்க்கிற பார்வையையும்கூடப் பொறா தென்னும்படியான சௌகு மார்யத்தையும், பெரிய பிராட்டியாருடைய ''வடிக்கோலவாள் நெடுங்கண்''[56] - வடி கட்டின அழகை ஒளி பொருந்திய நீண்ட திருக்கண்களையும்

49. திருவாய் 5.3:9
50. மேலது 5.3:9
51. பெரி. திரு. 10.10:9
52. மேலது 8.1:9
53. திருநெடுந். 1
54. திருவாய் 5.5:10
55. கண்ணிநுண் - 3
56. இரண். திருவந். 82

உடைய பெண்களுக்கு நித்தியலட்ய மாகையாலே "அரும்பென்றும் அலரென்றும்"[57] - அரும்பு போலே குமாரத்தன்மையும் மலர்ந்த பூப்போலே இளமைப் பருவத்தையும் என்று சொல்லலாம்படியான செவ்வியையும் கிண்ணகத்திற்குப் படலிட்டாற் போலே யிருக்கின்ற "மெய்யமர் பல்கலன்களையும்"[58] - திருமேனிக்குப் பொருத்தமான பல திருவாபரணங்களையும், நித்தியசூரிகளைக் கொள்ளையூட்டிக் கொண்டு, விடாயர் முகத்திலே நீர் வெள்ளத்தைத் திறந்து விட்டாற் போலே சகல சிரமங்களும் ஆறும்படி குளிர்ந்து, தெளிந்து, பொன் மலையை உருக்கிக் கடலிலே விளாசினாற் போலே "செம் பொனே திகழும்"[59] - செம்பொன் போலவே பிரகாசிக்கின்ற பச்சை நிறமான திருமேனி ஒளியாலே "பதினாயிரம் பூர்ண சந்திரனுக்கு நிகரான தன் ஒளியினால் உலகத்தைப் (போஷித்து) மகிழ்வூட்டிக் கொண்டு"[60] - என்கின்ற படியே எல்லா உலகங்களையும் ஆப்யாயநம பண்ணி "தெருவெல்லாம் காவிகமழ்"[61] - தெருவுகள் தோறும் செங்கழு நீர்ப்பூ மணக்கின்ற என்கின்றபடியே கண்டவிடமெங்கும் புறப்பட்டு வெள்ளமிடுகின்ற திருமேனியாலே வைகுண்டம் எங்கும் வாசனை மயமாக்கி ஆலங்கட்டியை விட்டெறிந்தாற் போலே உடம்பெங்கும் வவ்வலிடும்படி குளிர்ந்து அரைக் கணமாறில் நித்திய மூக்தரை ஒரு நீர்ச்சாவியாக்குகின்ற கடாட்சம்ருத விருஷ்டிகளாலே திவ்விய கோஷ்டியைத்தளிரும் முறியுமாக்கி காம்ய மாதுர்யாத்ய நவதிக குணகண பூஷிதங் களாய் அதிமனோகர திவ்வியபாவ கர்ப்பங்களாய், பூ அலர்ந்தாற் போலேயிருக்கின்ற திருமுகத்தை எல்லாப்பக்கங்களிலும் செவ்வி பொறுத்துவனான லீலாலாபங்களாலே சூரிகளுடைய இருதயங் களை உசுப்பித்துக் கொண்டு, உபயவிபூதியையும் வீற்றிருக்கும் பலத்தாலே வெற்றி கொண்டு.

57. பெரி. திரு. 7.10:1 58. திருவாய் 6.6:7 59. மேலது 1.10:9
60. சாத்வத சம்கிதை 2:70 61. திருவாய் 9.6:1 (திருக்காட்கரை)

அர்ச்சிராதி

நான்காம் பகுதி

இயல் - 4

அர்ச்சிராதி - நான்காம் பகுதி

ஏழுலகும் தனிக்கோல் செல்ல''[1] - எல்லா உலகங்களிலும் அத்வதியமான செங்கோல் நடக்கும்படி ''குழுமித் தேவர் குழாங்கள் கை தொழ''[2] - நித்தியசூரிகளின் கூட்டங்கள் நெருங்கிச் சேவிக்கும்படியாக எழுந்தருளி இருக்கின்ற வைகுண்டநாதனைக் ''காண்பதெஞ்ஞான்று கொலோ''[3] - சேவிக்கப் பெறுவது என்றைக்கோ ''காட்டிராளீர்''[4] - காட்டாமல் போனீர் என்கின்ற இழவுதீர ''இராகவன் பார்த்த மாத்திரத்தில் நம்முடைய துக்கத்தைப் போக்குவான்''[5] - என்று இவள் மனோரதித்துக் கொண்டு, சென்றபடியே கண்ணாரக் கண்டு, ''சமஸ்தபரிவாரங்களுடன் கூடினவனும் பெரிய பிராட்டி யாருடைய நித்திய சம்பந்தமுடையவனுமாகின்ற நாராயண னுக்கே உரியேன்; மற்றொரு வருக்கல்ல''[6] - என்று ஆனந்த பரவசனாய் விழுந்து எழுந்திருந்து, பெரிய பிரீதியோடே சென்று, பாதபீடத்திலே அடியிட்டு திவ்விய சிம்மாசனத்திலே ஏறுவான்.

அப்பொழுது வாசுதேவன் இவனைக் கண்டு ''பரப்பிரம்மம் (சுயநலம் விரும்பி எவரிடமும்) ஏதும் பேசுவதில்லை; எல்லாப் பொருள்களையும் உடைய வனாகையாலே (சுயநலம் பேணி) யாரையும் ஆதரிப்பது மில்லை''[7] - என்கின்ற சுபாவம் குலைந்து சந்திரனைக் கண்ட கடல் போலே விக்ருதனாய், தன்னைப் பிரிந்து நெடுநாள் தரைக்கிடந்த இழவு தீர, ''இரகு குலத்தில் உதித்த இராமன் பரதனை உச்சி மோந்து கைகளால் ஆரத் தழுவி, மடியில் அமர்த்திக் கொண்டு மனம் ஒருமைப்பட்டுக் கேட்டான்''[8] - என்கின்றபடியே மடியில் வைத்து, பரதாழ்வானையும் அக்ரூரனையும் அணைத்தாற் போலே அணைத்து ''நீ யார்?'' என்று வினவுகின்றான். மறுமொழி பிரம்மத்தின் பிரகார

1. திருவாய் 4.5:1 2. மேலது 5.5:10 3. மேலது 5.9:6
4. பெரி. திரு. 4.9:7 5. இரா அயோத். 83.9 6. ஸ்ரீவைகுண்டகத்யம்
7. சாந்தோக்யம் 3.14 8. இராம. அயோத்தி 100.3

மானவன்''[9] - என்று "நான் இராஜகுமாரன்'' என்று சொல்ல, "நீ இத்தனை காலமும் செய்தது என்ன?'' என்று வினவ, அதற்கு இவன், "சாந்தேந்துமென் முலையார் தடந்தோள் புணர் இன்ப வெள்ளத்து ஆழ்ந்தேன்''[10] - குங்குமம் அணிந்த மெல்லிய முலை களையுடையாரான மங்கையரின் பருத்த தோள்களுடன் அணைவதனால் உண்டாகும் இன்பக் கடலில் மூழ்கிக்கிடந்தேன் என்று மறுமொழி கூறினான்.

இதற்கு அவன் "நீ அதனால் பெற்ற பலன் யாது?'' என்று மேலும் வினவ, "அருநரகத்து அழுந்தும் பயன் படைத்தேன்''[11] - கொடிய சம்சார நரகத்தில் அழுந்திக் கிடப்பதாகின்ற பலனைப் பெற்றேன் என்று பதிலிறுக்கின்றான் இவன்.

இதற்கு அவன் "நீ பின்பு செய்தது என்ன?'' என்ற கடாவ, இவன், "போந்தேன்''[12] - உன் திருவடிவாரத்தில் வந்து சேர்ந்தேன் என்று மறுமொழி தருகின்றான்.

இதற்கு அவன் "நீ இவண் வருவதற்கு மேற்கொண்ட உபாயம் யாது?'' என்று வினவ, அதற்கு இவன் "புண்ணியனே''[13] - புண்ணியமே வடிவெடுத்திருக்கும் நீயே'' என்று மறுமொழி பகர, இதற்கு அவன், "நீ அதினின்றும் போந்து செய்தது என்ன? என்று வினவ, "உன்னை எய்தினேன்''[14] - என்று மறுமொழி தருகின்றான்.

இதற்கு அவன் "நம்மைக் கிட்டினவிடத்தில் நீ பெற்ற பயன் என்ன? என்று வினவ, அதற்கு இவன் "என் தீவினைகள் தீர்ந்தேன்''[15] - எனது கொடும் பாவங்கள் தொலையப் பெற்றேன் என்று மறுமொழி தருகின்றான்.

இந்தக் கருத்தைச் சற்று விரிவாக விளக்குவோம். திருவிண்ணகர்[16] - என்னும் திருப்பதியை மூன்று திருமொழிகளால் (6.1, 6.2, 6.3) மங்களாசாசனம் செய்கின்றார்.

முதல் திருமொழியில் "திருவிண்ணகரப்பனே! சம்சாரத்தில் எனக்குப் பிறந்திருக்கும் அருசி வாசாமகோசரம் (=வார்த்தைக்கு எட்டாதது); இனி இருள் தருமா இவ்வுலகில் என்னை

9. தைத்தி. தாரா 1.40 *10. பெரி. திரு. 6.3:4* *11. பெரி. திரு. 6.3:4*
12. மேலது 6.3:4 *13. மேலது 6.3:4* *14. மேலது 6.3:4*
15. மேலது 6.3:4
16. திருவிண்ணகர் - ஒப்பிலியப்பன் சந்நிதி; கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது.

வைத்திருக்கத் தகாது'' என்று தமக்கு பகவத் விஷயத்தில் உண்டான ருசியையும் சம்சார வாழ்க்கையில் உண்டான அருசியையும் பரக்க விண்ணப்பம் செய்தார். அஃதாவது, ஒவ்வொரு பாசுரத்திலும்,

ஆண்டாய் உனைக் காண்பதோர்
　　அருள்எனக்கு அருளுதியேல்
வேண்டேன்மனை வாழ்க்கையை
　　விண்ணகர் மேயவனே. (5.1)

என்று சம்சார வாழ்க்கையில் தமக்கு உண்டான வெறுப்பை விண்ணப்பம் செய்தார். (இந்தத் திருமொழியை முற்றிலும் ஓதி அநுபவிக்க வேண்டும்).

இரண்டாம் திருமொழியில் தமக்கு மெய்யே ஆர்த்தி (=அதிகமான ஆவல்) விளைந்ததை விண்ணப்பம் செய்யும் போக்கில் தாம் அநாதிகாலம் சம்சாரத்தில் உழன்றபடியையும் பலயோனிகளிலும் பிறந்து வருந்தினபடியையும், அர்த்த காமங்களை விரும்பித்போந்தபடியையும், இந்திரியங்கட்கு வசப்பட்டு ஒழிந்தபடியையும், இப்போது மேல் வரக்கடவதான நரக வேதனையை நினைத்து அஞ்சுகிறபடியையும் பரக்க விண்ணப்பம் செய்து ''இவை என்னால் கழித்துக் கொள்ளக் கூடியவையாயில்லை; என்னுடைய குற்றம் ஒன்றையும் பாராமல் 'நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாத படியான சம்பந்தத்தையே' நோக்கி, பிராட்டியினால் ஏற்றுக் கொள்ளப் பட்டவனாயிருக்கிறபடியையும் திருவுள்ளம் பற்றி அடியேனை ஏற்றுக் கொள்ள அருள வேண்டும்'' என்று திருவிண்ணகரப்பன் திருவடிகளில் விழுந்து கதறுகின்றார். ஒவ்வொரு பாசுரத்திலும் ''நின் அடைந்தேன் - திருவிண்ணகர்மேயவனே'' (6.2) என்று கதறுகிறபடியைக் காணலாம். (இந்தத் திருமொழியையும் முற்றிலும் ஓதி உளங்கரைய வேண்டும்).

முதல், இரண்டு திருமொழிகளில் ஆழ்வார் சம்சார தோஷங்களை விரித்துரைத்து, சம்சாரத்தில் தமக்குண்டான வெறுப்பை எம்பெருமான் சந்நிதியில் விண்ணப்பம் செய்தும் அதனை நிவர்த்திப்பிக்க வேண்டுமாறு சரணம் புகுந்தும் எம்பெருமான் அவரது அபேட்சிதங்களை உடனே நிறைவேற்ற வில்லை. ''இவருக்கு இன்னமும் பூர்வ வாசனையாலே விஷயப் பிராவண்யம் நிச் சேஷமாகக் கழிந்திராது; சிறிதாவது ஒட்டிக்

கிடக்கும்; இன்னும் சிறிது இவரைத் தேர்வு செய்வோம்'' என்று திருவுள்ளம்கொண்ட திருவிண்ணகரப்பன் ''ஆழ்வாரே! உம்முடைய கருத்தைத் தெளிவாக உரைப்பீர்'' என்று கேட்ட தாகக் கொண்டு, தாம் வெறுத்துக் காற்கடை கொண்ட செய்தி இன்னதென்றும் பெறாவிடில் முடிந்து போனபடியான நிலையை பிறப்பிக்கக் கூடிய தாம் விரும்பிய புருஷார்த்தம் இன்னதென்றும், திருநாட்டிற் சென்று திருவடிகளின் கீழ் வாழ்ச்சியில் தமக்குப் பிறந்துள்ள பேரவாவையும் விரிவாக விண்ணப்பம் செய்வதாக அமைந்தது இத்திருமொழி. (6.3) இதிலுள்ள,

சாந்தேந்து மென்முலையார்
தடந்தோள்புணர் இன்ப வெள்ளத்து
ஆழ்ந்தேன் அருநகரத்து
அழுந்தும் பயன்படைத்தேன்
போந்தேன் புண்ணியனே
உன்னையெய்திஎன் தீவினைகள்
தீர்ந்தேன்; நின்னடைந்தேன்
திருவிண் ணகரானே (4)

என்ற நான்காம் பாசுரத்தைதான் பிள்ளையுலக ஆசிரியர் முழுமையாக எடுத்து விளக்கினார்.

''விஷயபோகங்களைக் காறி உமிழ்ந்து பகவத் விஷயத்திலே வந்து சேர்ந்த ஆழ்வார் இழிந்த அவ்விஷயங் களைப் பற்றிச் 'சாந்தேந்து மென்முலையார்' என்றும் 'தடந்தோள்புணர் இன்பவெள்ளம்' என்றும் விரக்தருக்கும் காமம் பிறக்கும்படியாக வருணித்துப் பேசுவது ஏன்?'' என்று சிலர் பட்டரைக் கேட்டார்களாம்; அதற்கு அவ்வாசாரியப் பெருமான் அருளிச் செய்ததாவது; ''உலகத்தில் வாக்குப் படைத்தவர்கள் பலவகைப்படுவர்; சிலர் உள்ளதை உள்ள படியே பேசுவார்கள்; சிலர் சிறந்த விஷயத்தைப் பேசத் தொடங்கினாலும் தங்கள் வாக்கின் திறமை போதாமையினால் குறைபடப் பேசுவார்கள்; சிலர் நாவீறு உடைமையினால் அற்ப விஷயங்களையும் கனக்கப்பேசுவார்கள்; இப்படிப் பேச்சில் பலவகைகள் உண்டு. பேசுகின்றவர்களின் வாக்கின் போக்கை அநுசரித்து விஷயங்கள் சிறுத்துப் போவதும் பெருத்துப் போவதும் உண்டு. திருமங்கையாழ்வாரின் நாவீறு லோக விலட்சணமாகையால்

அற்ப விஷயங்களைப் பற்றி பேசும்போதும் பெருக்காறு பெருகுமாப்போலே இருக்குமேயன்றி அவ்விஷயங்களின் சிறுமைக்குத் தக்கபடி சிறுத்திராது இவருடைய சொற்போக்கு. 'வாள்நிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள் மாதரார் வனமுலை' (பெரி.திரு.1.6:1). என்றாப் போலே பெருத்திருக்கும்; ஆகவே விஷயங்களை அற்பமென்பதில் தடையில்லை; இவருடைய வாக்கு கம்பீரமாகையால் அற்பவிஷயத்தையும் கனக்கப் பேசுகின்றது'' என்றாராம். இத்துடன் இது நிற்க.

இவன் தந்த மறுமொழியைக் கேட்ட அவன், ''நலம் அந்தம் இல்லாதோர் நாட்டிலே''[17] - வர்த்திக்கப் பெறாதே - ஆனந்தம் அளவிறந்திருப்பதான திருநாட்டிலே இருக்கப் பெறாமல், ''இல்லை கண்டீர் இன்பம்''[18] - இவ்வுலகில் சுகமே இருப்பதொன்று இல்லை என்கின்ற கொடிய உலகத்திலே நெடுங்காலம் அலமர்த்தாயே, ''பலமுந்து சீரில் படியாதே''[19] - பலனே முந்தியிருக்கின்ற திருக்குணங்களில் நாடோறும் மூழ்காமல், ''பன்மாயப் பல்பிறவியிலே''[20] - பலவகைப்பட்ட பெரிய மாயையாகிய பிரகிருதி மூலமான தேவர் முதலிய பலவகைப் பிறப்பில் பொருந்தி வாழ்ந்து நோவுபட்டாயே, ''ஈறில் இன்பத்து இருவெள்ளத்தை''[21] - இழந்து முடிவில்லாத ஆனந்தப் வெள்ளத்தை இழந்து, ''தடந்தோள் புணர் இன்ப வெள்ளத்திலே''[22] - ஆழ்ந்து - பருத்த தோள்களோடே அணைவ தாலுண்டாகும் இன்பக்கடலில் ஆழ்ந்து நித்திய துக்கிதன் ஆனாயே, ''அதனைப் பிழையெனக் கருதி''[23] - அதனைத் தப்பு என்று நினைத்து, நம்மைப் பற்றி நம்மைக் காண வேண்டும் என்று ஆசைப்பட்டபோதே வந்து முகங்காட்டப் பெற்றிலோமே ''ஆகாசத்தை நோக்கி அழுவன் தொழுவன்''[24] - நாம் இருந்த வானத்தைப் பார்த்து அழுவதும் தொழுவதுமாய், ''கூவிக் கொள்ளும் காலம் இன்னும் குறுகாதோ?''[25] - உன்னை அழைத்துக் கொள்ளும் காலம் இன்னும் அண்மையதாய் ஆகக் கூடாதோ? ''எந்நாள் யான் உன்னை இனி வந்து கூடுவன்''[26] - அடியேன் உன்னை அடையப் பெறுவது இனி என்றைக்கோ? என்பதாகக் கொண்டு நோவும்படும்படி தாழ்த்தோமே,

17. திருவாய் 2.8:4
18. மேலது 9.1:6
19. மேலது 2.8:4
20. மேலது 3.2:2
21. மேலது 2.6:8
22. பெரிய. திரு. 6.3:4
23. மேலது 1.6:1
24. திருவாய் 5.8:4
25. மேலது 6.9:9
26. மேலது 3.2:1

''துன்பக்கடல்புக்கு வைகுந்தன் என்பதோர் தோணி பெறாது உழல்கின்றேன்''[27] - (பிரிவாகிய) கடலிலே அழுந்தி வைகுந்த நாதன் என்கின்ற ஒரு தோணியை அடையப் பெறாமல் அக்கடலுக்குள் தட்டுத் தடுமாறிக் கொண்டுள்ளேன் என்று கிலேசித்து நீ அதினின்றும் கரையேறி ''நின் மா தாள் சேர்ந்து நிற்பதென்ஞான்று கொலே?[28] - (ப்ராப்யனான) உன்னுடைய திருவடிகளை அடைந்து நிலை பெற்றிருப்பது என்றைக்கோ? என்கின்ற இழவு தீர நம்மைக் கிட்டப் பெற்றாயே, ''உள்ளுள் ஆவி உலர்ந்து உலர்ந்து''[29] - உள்ளுயிரானது மிகவும் உலர்ந்து என்கின்ற தாபம் ஆறக்கூடியிரந்து குளிரப் பெற்றாயே, நம்முடைய படைப்பு முதலிய செயல்கள் சபலமாயிற்றதே, ''இழந்த பொருள் கிட்டியது போலவும்''[30] - என்கின்றபடியே நமக்குக் கிடையாதது கிடைத்ததே, உன்னுடைய வருகையாலே இந்த தேசம் நாதன் உடையதாகப் பெற்றதே, இக்கூட்டத்திற்கு நீ நாயக இரத்தினம் போன்று இருக்க, நீ கிட்டி பிரகாசம் உண்டாக்கினாயே ''நடந்த கால்கள் நொந்தவோ''[31] - உலகளந்த திருவடிகள் நொந்தனவோ? என்று ''மனத்தைக் கவரும் இனிய வார்த்தைகளாலே மகிழ்ச்சியுடன் உள்ளத்தை உருக்கிக் கொண்டு'' - என்கின்றபடியே ஏத்தாளிகளைப் போலே ஏத்தி ஒக மேக ஸ்வனத்தாலே மயில்போலே ஆலிக்கும்படி பண்ணி, ''நோயெல்லாம் பெய்ததோர் ஆக்கையிலே''[32] - எல்லா நோய்களையும் இட்டுப்பண்ணிய உடலிலே அகப்பட்டு நெடுங்காலம் நோவுபட்டு ''மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணனை''[33] - (இப்பிறவி நோய்க்கு) மருந்தை அறிபவனான நீலமணி போன்ற வடிவையுடையவனைக் கிட்டி ''உள்ள நோய்கள் எல்லாம் துரந்து''[34] - உண்டான துன்பங்களெல்லாம் தொலையப் பெற்று, ''திருவருள் மூழ்கின''[35] - திருவருளிலே இவள் (=பராங்குநாயகி) மூழ்கப் பெற்ற இவளை, நோய் விட்டுக் குளித்த புத்திரனைப் பிதா பார்த்துக் கொண்டிருக்குமாப் போலேயும், ''மாயகூத்தனுக்கு''[36] - ஆச்சரியசேஷ்டி தங்களை

27. நாச். திரு. 5:4 28. திருவாய் 3.2:2 29. மேலது 2.4:7
30. இராமா. பால. 18.53 31. திருச்சந்த 61
32. பெரி. திரு. 9.7:7 (திருவல்லவாழ்) மலைநாட்டு திருப்பதிகள் 13இல் ஒன்று.
33. பெரியாழ். திரு. 5.3:6 34. திருவாய் 2.6:4
35. மேலது 8.9:5 (குட்ட நாட்டுத்திருப்புலியூர்) - மலைநாட்டுதிருப்பதிகளுள் ஒன்று.
36. திருவாய் 8.5:1

யுடையவனுக்குப் பிழைத்த ஆழ்வாரைப் பார்த்து கொண்டிருக்குமாப்போலேயும், "விபீடணனுடைய அந்த வார்த்தையைக் கேட்டு அவனைப் பெருமாள் இன்சொல்லாலே நெஞ்சிளகப் பண்ணிக்கொண்டும்"[37] - இருக்குமாப்போலேயும் "என்னை நோக்காதொழிவதே"[38] - (மான்குட்டியின் விழி போன்ற விழியையுடைய மாதர்களின் வலையினுள் அகப்பட்டுத் துடிக்கின்ற நின்னைக்) கடாட்சியாமல் இருந்த இழவுதீரத் தாமரைக் கண்களால் நோக்கி நெடுநாள்பட்டவிடா யெல்லாம் மாற "ஒருங்கே மறிந்து கிடந்தலர்ந்த, மென்கால் கமலத்தடம் போல்"[39] - (பெருங்காற்று வீசுதலால்) ஒரு பக்கமாகச் சாய்ந்து கிடந்து மலர்ந்த மெல்லிய நாளத்தையுடைய தாமரைத் தடாகம்போல் இருக்கின்ற "பெருங்கண் மலர்ப் புண்டரீகங்களை"[40] - (பிரளய வெள்ளத்தில் அழுந்தின பூமியை எடுப்பதற்கு வராகரூபியானவர்) பெரிய செந்தாமரை பூ போன்ற திருக்கண்களை இவன் பக்கலிலே ஒருமைப்படவைத்து, "எங்கும் பக்க நோக்கறியாதே"[41] - எவ்விடத்திலும் திரும்பிப் பார்ப்பதுமின்றியே, "தாயே தந்தை யென்றும் தாரமே கிளை மக்களென்றும்"[42] - என்ற திரு மொழியில் திருமங்கையாழ்வார் மனோரதித்தாற் போலேயும், "ஆரா அமுதே அடியேன் உடலம் நின்பால் அன்பாயே"[43] - என்ற திருவாய்மொழியில் நம்மாழ்வார் மனோரதித்தாற் போலேயும் இவன் மனோரதித்த மனோர தங்களையெல்லாம் சபலமாக்கி "உருக்காட்டாதே ஒளிப் பாயோ"[44] - (என்னுடைய நெஞ்சுக்குள் மிகவும் நடையாடி விட்டு) வடிவைக் கண்ணுக்குக் காட்டாமல் ஒளிக்கின்றாயே என்கின்ற இழவுதீர, "எவனை இப்பரமபுருஷன் வரிக்கின் றானோ அவனாலேயே அடையத் தக்கவன்"[45] - என்கின்ற படியே "காசினொளியில் திகழும் வண்ணம்காட்டி"[46] - பொற்காசின் ஒளியைக் காட்டிலும் மிக விளங்குகின்ற வடி வழகைக் காட்சி "நல்கி என்னை விடான்"[47] - கருனை கொண்டு என்னை விடாதிருக்கின்றான் என்கின்றபடியே விடாமல், "சர்வசுபதானம் போன்ற இந்த ஆலிங்கனம் மகாத் மாவான இந்த மாருதிக்கு என்னால் இப்போது உரிய காலத்தில்

37. இலாமா. யுத்த. 19.7 38. திருமாலை - 36 39. திருவிருத். 42
40. மேலது 45 41. திருவாய் 42. பெரி. திரு. 1.9:1
43. திருவாய் 5.8:1 44. மேலது 6.9:5 45. கட. 1.2:23
46. பெரி. திரு. 4.9:4 47. திருவாய் 1.10:8

தரப்பட்டது''[48] - என்கின்றபடியே விட்டுவிட்டு அணைத்து, 'இக்குரங்கு கூறிய (இராமனின் வரலாறு) மனக் குழப்பமாக இருக்குமோ?!'[49] - ''மருள்தான் ஈதோ?''[50] - இதுதான் என்ன மயக்கமோ? என்கின்றபடியே நிரதிசய வியாமோகத்தைப் பண்ணி, பெரிய பிராட்டியார் திருக்கையில் காட்டிக் கொடுக்க, கம்சவதத்திற்குப் பிறகு கண்ணனைக் கண்ட தேவகிப் பிராட்டியாரைப் போலே விம்மிப் பாய்கின்ற முலையாலே உடம்பெங்கும் நனையும்படி அணைத்து, உபய விபூதி ஐசுவர்யத்தையும் கொடுக்க, ''பூவளரும் திருமகளால் அருள் பெற்று''[51] - தாமரைப் பூவில் வளர்கின்ற பெரிய பிராட்டி யாராலே அருள் செய்யப் பெற்று, மடியில் நின்றும் இழிந்து போந்து, பின்புறத்து அழகை அநுபவித்து, ''எம்பெரு மானுடைய முன்னழகைக் காட்டிலும் பின்னழகு போட்டியில் வீறுபெற்றது'' என்று அதில் முன்பு தானே நன்றாயிருக் கையாலே திரியவும் முன்னே போந்து, சௌந்தர்ய தரங்க தாடந்தாள சித்த விருத்தியாய், உத்தம் விதாஞ்சலியார் வளைய வளைய வந்து, ''முழுசி வண்டாடிய தண்டுழாயின் மொய்ம் மலர்க் கண்ணியும் மேனியஞ்சாந்து, இழுசிய கோலம் இருந்த வாறும் எங்ஙனம் சொல்லுகேன் ஓவிநல்லார், எழுதிய தாமரையன்ன கண்ணும் ஏந்தெழில் ஆகமும் தோளும் வாயும், அழகியதாம் இவர் யார்கொல் என்ன''[52] - ''வண்டுகள் (தேனிலே) முழுகிக் கூத்தாடுகின்ற குளிர்ந்த திருத்துழாயினால் செறியத் தொடுக்கப் பெற்ற பூமாலை சாத்திக் கொண்டிருந்த அழகும், சந்தனக் காப்பு சாத்திக் கொண்டிருந்த அழகும் என்ன சொல்லுவேன்! அன்றியும், திருக்கண்களும் திருமார்பும் திருத் தோள்களும் திருப்பவளமும் சித்திரம் எழுதவல்லவர்களால் எழுதப்பட்டவை போன்று எவ்வகைக் குறையும் கூறவொண் ணாதபடி அழகுவிஞ்சியிருந்தன; இப்படிப்பட்ட மகாநுபவர் யார் என்ன' ''அச்சோ ஒருவர் அழகியவா!''[53] - ஒரு பெரியவரின் சௌந்தரியத்தை என்ன சொல்லுவேன் என்று வியந்தவனாய் ''அந்தாமத்தன்பு''[54] - ''முடிச்சோதியாய்''[55] - என்ற திருவாய் மொழிகளில் நம்மாழ்வார் அநுபவித்தாற்போலே தன்னைப் பெற்ற அன்பால் வந்த செவ்வியை அநுபவித்து, ''ஒரு

48. இராம. யுத்த 1.14 49. இராம. சுந்தர. 34.24 50. திருவாய் 8.7:3
51. பெரி.திரு.11.6:10 52. பெரி. திரு. 2.8:7 காஞ்சி - அட்டபுயகரம் - பதிகம்
53. மேலது 9.2:1 (திருநாகை பற்றிய திருமொழி) 54. திருவாய் 2.5:1
55. மேலது 3.1 (திருமாலிருஞ்சோலை அழகரைப் பற்றியது)

பொருளை அநுபவிக்கும்போது வேறொன்றைப் பார்ப்ப தில்லையோ, வேறொன்றைக் கேட்பதில்லையோ வேறொன்றை அறிவதில்லையோ அதுதான்பெரிது''[56] - என்கின்றபடியே புறம்பொன்றில் நெஞ்சு செல்லாமல், ''(முக்தன் அனைத்தையும் எம்பெருமானுடைய விபூதியாகப் பார்ப்பதால்) 'ஹாவு ஹாவு ஹாவு' என்று மகிழ்கின்றான். ''நானே பரமான்மாவுக்குப் போக்கியமான அன்னம் (உணவு) எனப் பலமுறை வாய்வெருவு கின்றான்;''[57]-என்றும், ''அல்லிமாமலராள் தன்னொடும் அடியேன் கண்டு கொண்டு அல்லல் தீர்ந்தேனே''[58] - பிராட்டியோடுகூட அடியேன் சேவித்து துன்பங்கள் தொலையப் பெற்றேன் என்றும், ''ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக், கண்ட சதிர் கண்டொழிந்தேன் அடைந்தேன் உன் திருவடியே''[59] - அழகிய வளையல்களை யுடைவளாகிய பெரிய பிராட்டியாரும் அவளுடைய நாயகனான நீயுமே களித்து வாழ்கின்ற அழகிய இருப்பை இப்போது காணப்பெற்று உன் திருவடிகளை அடையவும் பெற்றேன் என்றும் ''இசைவித் தென்னை உன் நாளிணைக்கீழ் இருந்தும் அம்மானே''[60] - நெடுநாள் விமுகனாயிருந்த அடியேனை அடிமைக்கு இசையும் படி செய்து உனது இணைத் தாமரையடிகளின் கீழே தங்கும்படிச் செய்தருளின சுவாமியே என்றும், ''பிறந்தும் செத்தும் நின்றிடறும் பேதைமை தீர்ந்தொழிந் தேன்''[61]- பிறப்பதும் இறப்பதும் ஆக இருந்து படுகின்ற அஞ்ஞான சம்சாரத்தைத் தவிர்த்துக் கொள்ளப் பெற்றேன் என்றும் என்று பிரீதிக்குப் போக்குவிட்டு வாயாரப் புகழ, ஸ்ரீவைகுந்தநாதனும் ''வானாடு அமரும் குளிர்விழி களாலே''[62] - பரமபதம் ஆனந்தம் அடையும்படியான குளிர்ந்த விழிகளாலே கடாட்சித்து ஸஸ்மிதமாக ஸநிக்த கம்பீரமதுரமான பேச்சாலே ''முகப்பே கூவி''[63] - திரு முன்பே அழைத்து, ''நின் செம்மா பாதபற்புத்தலை சேர்த்து''[64] - சிவந்த மேன்மை தங்கிய திருவடித் தாமரைகளைத் தலை சேர்த்து என்று இவன் விரும்பியபடியே ''மலர்கள் பிடிக்கும்''[65] - (வடிவழகில் ஒப்பற்ற) பெரிய பிராட்டியார் வருடுகின்ற ''கமலம் அன்ன குரைகழல்களாலே''[66] - தாமரை மலர் போன்ற ஒலிக்கின்ற வீரக்கழல்களாலே உத்தமாங்கத்தை

56. சாந்தோக்யம் 7.2:3
57. தைத். பிருகு.
58. பெரி. திரு. 4.3:6
59. திருவாய் 4.9:10
60. மேலது 5.8:9
61. மேலது 4.4:7
62. திருவிருத். 63
63. திருவாய் 8.5:9
64. மேலது 2.9:1
65. மேலது 9.2:10
66. மேலது 4.3:6

அலங்கரித்து, ''தன்தாளின் கீழ்ச் சேர்த்து''[67] - தன்திருவடிகளின் கீழே சேர்த்துக் கொண்டு நித்திய கைங்கரியத்தில் நியோகிக்க ''தொண்டே செய்து என்றும் தொழுது வழியொழுகப் பெற்று''[68] - பரபக்தி முதலியவற்றைப் பண்ணி நித்திய கைங்கரியத்தைச் செய்து அதுவே யாத்திரை யாகச் சொல்லும்படி ''வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்''[69] - குற்றமற்ற கைங்கரியங் களைப் பண்ணக்கடவோம் என்கின்ற ஆசையின் மிகுதியாலே நானா தேகங்களைப் பரிக்ரகித்து அசேஷசேஷ விருத்திகளிலும் அந்வயித்து அஸ்தா நரட்சாவ்யஸநிகளான நித்திய சூரிகளோடே கூடச் ''சூழ்ந்திருந்து''[70] - சுற்றும் சூழ்ந்து கொண்டு மங்களா சாசனம் பண்ணி ''சுழிபட்டோடும் சுடர்சோதி வெள்ளத்து இன்புற்றிருந்து''[71] - சுழித்து ஓடுகின்ற சுடர்ச்சோதி வெள்ளம் என்னும்படியான பரமபதத்திலே ஆனந்த வாழ்ச்சியாக இருக்கப் பெற்று என்கின்றபடியே அம்ரசாகராந்தர் நிமக்க சர்வாவயனாய் யாவத் காலம் இருக்கும்.

67. மேலது 7.5:10 *68. திருவாய் 10.4:9* *69. மேலது 3.3:1*
70. திருப்பல்லாண்டு - 12 *71. திருவாய் 8.10:5*

அர்ச்சிராதி

பரமபத சோபானம் - ஐந்தாம் பகுதி

இயல் - 5

அர்ச்சிராதி

பரமபத சோபானம் - ஐந்தாம் பகுதி

அர்ச்சிராதியை ஒத்த கருத்துடைய 'பரமபத சோபானம்' என்ற ஒரு பிரபந்தத்தை அருளியுள்ளார் சுவாமி வேதாந்த தேசிகர். இதனை மோட்சமாகிய மேன்மாடத்திற்குச் செல்லும் வழிப்படிகளாகக் காட்டுகின்றார். **"வானேறும் வழிப்படிகள்"** என்பது அவர்தம் திருவாக்கு. சோபானம் - படி, மணிப்பிரவாள நடையில் அமைந்தது இப்பிரபந்தம். இதிலடங்கிய 22 பாசுரங்களைத் தொகுத்து அதே பெயரில் தோன்றியது இப் பிரபந்தம். மிக்க உயரத்திலுள்ள ஓர் இடத்தை அடை வதற்குப் படிகளை அமைத்து - படிகள் அமைந்த ஏணியைக் கொண்டு - ஏறிச் செல்லுதல் உலக நடைமுறை. அது போல பரமபதம் என்னும் உயர்ந்த இடத்தை அடைவதற்கு ஒன்பது பொருள் களைப் படிகளாகக் கற்பித்து விளக்குகின்றார். தூப்புல் புலவர். அப்படிகளாவன : (1) தத்துவங்கள் முதலியவற்றை வகுத்து அறிதல், (2) மனந்தளர்தல், (3) உலக சுகங்களில் ஆசையறுதல், (4) நாம் செய்த பாவங்களின் மிகுதியால் இனிவரக் கிடக்கும் நரகானுபவம் முதலிய துன்பங்களுக்கு அஞ்சுதல், (5) எம்பெருமான் வீடுபேற்றினை அருள்வதற்குக் காரணமான வழியைக் கடைப்பிடித்தல், (6) இந்த உடலினின்றும் ஆன்மா வெளியேறுதல், (7) அர்ச்சிராதி மார்க்கத்தில் செல்லுதல், (8) வைகுந்தம் என்னும் திவ்விய உலகினை அடைதல், (9) அங்கு எல்லாம் வல்ல இறைவனைக் கண்ணாரக் கண்டு களித்து அநுபவித்து அந்தப் பேரின்பத்தில் மூழ்கிக் கிடத்தல்.

இந்தத் தத்துவங்கள் யாவும் இடைப்பிள்ளையாகி வந்த எம்பெருமானால் உரைக்கப்பெற்றவையாகும். இவற்றின் கருத்தை எம்பெருமானார் (இராமநுசர்) தமது மாபாஷ்யத்தில் தெளிவாக விளக்கியுள்ளார். இராமாநுசருடைய திருமடைப்

பள்ளியில் அந்தரங்கத் தொண்டு செய்து எல்லாப் பொருள் களையும் ஐயம் திரிபறப் பெற்றவர் கிடாம்பி ஆச்சான். அவர் வழியாக வந்தது இவண் கூறப்பெறும் சம்பிரதாய வழி. எனவே,

மடைப்பள்ளி வந்தமணம் எங்கள்
வார்த்தையுள் மன்னியதே[1]

என்று உள்குழைந்து பணிவன்புடன் உரைப்பார் தூப்புல் புலவர். திருவரங்கத்தில் எம்பெருமானாரின் திருமடைப் பள்ளியில் அடிமைத் தொழில் செய்தமையால் கிடாம்பியாச்சான் 'மடைப்பள்ளியாச்சான்' என்ற திருநாமத்தாலும் வழங்கப் பெறுவர்.

வானேறும் வழிப்படிகள் : பரமபதம் செல்வதற்கு தேசிகர் கூறும் ''வானேறும் வழிப்படிகள்'' - அர்ச்சிராதிகதி - ஒவ்வொன் றையும் விளக்குவோம்.

முதற்படி : 'விவேகம்' என்பது. தத்துவங்களைப் பற்றி விபரீத ஞானத்தைப் பெற்று கொடிய வினைகளை மேன்மேலும் செய்து அஞ்ஞானமாகிய இருளில் மூழ்கிப் புலன்களால் துய்க்கப் பெறும் இன்பம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இவ்வுலக வாழ்வாம் பெருஞ் சேற்றில் மூழ்கிக்கிடக்கும் சீவான்மா வேதவேதாந்தங்களின் உபதேசத்தால் விவேகத்தைப் பெறு கின்றது. இதனால் சீவான்மா **சித்து, அசித்து, ஈசுவரன்** என்ற மூன்று தத்துவங்களின் வேற்றுமைகளைப் பற்றிய தெளிவான அறிவைப் பெறுகின்றது. மேலும், அது சீவான்மா பரமான்மா தொடர்பை அறிகின்றது; நான் அடிமை என்பதையும், இறைவன் ஆண்டான் என்பதையும், இறைவனுடைய இன்பத்திற்காகவே தான் நிலை பெற்றிருப்பதையும் உணர்கின்றது. இதனைத் தேசிகர்,

அருவுருவா னவைஅனைத்தும் அறிவா ரேனும்,
அருங்கலைகள் கற்றுரைக்க வல்லா ரேனும்,
தருமவழி அழியாமல் காப்பா ரேனும்,
தனிமறையின் தாற்பரியம் தருவா ரேனும்,
இருவினையின் ஒழுக்கத்தால் ஏவல்ஓராது
இங்கேநம் சிறைஇருந்த ஈனம் தீர்க்கும்

1. தே.பி. 133

திருமகளார் பிரியாத தேவன் திண்ணம்
தேறாதார் திண்படியில் ஏறா தாரே.[2]
(தாற்பரியம் - கருத்து)

என்று கூறுவர். எம்பெருமானாகிய திருமகள் - கேள்வனது (இலக்குமி நாராயணனது) சொரூபம், சுபாவம் முதலியவற்றை அறியாவிடில் வீட்டுலகம் செல்லும் திடமான படியில் ஏற முடியாது. ஆன்மா சம்சாரத்தில் அழுந்திக் கிடப்பதை அது சிறையில் கிடப்பதாகக் கூறுகின்றார் ஆசிரியர்.

இரண்டாவது படி : சீவர்கள் இதுகாறும் தம் வாணாளை வீணாகக் கழித்தமைக்கு வருந்துதலாகும். எம்பெருமான் சாத்திரங்கள் வாயிலாக இட்டகட்டளையை அறிவின்மையால் மீறி நடப்பவர்கள் கொடிய நரகங்களை அநுபவிப்பதை ஆராய்ந்து பார்த்து இதுகாறும் தாமும் இவ்வுலக வாழ்க்கையில் உழன்றமையை ஆராய்ந்து பார்த்து, அவ்வாழ்க்கையை வெறுத்து கழிந்த நிலைமைக்கு வெட்கி வருந்துவர்; பின் வேதாந்தங்களில் கூறியுள்ள வழியைக் கடைப் பிடிக்க விரைவர். எடுத்துக்காட்டாகத் திருமங்கையாழ்வார்.

மறந்தேன் உன்னைமுன்னம்;
மறந்தமதி இல்மனத்தால்
இறந்தேன் எத்தனையும்;
அதனால் இடும் பைக்குழியில்
பிறந்தேன் யெய்த்தொழிந்தேன்[3]

(இறந்தேன் - மிகவும் கெட்டேன்; இடும்பை - துன்பம்; எய்த்து - இளைத்து.)

என்று தன் நிலைக்கு வருந்திக் கூறுவதைக் காணலாம். இவ்வுலக இன்பத்தின் சிறுமையைத் தேசிகர்,

வான்பட்ட மன்னிருளின் மயங்கும் ஆறும்
மறித்துஒருகால் எனையூழி சென்றால் அன்றோர்
ஊன்பட்ட உடல்ஆழி வினையொ ழுக்கில்
ஒருகரையும் காணாதே ஒழுகும் ஆறும்
தேன்பட்ட விடம்போலத் தித்திக் கின்ற
சிறுபயனே உறுபயன்என்று அருந்தும்[4] ஆறும்

2. தே.பி. 135 3. பெரி. திரு. 6.2:2

4. இதனை 'புசிக்கும்' என்று கூறும் சைவ சித்தாந்தம்.

தான்பட்ட படியிந்நேர் தானே கண்டு
தளர்ந்திடுமேல் வளர்திடுமே தக்க ஆறே. [5]

என்று குறிப்பிடுவர். சீவன் தன் நிலையைத் தானே ஆராய்ந்து பார்த்து மனந்தளர்ந்தால், தக்க வழியைக் கடைப்பிடிக்க நேரிடும்.

மூன்றாவது படி : உலக வாழ்க்கையிலுள்ள ஆசையை அறுத்தலாகும் இது. இந்தக் கருமபூமியில் மிகச் சிறந்தவராக நாம் மதிக்கும் பலர் துய்க்கும் பலன் முழுவதும் இன்பமாகவே இருப்பதில்லை; அதன் நடுவில் துன்பமும் கலந்தே காணப் பெறுகின்றது. நான்முகன் தன் உலகில் நம்மால் அளவிட முடியாத ஆனந்தத்தை அநுபவிப்பான் எனக் கருதுகின்றோம். ஆனால் அவன் மதுகைடவர்களால்[5] பட்ட துன்பம் சொல்லி முடியாது. இதனை ஆராய்ந்து பார்ப்போருக்கு இந்த உலக வாழ்வில் வெறுப்புத் தட்டும். திருமங்கையாழ்வார் திரு விண்ணகர் திருமொழியில் ஒரு தடவைக்கு மேல் ஒன்பது தடவையாக,

வேண்டேன் மனைவாழ்க்கையை
விண்ணகர் மேயவனே[7]

என்று மனம் வெறுத்துக் கூறுதைக் காணலாம்.

தந்திரங்கள் அளவிலராய்த் தனத்தான் மிக்க
தார்வேந்தர் தொழவையும் ஆண்டார் மாண்டார்;
சந்திரனும் சூரியனும் வீயும் காலம்
தாரகையும் வடமும்அற்றுத் தனிவான் ஆளும்
இந்திரனும் ஏறுஉயர்ந்த ஈசன் தானும்
ஈரிரண்டு முகத்தானும் இல்லா அந்நாள்
நந்திருமால் நிலை கண்டார் நாகம் எல்லாம்
நரகென்று நிற்பதமே நாடு வாரே[8]

(தந்திரங்கள் - சேனைகள்; தார் - மாலை; தாரகை - நட்சத்திரம்; வடம் - வரிசை; ஏறு - இடபம்; நாகம் - உலகம்; நல்பதம் - வைகுந்தம்)

5. தே.பி. 137

6. மது - கைடவன் என்னும் இரண்டு அசுரர்கள் நான்முகனிடமிருந்து நான்மறைகளை அபகரித்துச் சென்றதால் நான் முகன் எம்பெருமானிடம் செயலற்றுப் புலம்ப, அவனும் அவ்வசுரர்களைக் கொன்று மறைகளை மீட்டுத் தந்தான் என்பது புராண வரலாறு.

7. பெரி. திரு. 6.1

8. தே. பி. 139. காலம் (ஆகிய) இல்லா அந்நாள் என்று அந்வயித்துப் பொருள் கொள்க.

என்று தேசிகர் சுவர்க்கமும் நரகத்தை யொத்தது என்று கூறுவதை அறியலாம். மகாப்பிரளத்திற்குப் பிறகு அழியாமல் நிற்பது பரமபதம் ஒன்றேயாகும். அறிஞர்கள் இந்த உண்மையை உணர்ந்து இவ்வுலக இன்பத்தை வெறுத்தொக்குவர்; அதன் மேலுள்ள ஆசையை வேருடன் களைய முற்படுவர்.[9]

நான்காவது படி : சீவர்கள் வினைப் பயனுக்கு அஞ்சுதல் ஆகும். இவ்வுலகப் பற்றிலிருந்து விடுபடுவதற்குச் சாதனமான சிறந்த தர்மங்கள் நிவ்ருத்தித்தர்மங்கள் (நீக்கத் தன்மைகள்) எனப்படும். இவற்றை மேற்கொள்வோர் முமுட்சுகளுடன் கலந்து பரிமாறித் தீய வழிகளினின்றும் விலகுவர். இங்ஙனம் விலகி நல்வழியில் ஈடுபடுவதைத் தேசிகர், தர்மங்கள் நிவ்ருத்தித் தர்மங்கள் (நீக்கத் தன்மைகள்) என்று குறிப்பிடுவர். இவற்றை மேற்கொள்வோர் முமுட்சுகளுடன் கலந்து பரிமாறித் தீய வழிகளினின்றும் விலகுவர். இங்ஙனம் விலகி நல்வழியில் ஈடுபடுவதைத் தேசிகர்.

வந்தனபோல் வருவனவும் அனந்தம் ஆகி
　　மாளாத துயர் தருவல் வினைநெ ருப்புக்(கு)
இந்தனமாய் எண்ணிறந்த காலம் எல்லாம்
　　இன்னமும்இப் பவக்குழிக்கே இழியா வண்ணம்
வெந்ததொரு குழவியைநற் குமர னாக்கும்[10]
　　வெறித்துளவ வித்தகனார் விதியே கொண்டார்
பந்தனமாம் அவையனைத்தும் பாறு கைக்குப்
　　பழமறையின் பரமநெறி பயிலு வாரே. [11]

(அனந்தம் - அளவிறந்தவை; இந்தனம் - விறகு; பவம் - சம்சாரம்; இழியா - விழுந்து துன்புறாமல்; வெறி - மணம்; விதி - உபாயம் (பக்தி, பிரபத்தி), பந்தனம் - பிணிக்கும்; பாறுகை - அழிதல்; பயிலுவார் - ஈடுபடுவார்)

என்று குறிப்பிடுவர். வினைகளாகிய பெரிய நெருப்பு மேன்மேலும் துன்பத்தைத் தந்து கொண்டே சேதநர்களை

9. திருமங்கையாழ்வார் உலகப் பிரளயத்தைக் கூறும் பெரி. திரு. 11.6 ஐ இவ்விடத்தில் அநுசந்திக்கத்தக்கது.

10. மாபாரதப் போரில் துரோணருடைய மகன் அசுவத்தாமனால் பிரயோகிக்கப் பெற்ற அபாண்டவத்திரத்தால் உத்தரையின் கருப்பத்தில் வெந்து கரியாகிய குழந்தையை (இதுதான் பரீட்சித்தரான மன்னர்) கண்ணன் அழகிய அரசகுமாரனாக்கிய வரலாறு ஈண்டுக் குறிப்பிட்டவாறு. பெரியாழ்வாரும் இந்த வரலாற்றை ''உத்தரைதன் சிறுவனையும் உய்யக் கொண்ட உயிராளன்'' (பெரியாழ். திரு. 4.9:6) என்று குறிப்பிடுவர்.

11. தே.பி. 141

விறகாகக் கொண்டு சம்சாரமாகிய படுகுழியில் எரித்துக் கொண்டிருப்பதைக் காணும் கூர்த்த மதியினர் இந்நிலைக்கு அஞ்சி பக்தி, பிரபத்தி ஆகியவற்றுள் ஒன்றில் ஈடுபடுவர் என்பதை ஈண்டுக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

ஐந்தாவது படி: கருக்குழியில் வதிதல் முதலிய சம்சாரத் துக்கங்களை ஒழிக்கக் கருதும் அடியார்கள் மேன்மேலும் பகவதநுபவம் வளர்ந்து வரக் கூடிய பக்தி யோகத்தைக் கடைப் பிடிப்பர். அதற்கு ஆற்றலற்றவர்கள், எம்பெருமானுடைய திருவடிகளைப் பற்றும் சரணாகதியை மேற் கொள்வர். இவ்வாறு உபாயத்தைச் செய்து முடித்த பின்னர் எம்பெருமான் தமக்கு நன்மைகளை அருளுவான் என்று நம்பி அவனது கருணையை நோக்கி நிற்பதுவே இந்தப் படியாகும்.

இவ்விடத்தில் பேயாழ்வாரின்,

வாழும் வகையறிந்தேன் மைபோல் நெடுவரைவாய்
தாழும் அருவிபோல் தார்கிடப்ப - சூழும்
திருமா மணிவண்ணன் செங்கண்மால் எங்கள்
பெருமான் அடிசேரப் பெற்று (மூன் திருவந்.59)

(வாழும் வகை - உய்யும் வழி; வரை - மலை; தார் - மாலை; திரு - இலக்குமி, அடி - திருவடி)

என்ற பாசுரம் அநுசந்தித்தல்தகும். ''எம்பெருமானின் திருவடி களை நான் சேரப் பெற்றதனால் 'இதுவே நமக்கு உய்யும் வழி' என்று துணிந்தேன்'' என்கின்றார் ஆழ்வார்.

பிரபத்தியால் சகல பாவங்களும் நீங்குவதைத் தேசிகர்,

முன்செய்த வினைத்திரளின் முளைத்தது அன்றி
முற்றுள்ள முதல் அரிந்து முளைத்த கூற்றில்
தன்செய்த திருவருளால் இசைவு பார்த்துத்
தழல்சேர்ந்த தூலமெனத் தானே தீர்த்துப்
பின்செய்த வினையில்நினைவு ஒன்றாது ஒன்றும்
பிழைபொறுத்து வேறுளது விரகால் மாற்றும்
என்செய்ய தாமரைக்கண் பெருமான் எண்ணம்
எண்ணாதார் எட்டுஇரண்டும் எண்ணா தாரே[12]

12. தே.பி. 143

(வினைத்திரள் - பாவக்கூட்டம்; முளைத்தது - பலன் கொடுக்கத் தொடங்கியது; முளைத்த கூறு - பலன் கொடுக்கத் தொடங்கிய பகுதி; திருவருள் - கருணை; இசைவு - அங்கீகாரம்; தழல் - நெருப்பு; தூலம் - பஞ்சு; பின் செய்த - பிரபத்திக்குப் பின் செய்த; நினைவு ஒன்றாது - தெரியாமல், பிழை - பாவம்; எட்டு - திருமந்திரம்; இரண்டு - துவயம்; சரமசுலோகம்)

என்று கூறுவர். நம்முடைய வினைகள் சஞ்சிதம் (பழவினை), பிராரப்தம் (நுகர்வினை), என்று இருவகைப்படும். பின் ஒரு காலத்தில் பலன் கொடுப்பதற்காகத் தனியாகக் குவிந்து கிடப்பது 'சஞ்சிதம்' எனப்படும். பலன் கொடுக்கத் தொடங்கிய பகுதி 'பிராரப்தம்' என்று பேசப்பெறும். பக்தியோகம் சஞ்சித கர்மங்களை மட்டிலும் போக்கும். பிரபத்தி சஞ்சிதத்தைப் போக்கு வதுடன் பிராரப்தத்தில் இவ்வுடல் உள்ள வரையில் பலனை அநுபவிக்க வேண்டிய கருமங்களைத் தவிர, எஞ்சியுள்ள வற்றையும் அனல் பஞ்சை எரிப்பது போல் நீக்குகின்றது. பிரபத்திக்குப்பிறகு அறியாமல் செய்யும் பாவங்களை இவனிடம் சேராதபடி நீக்கிவிடுகின்றது. பிரபத்திக்குப் பிறகு ஆபத்து இல்லாதபோது அறிந்து செய்யும் (மனப்பூர்வமாகச் செய்யும்) பாவங்கள் பின் செய்யும் பிராயச்சித்தத்தால் நசித்துப் போகும். **அவைகழியும் முறை :** பாவம் செய்ய நேரிட்டதற்கு வருந்திப் பச்சாதாபம் அடைவதால் கால் பங்கும், பிறகு பாவம் செய்யாது நிறுத்திவிடுவதால் மற்றொரு கால் பங்கும், பிராயச்சித்தம் செய்ய முயல்வதால் பிறிதொரு கால் பங்கும், பிராயச்சித்தம் செய்து முடிப்பதால் எஞ்சியுள்ள கால் பங்கும் ஆக, பாவம் முழுவதும் தீர்கின்றது. பிராயச்சித்தங்களில் சிறந்தது மறுபடியும் பிரபத்தி செய்வதே; இதுவே 'பிராயச்சித்தப் பிரபத்தி' எனப்படும். பிராயச் சித்தம் செய்யாத முரடரும், இவ்வுலகிலேயே இலகுவான தண்டனையைப் பெற்றுப் பாவங்களைப் போக்குவர். ஆக, எவ்வகையிலும் பிரபந்தனுக்கு நரகமோ மறுபிறவியோ இல்லை. இந்த உடல் உள்ளவரையிலும் உள்ள காலதாமதத்தைக் கூடப் பொறுக்காமல் உடனே முக்தி கொண்டு என்பவனுக்கு உடனே சகல கர்மங்களையும் போக்கிப் பயனைத் தருகின்றது. இத்தகைய பெருமை பக்தியோகத்திற்கு இல்லை. இங்ஙனம் பிரபத்தியின் வாயிலாக பிரபந்நனுடைய சகல பாவங்களையும் ஒழித்துப் பிரபந்நனுக்கு எம்பெருமான் திருவருள் புரிகின்றான். இங்ஙனம் திருவருள் புரியும் எம்பெருமானின் குளிர்ந்த திருவுள்ளப் பாங்கை அறியாதவர்கள் இரகசியத்தின் (மூன்று மந்திரங்களின் பொருளை) பொருளை அறியாதவர்களாவர்.

ஆறாவது படி : இந்தக்கர்ம உடலுக்குள் இருக்கும் சிவான்மாவுக்கு உறையினுள் செருகிய வாளை உவமானமாக வழங்குதுவண்டு. உறையினுள் கிடக்கும் வாள் ஆற்றலற்றுத் தன் செயலை நிறைவேற்றாதிருப்பது போல் சீவான்மாவும் வினை யினால் வந்த இந்த உடலுக்குள் இருக்கும் வரையிலும் தனக்கு இயல்பாகவுள்ள ஞானம் சுருங்கப்பெற்றுத் தனக்குரிய இறை யடிமையைச் செய்ய ஆற்றலின்றிக் கிடக்கும். உபாயத்தைக் கடைப்பிடித்த சீவான்மாவுக்கு எம்பெருமான் வீடுபேறு அளிக்க திருவுள்ளங்கொண்டு, இவ்வுடலாகிய சிறையினின்னறும் அவ்வான்மாவை வெளியேற்றுகின்றான். இதனை,

சரணம் ஆகும்தன தாள்அடைந் தார்க்குஎல்லாம்
மரணம் ஆனால்வைகுந் தம்கொடுக் கும்பிரான்[13]

என்று நம்மாழ்வார் திருக்கண்ணபுரத்துத் திருவாய் மொழியில் கூறுவதைக் காணலாம். மரணம் ஏற்படுங்களால் சீவனுடைய செவி, வாய், கண், மூக்கு, உடல் ஆகிய ஞானேந்திரியங் களையும், வாய், கை, கால், எருவாய், கருவாய் ஆகிய கர்மேந்திரியங்களையும் மனத்துடன் சேர்க்கின்றான். பிறகு அந்த மனத்தைப் பிராணவாயுவில்[14] ஒன்று கூட்டுகின்றான். அதன் பின்னர் அந்தப் பிராணவாயுவை சீவான்மாவிடத்துச் சேர்க்கின் றான். இந்த நிலையை அடைந்த சீவான்மாவை நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐந்து பூதங்களுடன் கூட்டுகின்றான். இதன் பிறகு இதனால் சீவான்மாவுக்கு உண்டான களைப்பு நீங்குமாறு அதனைத் தன்னோடு அணைத்துக் கொள்ளு கின்றான். பின் பதினொரு துவாரம் உள்ளதாய்,[15] இதுகாறும் சீவனுக்குத் துன்பத்தைத் தந்து நின்ற உடலாகிய சிறையினின்றும் அர்ச்சிராதி மார்க்கத்திற்கு மூன் வாயிலாகிய தலையின் உச்சியிலுள்ள பிரம்மரந்திரத்தின் வழியாய் சீவான்மாவை வெளியேற்றுகின்றான்[16]. இதுவே ஆறாவதுபடியாகும்.

13. திருவாய் 9.10:5 (திருக்கண்ணபுரம்)

14. உடலும் இந்திரியங்களும் நிலைத்திருக்கப் பிராணவாயு காரணமாயிருந்தலால் மூதன்மை பெற்றிருப்பது பற்றி மூக்கிய பிராணன் எனப்படும் என்றும் உபநிடதம் கூறும்.

15. கண் 2, காது 2, மூக்கு 2, வாய் 1, எருவாய்1, சிறுநீர் வாய் 1, கொப்பூழ் 1, உச்சித் துவாரம் 1 ஆக பதினொன்று.

16. தே.பி. 145

ஏழாவது படி: அர்ச்சிராதி மார்க்கத்தில் செல்லுவதல் இந்தப் படியாகும். சீவனுடைய உடல் ஐந்து பூதங்களாலாகியது. அவனது முதுகின் மேற்புறத்தில் தூண்போன்ற மூன்று எலும்புகள் ஒன்று கூடி நிற்கின்றன. அவை 'திரிஸ் தூணம்' என்ற பெயரால் வழங்கப் பெறும். மரண காலத்தில் ஈசுவரன் அவற்றைக் கடைந்து அங்கிருந்து ஐந்து பூதங்களின் சூக்குமமான கூறினை எடுத்து அதில் சீவனைச் சேர்க்கின்றான். இங்ஙனம் கடைதலே 'திரிஸ்தூண க்ஷேபம்' எனப்படும். இவ்வாறு கடையும்போது சீவனுக்கு மிக்க வேதனை உண்டாகும். இந்த வேதனை நீங்குவதற்காக அந்தச் சீவனை ஈசுவரன் தன் மீது அணைத்துக் கொள்ளுகின்றான்.[17]

அதன் பின்னர் வீடுபேற்றிற்கு உரியவனான சீவன் தூல உடலினின்று புறப்பட்டதும்[18] இவனை அக்கினி தேவதை, பசுவின் தேவதை, சுக்கிலபட்ச தேவதை, உத்தராயண தேவதை, வர்ஷ தேவதை, வாயு தேவதை, சூரியன், சந்திரன், மின்னலின் தேவதை, வருணன், இந்திரன், பிரஜாபதி முதலிய ஆதி வாகிகர்கள் எதிர் சென்று வரவேற்றுத் தங்கள் எல்லை வரையில் கொண்டு போய் விடுவர். இவ்வாறு பிரகிருதி மண்டலத்தைக் கடந்து சென்றவர்கள் பின்னர் சம்சாரமாகிய நரகத்தில் துன்புறார். வழியில் தேவதைகளால் செய்யப் பெறும் பணிவிடைகளால் சம்சாரத்தில் அநுபவித்த துன்பங்கள் நீங்கி மகிழ்ச்சி அடைகின்றான் சீவன். ''வானேறும் வழிகண்டோம் மகிழ்ந்திட்டோமே''[19] என்று குறிப்பர் தூப்புல் ஆசாரியப் பெருமான்.

எட்டாவது படி : சீவர்கள் வைகுந்தத்தை அடைதல் இந்தப்படியாகும். சீவர்கள் அர்ச்சிராதியால் சென்று விரஜை என்னும் நதியைக் கடந்து வைகுந்தத்தை அடைவர்.

பண்டையிரு வினையாற்றில் படிந்து பாரம்
காணாதே யொழுகியநாம் பாக்கி யத்தால்
வண்டமரு மலர்மாதர் விளங்க வான்சேர்
வைசயந்தி மணிவில்லாய் விளங்க வான்சேர்
கொண்டல்அருள் மழைபொழிய வந்தது ஒப்பாம்
குளிர்ந்துதெளிந்து அமுதாய விரசை யாற்றைக்

17. இந்த அம்சங்கள் மரணம் அடையும் அனைவருக்கும் பொதுவாகும்.
18. ஈசுவரன் சீவனுடைய உடலில் அந்தர்யாமியாய் இருப்பதனால் பிரம்மத்திற்கு இடமாகிய இந்த உடல் ''பிரம்மபுரம்'' எனப்படும் என்று உபநிடதம் கூறும்.
19. தே.பி. 147

கண்டணுகிக் கருத்தாலே கடந்து மீளாக்
கரைகண்டோர்[20]

(பண்டை - அநாதியான; பாரம் - கரை; வண்டமரும் மலர் மாதர் - பெரிய பிராட்டியார்)

என்று குறிப்பிடுவர். அநாதிகாலமாகப் புண்ணிய பாவங்கள் என்னும் வினைகட்கு வசப்பட்டு சம்சாரத்தில் அல்லலுற்ற பிரபந்நர்களான சீவர்கள் அர்ச்சிராதிகதியில் சென்று விரஜை யாற்றைத் தம் சங்கல்பத்தால் கடந்து வைகுண்டத்தை அடைவார்கள். இப்பாசுரத்தில் பரமபதத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானை வானத்திலுள்ள முகிலாகவும், பிராட்டியை மின்னலாகவும், பன்னிற மலர்களாலான 'வைஜயந்தி' என்னும் வனமாலையைப் பன்னிறத்துடன் தோன்றும் வான வில்லாகவும், எம்பெருமானது கருணை வெள்ளத்தை மழை நீர்த் தாரையாகவும், விரஜை நதியை அதனால் பெருகிய அமுதமாகிய ஆறாகவும் வருணிக்கப் பெற்றுள்ள கற்பனை நயம் அநுபவிக்கத் தக்கது.

ஒன்பதாவது படி : வைகுந்தத்தில் சீவர்கள் எம்பெருமானைக் கண்ணாரக் கண்டு களித்து, அநுபவித்து அந்த ஆனந்த வெள்ளத்தில் மூழ்கிக்கிடத்தல் இப்படியில் அமைகின்றது. அந்தப் பேரின்பம் ''தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்திக்கும்.''[21] இது நாம் அறிந்த உவமைகள். இதற்கு உவமை சொல்ல முடியாத அளவு இருக்கும். அங்கு,

கண்கள் சிவந்து பெரியவாய்,
வாயும்சிவந்து கனிந்து உள்ளே
வெண்பல் இலகு சுடர்இலகு
விலகு மகர குண்டலத்தன்
கொண்டல் வண்ணன்; சுடர்முடியன்
நான்கு தோளன் குனிசார்ங்கன்
ஒண்சங்(கு) கதைவாள் ஆழியான்[22]

என்ற திவ்விய மங்கள விக்கிரகத்துடன் ''அகலகில்லேன் இறையும்''[23] என்றிருக்கும் பெரிய பிராட்டி, பூமிப்பிராட்டி, நீளா தேவி இவர்களுடன் எழுந்தருளியிருக்கும் வைகுண்டநாதனை நித்தியர் முக்தர்களுடன் சேர்ந்து சாமகானத்தையும் ஆழ்வார்

20. தே.பி. 149.
21. திருவாய் 8.8:4
22. மேலது 8.8:1
23. மேலது 6.10:10

பாசுரங்களையும் பாடி அவனை எந்நாளும் சீவர்கள் ஏத்தி அநுபவிப்பர். இதனை வேதாந்தம் 'பரிபூரண பிரம்மாநுபவம்' என்று குறிக்கும்.[24] இந்தப் பேரின்ப நிலையை நமது அநுபவத்தால் கூறும் எந்த உவமையாலும் சரியாக விளக்கி உரைத்தல் இயலாது.

பரமபதத்தில் சீவன் நிலை : முக்தி நிலையில் சீவான் மாவுக்குப் பசி, நீர்வேட்கை முதலியன இல்லை. பாவம், முதுமை, துன்பம், இறப்பு முதலியன அதனை நெருங்கா. முத்தியடைந்த சீவனின் நிலையை ஆறு உவமைகளால் விளக்குவர் தேசிகர். இராகு என்னும் பாம்பு பற்றிவிட்ட பிறகு கதிரவனின் ஒளி அதிகமாகும். அழுக்கடைந்து நின்ற தரளம் தூய்மை செய்யப் பெற்ற பிறகு தன் இயல்பான ஒளியுடன் ஒளிரும். கடலில் சென்ற கலம் திசை தப்பிச் சென்று கரைசேர்ந்த வுடன் அதிலுள்ள பயணிகள் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. காட்டுத் தீயில் சிக்கித் தவித்து நிற்கும் மதகரி தெய்விகமாய்த் தீயணைந்தால் அதினின்றும் வெளியேறிய வுடன் அஃது அடையும் மகிழ்ச்சி கூறும் தரம் அன்று. மடலூரும் தலைவன், தலைவியர் தம் விருப்பம் நிறைவேறப் பெற்றதும் பெருமிதம் கொள்வர். ஓர் அரசன் தன் பிழையால் சிறிது காலம் ஒரு சிறையில் இருக்கப் பெற்று, பின்பு பிழையற்றவன் எனத் தீர்ந்து சிறை நீங்கி மீண்டும் தனது அரசுடைமையைப் பெற்றால் அவன் ஆனந்தக் கடலில் மூழ்கி நிற்பான். அங்ஙனமே, இதுகாறும் ஆன்மாவின் உண்மையான சொரூபத்தை அறியாமல் செய்து மறைத்து வந்த பிரகிருதியின் உறவு நீங்கப் பெற்றதும் ஆன்மா வைகுண்டத்தில் எம்பெருமானுடன் கலந்து அவனுக்கு அடிமை செய்து ஆனந்தத்தை அநுபவிக்கின்றது.[25]

தொண்டே செய்துஎன்றும்
    தொழுது வழியொழுக
பண்டே பரமன்
    பணித்த பணிவகையே[26]

என்று செம்மாந்து நிற்கின்றது.

பிரபத்திக்குப் பின்பும் நாம் இருக்கும் காரணம் : தேசிகர் இதனை,

24. தே.பி. 150 *25. தே.பி. 151*
26. திருவாய் 10.4:5

மாளாத வினையனைத்தும் மாள நாம்போய்
வானேறி மலர்மகளார்அன்பு பூணும்
கேளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு
தொழுதுகந்து தோத்திரங்கள் பாடி யாடிக்
கேளாத பழமறையின் கீதம் கேட்டுக்
கிடையாத பேரின்பம் பெருக நாளும்
மீளாத பேரடிமைக்கு அன்பு பெற்றோம்
மேதினியில் இருக்கின்றோம் விதியி னாலே[27]

(மாளாத - ஒளியாத; மாள - அநுட்டித்த உபாயத்தால் ஒழிய; நாம் போய் - நாம் (அர்ச்சிராதி கதியால் சென்று) வான் - பரமபதம்; ஏறி - சென்று; அன்பு பூணும் - அன்பைப் பெற்றவனும், தோளாத - துளைக்கப் பெறாத; மாமணி - எம்பெருமான்; தொண்டு - கைங்கரியம்; தொழுது - வணங்கி; ஆடி - நர்த்தநம் செய்து; பழமறை - வேதம்; பேரின்பம் - பெரிய (மோட்ச) ஆனந்தம்; மீளாத - திரும்புதல் இல்லாத; அன்பு - பிரீதி; விதி - நியமனம்; மேதினி - கர்ம பூமி)

என்ற பாசுரத்தில் விளக்குவர். ''நெடுநாளாக நீங்காதிருந்த வினைகள் முழுவதும் நாம் அநுட்டித்த உபாயத்தால் நீங்கி விட்டன. பின் பரமபதம் சென்று திவ்விய தம்பதிகட்குக் கைங்கர்யம் செய்த ஆனந்தத்தால் ஆடிப்பாடி வேதங்களின் தெய்வ கானத்தைக் கேட்டுப் பின் திரும்பி வராது அவ்விடத் திலேயே மூழ்கிக் கிடக்கும்படி எம்பெருமானது அருளைப் பெற்று விட்டோம். ஆயினும் உடனே அவ்வநுபத்தைப் பெறாது. இன்னும் நாம் இக்கர்ம பூமியில் இருக்கின்றோம். இதற்குக் காரணம் என்ன?

மேதினியில் இருக்கின்றோம்
விதியினாலே

என்ற இறுதி அடியில் காரணம் கூறப் பெறுகின்றது. வங்கிபுரம் ஸ்ரீராம தேசிகன், ''நம்மைக் கொண்டு சேதநரை வாழ்விக்கத் திருவுள்ளம் கொண்ட சர்வேசுவரனுடைய சங்கல்பமும், அர்ச்சாவதாரத்தில் ஈடுபட்டு அநுபவிக்கக் காரணமான பாக்கிய விசேடமும், ஸ்ரீ பாஷியம், ஆழ்வார் அருளிச்செயல் முதலிய திவ்விய சூக்திகளைச் சேவித்து அநுபவிக்க வேண்டிய சுக்ருத விசேடமும் ஆம்'' என்று கூறுவர். இவ்வுரை பொருந்து வதாயினும் இதைவிடப் பொருத்தமான மற்றோர் கருத்தையும் கூறலாம்.

27. தே.பி. 153

சரணம் ஆகும்தன தாள்அடைந் தார்க்கெல்லாம்
மரணம் ஆனால்வைகுந் தம்கொடுக் கும்பிரான்[28]

என்ற திருவாய்மொழியின் கருத்து இதற்கு மிகப் பொருத்தமாக அமைகின்றது. பிரபத்தி செய்துவிட்டாலும், எம்பெருமான் உடனே வீடுபேறு அளிப்பதில்லை. நுகர்வினை (பிராரப்தம்) முடியும் வரை இவ்வுலகில் பொறுத்திருக்க வேண்டும். 'சஞ்சிதம்' 'ஆகாமிய' கர்மங்களை (பழவினை, எதிர் வினைகளை) 'போய பிழைகள் புகுதிருவான் நின்றனவும் தீயினில் தூசாகச்[29] செய்து விடுவான்'. இவ்வுடல் முடிந்த பிறகுதான் நுகர்வினை முடிவு பெறும். "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும், இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை"[30] என்கின்றபடியே செய்து தலைக்கட்டுவன். பிராரப்தத்தை அவன் போக்கான்; அநுபவித்தே தீர வேண்டியது அது. இக்கருத்தே 'விதியினாலே' (=பிராரப்தத்தாலே) என்பதற்கு மிகவும் பொருந்துவது அறியப்படும்.

28. திருவாய் 9.10:5 29. திருப். 5
30. திருவிருத். 1

அர்ச்சிராதி

ஆழ்வார் பாசுரங்களில் - ஆறாம் பகுதி

இயல் - 6

ஆழ்வார் பாசுரங்களில் - ஆறாம் பகுதி

வீடுபேற்றைப் பற்றிய குறிப்புகளும் அர்ச்சிராதி பற்றிய குறிப்புகளும் ஆழ்வார் பாசுரங்களில் காணப்பெறுகின்றன. அவற்றை ஈண்டுக் காட்டுவோம்.

பெரியாழ்வார் : திருவரங்கம் பற்றிய திருமொழியில் (4.9:3)

இருளகற்றும் எறிகதிரோன்மண்டலத்தூடு
ஏற்றி வைத்துஏணி வாங்கி
அருள்கொடுத்திட்டு அடியவரை ஆட்கொள்வான் (3)

(அகற்றும் - போக்கும்; ஏறி கதிரோன் - வீசுகின்ற கதிர்களையுடைய சூரியன்; ஏணி - உபாயமாக இருக்கும் நிலை)

என்ற பாசுரப்பகுதியில் இக்குறிப்பு வருகின்றது. பரமபதத்திற்கு ஏகுவார் சூரிய மண்டலத்தைக் கீண்டு கொண்டு போவதாகக் கூறப்படுகின்றது. மேல் ஏறுகைக்குச் சாதனமாயிருப்பது எதுவோ அஃது ஏணி எனப்படும். அஃதாவது, இங்கு எம்பெருமானுடைய உபாயத்துவம் பரமபதம் ஏறும் அளவும் அல்லவா எம்பெருமானுக்கு உபாறிடத்துவம் என்கின்ற நினைவு உள்ளது; ஏறின பிறகு இவன் தனக்கு உபேயத்துவம் என்கின்ற நினைவு வருதலால் 'ஏணி வாங்கி' என்றார். பரமபதத்தில் எம்பெருமான் கைங்கரிய பிரதிசம்பந்தியாயறுகையாலே, அங்கு அவனுக்கு உபயேத்துவமேயன்றி உபாயத்துவம் இல்லை.

திருமங்கையாழ்வார்: இந்த ஆழ்வாரின் இருமடல்களிலும் இக்குறிப்பு வருகின்றது. சிறிய திருமடலில் பரகாலநாயகி பேசுகின்றாள். ''இந்நிலவுலகில் வாழ்கின்ற மனிதர்களால் சொல்லப்படுகின்ற புருஷார்த்தங்கள் தர்மம் (அறம்), அர்த்தம் (பொருள்), காமம் (இன்பம்) என்ற மூன்றேயாகும். இவற்றுள் முக்கியமான காமப் புருஷார்த்தத்தைப் பெற்றவர்கட்கு மற்ற இரண்டு புருஷார்த்தங்களும் எளிதில் பெறக்கூடியவை.

இம்மூன்று தவிர மோட்சம் என்று நான்காவது புருஷார்த்தம் ஒன்று உளது என்று சிலர் கூறுவர். இது

விவேகமற்ற கூற்று. அறிவுடையோர் மோட்சம் என்ற கண்காணா புருஷார்த்தம் இருப்பதாகச் சொல்லவே மாட்டார்கள். இதனை நீங்களே நன்கு தெளிந்து கொள்ளுமாறு விவரிக்கின்றேன்.

காரார் புரவிஏழ் பூண்ட தனியாழி
தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு
ஆரா அமுதம்அங் கெய்தி – அதினின்றும்
வாரா தொழிவதொன் றுண்டோ? அது நிற்க
ஏரார் முயல்விட்டுக் காக்கைப்பின் போவதே![1]

என்பது விவரணம். மோட்சத்திற்குப் போகின்றவர்கள் சூரிய மண்டலத்தைப் பிளந்து கொண்டு அதனூடே போவதாம்; அந்தச் சூரியன் ஒற்றைச் சக்கரத்தேரில் இருப்பவனாம்; அத்தேருக்கு ஏழுகுதிரைகள் பூட்டியுள்ளனவாம்; அக்குதிரைகள் மேக மண்டலத்தில் சஞ்சரிப்பனவாம்; மிகத் தாழ்ந்த நிலத்திலே இருந்து கொண்டு நம்மால் கண் கூசாமல் காணவொண்ணாத அந்தச் சூரிய மண்டலத்தைப் பிளந்து கொண்டு ஒருவன் போவதென்பது எவ்வளவு பொருத்தமான செயல் என்பதை நீங்களே விமர்சிக்கலாம்.

அவ்வழியே போகின்றவர்கட்கு ஒரு வைகுந்த மாநகர் கிடைக்கின்றதாம்; அதில் ஆராவமுதம் அநுபவிக்கப்படுகின்ற தாம்; இதுதான் மோட்ச புருஷார்த்தமாம். இத்தனையும் முழுப் பொய்யுரையேயன்றி இப்படியும் ஒன்று இருக்கக் கூடிய துண்டோ?

அப்படிபட்ட மோட்சம் என்பது ஒன்று உண்டெனக் கொண்டாலும், இருட்டறையில் விளக்குப் போலே எல்லாக் குணங்களும் நன்கு விளங்கும் இடமான அர்ச்சாவதாரத்தை விட்டு 'உண்டோ? இல்லையோ?' என்று ஐயுறுவதற்கிடமான அம்மோட்சத்தைப் பற்றுவதும் ஒரு பொருளோ? நிலத்திலே ஓடுவது முயல்; மரங்களின் மேலே பறந்து திரிவது காக்கை; மாமிசம் வேண்டியவன் கைப்பட்ட முயலைவிட்டுக் கைப்பட அரியதும் கைப்பட்டாலும் பயன்படாததுமான காக்கையைப் பின்பற்றித் திரிதல் எப்படி முட்டாளின் செயலோ, அப்படியே எளிதாயும் சுவைமிக்கதாயுமுள்ள அர்ச்சாவதார போகத்தை விட்டு அரிதாயும் சார மற்றதாயுமுள்ள மோட்சபோகத்தைப் பெற விரும்புதலும் பேதையின் செயலன்றோ?

1. *சிறிய திருமடல் 12 - 16*

பெரிய திருமடலில் கூறப்பட்டுள்ளவை : வேதங்களில் தர்மம் (அறம்), அர்த்தம் (பொருள்), காமம் (இன்பம்), மோட்சம் (வீடுபேறு) என்ற நான்கு புருஷார்த்தங்கள் சிறப்பித்துக் கூறப் பெற்றுள்ளன. அவற்றுள் வீடுபேறு உடல் முடிந்த பிறகு கிடைக்கக்கூடிய புருஷார்த்தம் என்று ஓதப்பெற்றுள்ளது. அதனைப்பெற விரும்புபவர்கள் மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு, கனிகளையும் இலைகளையும் தின்று தவசிகளாய் குடிசைகளில் உறைந்தும் கதிரவன் கிரணங்களைப் புசித்தும் நீர் நிலைகளில் மூழ்கிக் கிடந்தும் இங்ஙனம் பல பாடுகள் பட்டு முடிவில் வீடுபெறு பெற்றார்கள் என்று ஏடுகளில் வரைந்து வைத்திருப்பது ஏட்டுச் சுரைக்காயேயன்றி 'இன்னான் இன்ன காலத்தில் வீடுபேறு பெற்றதை நான் கண்டேன்' என்று உண்மையாக அறிந்தார் சொல்லத் கேட்டதேயில்லை. ஆதலால் இந்தப் புருஷார்த்தம் பொய்யானது. அஃது உண்மையெனில்,

மன்னும் கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள்
அன்னதோர் இல்லியின் ஊடுபோய் வீடென்னும்
தொன்னெறிக்கண்சென்றாரைச் சொல்லுமின்கள் சொல்லாதே[2]

அவன் மோட்சமடைந்தான் இவன் மோட்சமடைந்தான்' என்று பழம்பாட்டையே பாடிக்கொண்டிருக்கும் அறிவிலிகட்கு நாம் என்ன சொல்லுவது? அவர்கட்குத் தெளிவு பிறக்க ஒண்ணாது. 'அந்த மோட்ச வார்த்தையை விட்டொழியுங்கள்', என்கின்றார் கலியன்.

நம்மாழ்வார் : இரண்டு திருவாய் மொழிகளால்[3] அர்ச்சிராதி கதியையும் தாம் வீடு பெற்றதையும் கற்பனையில் கண்டு தெரிவிக்கின்றார். இந்த இரண்டு திருவாய் மொழிகளின் ஈட்டின் அவதாரிகைகள் ஆழ்ந்து கற்று அநுபவிக்க வேண்டியவை.

சூழ்விசும்பு(10.9): பரமபதத்திற்கு நம்மாழ்வாரை விரைவாகக்கொண்டு ஏக வேண்டும் என்று கருதிய சர்வேசுவரன், பரமபதத்திலுள்ள அநுபவத்திற்கு ஈடாம்படி மிக்க விடாய் பிறப்பதற்காகத் தன்னுடைய சொரூப, ரூப, குண விபூதிகளைக் கண்களாலே கண்டாற்போன்று தெளிவாக விளங்கும்படி செய்தருளினான்.

அதாவது, வேதாந்தங்களில் பிரசித்தமான அரச்சிராதி நெறியையும், உடல் பிரியும் போது வரும் எல்லாம் ஆறும்படி

2. பெரிய திருமடல் 33.35 3. திருவாய் 10.9:10,10

தான் வந்து முகங்காட்டும்படியையும், போகும் நெறியில் உள்ளவர்களான தேவர்கள் செய்யும் உபசாரங்களையும், அந்நெறியாலே சென்று புகக்கூடிய பரமபதத்தையும், நித்திய சூரிகள் வந்து ஆதரிக்கும்படியையும், பிராட்டிமாரும் வைகுண்டநாதனும் எதிரேவந்து ஆதரிக்கும்படியையும், நித்தியசூரிகள் சேவிக்கப் பிராட்டிமாரோடே வீற்றிருந்தருள்கிற படியையும், அடையத்தகுந்தவர்களிலே மேலானவர்களான நித்தியசூரிகள் நடுவே தாம் பாரம் அற்றவராய் இருக்கும் படியையும் காட்டியருளக்கண்டு அன்புடையராய், அதனை அந்யாபதேசத்தாலே பேசி அநுபவிக்கின்றார்.[4]

தமக்கு அருள் செய்து கொடுத்த பேற்றினை வைணவர்கள் எல்லாரும் பெற்றார்களாகப் பேசின இது அந்யாபதேசமாவது. அதற்குப் பயன் 'இங்குள்ளார் நமக்கும் ஆழ்வார் பெற்ற பேறு தப்பாது' என்று நம்பிக் கொண்டிருத்தல்.

(1) திருநாட்டுக்குப் புறப்படுகின்ற ஸ்ரீ வைணவர்களைக் கண்ட உகப்பின் மிகுதியினாலே தாவர (=கடல்) சங்கமங்களுக்கு (=மேகம்) உண்டான வேறுபாடு அருளிச்செய்யப் பெறுகின்றது. எங்கும் சூழ்ந்து ஆகாயப் பரப்பு முழுவதும் ஆபரணம் போன்று விளங்குகின்ற மேகங்களின் முழக்கம் மங்கள வாத்தியம் ஒலிபோல் செவிப்பட்டன. ஆழ்ந்த கடல்களானவை அலை கின்ற அலையாகின்றவைகளை எடுத்துக் கூத்தாடின. மங்களவாத்திய ஒலிக்கு ஏற்ப இந்தக் கூத்தாட்டமும் மங்கலமாகக் கூடிற்று எனலாம். ஏழு உலகங்களும் புதுக்கணித்தன.

(2) மேல் உலகங்கள் பண்ணின மரியாதைகள் அருளிச் செய்யப் பெறுகின்றன. நல்ல தண்ணீரையுடைய மேகங்கள் நாரணன் தமரைக்கண்ட உகப்பாலே உயர்ந்த ஆகாயத்திலே பூரண பொற்குடங்களாகப் பூரித்தன. ''ஆகாச சரரான தேவர்களாலே ஆகாசமெல்லாம் பூரண கும்பம் வைக்கம்பெற்ற தென்றுமாம்'' என்பது ஈடு. நீராலே அணியப்பெற்ற கடல்கள் 'ஒருகால் ஆடினோம்' என்றிராமல்

4. மகள் பாசுரமாகவும் தாய்ப்பாசுரமாகவும் தோழி பாசுரமாகவும் பேசினால் அந்யாபதேசம் எனலாம். ''தமக்கு அவன் பண்ணிக் கொடுத்த பேற்றை வைணவர்கள் எல்லாரும் பெற்றார்களைப் பேசினது அந்யாபதேசம்'' என்பது ஈடு. இப்பதிகத்தில் ''நாரணன் தமரைக் கண்டு உகந்தே'' (1) என்று சில வைணவர்கட்கு அர்ச்சிராதிகதியும் மரியாதைகளும் கிடைத்தனவாக வைத்துச் சொல்லுகிற முகத்தால் தமக்குக் கிடைக்கப் போகிற பேற்றைப் பேசுகிறாராகையாலே அந்யாபதேசப் பாசுரம் என்று அறியத்தக்கது.

உவகையாலே எப்பொழுதும் ஆர்த்துக் கொண்டன. அவ்வுல கங்களில் உள்ளார் நெடியவரைபோலே இருந்துள்ள தோரணத் தம்பங்களை நட்டுத் தாங்களும் தொழுதனர்.

(3) ஆதிவாகிக உலகங்களிலுள்ளார் 'கைபடைத்த பயன் பெற்றோம்' என்று தொழுது நின்றார்கள். அத்துடன் நில்லாமல் தூபத்தை ஏந்திய வண்ணம் நல்ல மலர் மழையையும் பொழிந்தார்கள். 'எம்பெருமான் உலகளந்தருளின செயலுக்குத் தோற்று அடிமைப்பட்டவர்களன்றோ இவர்கள்?' என்று சொல்லிக் கொண்டே தொழுதார்கள் ஆயிற்று அவர்கள் ஆதரிக்கிறது. - 'மூவடி மண் கொண்டளந்த மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன் பயந்தேன்' (பெரி.திரு.9.4:2) என்று சொல்வார் போல்வார் உண்டல்லவா? அங்குள்ள முனிவர்களும் இருமருங்கும் நின்று கொண்டு 'வைகுந்தம் செல்வார்க்கு வழி இதுவாகும்' என்று சொல்லிய வண்ணம் 'இங்கே எழுந்தருள வேண்டும், இங்கே எழுந்தருள வேண்டும்' என்று நல்வரவு கூறி உபசரித்தார்கள்.

(4) தேவர்கள் உபரித்தமை அருளிச் செய்யப் பெறு கின்றது. மாதவன் தமர்கள் போகிற வழியிலே தங்கியிருப்பதற்கு தேவர்கள் பார்த்தவிடம் எங்கும் தோப்புகள் சமைத்தார்கள். ''அர்சர்கள் ஒரு கால் கண்டுசிரித்து 'அழகிது' என்று போகைக்காகமாநாவி[5] சமைப்பாரைப் போலே'' என்பது ஈடு. பன்னிரெண்டு ஆதித்தியர்களும் நிலை விளக்குப் போலே நின்ற வண்ணம் 'இங்ஙனே எழுந்தருள்க, பார்த்தருள்க, பார்த்தருள்க' என்று கைகளை நிரையே காட்டினார்கள். அல்லது, ஆதிவாதிக கணங்களைச் சொன்னதாகவுமாம், அவர்களால் அடிக்கப் பெற்று ஒலிக்கின்ற முரசவாத்தியங்கள் அலையெறிகின்ற கடல்களின் முழக்கத்தை ஒத்திருந்தன; அல்லது இங்கே தங்குகையில் உண்டான ஆசையின் மிகுதி தோற்ற வாத்தி யங்களை ஒலிக்கச் செய்தார்கள் என்றுமாம்.

இவ்விடத்து நம்பிள்ளை ஈட்டிலே அற்புதமான சூக்தி ஒன்று உண்டு: ''இங்கே வைணவர்கள் என்பதுவே ஏதுவாகப் பங்கு பெறாதே திரியுண்ட வைணவர்களை அங்குள்ளார்

5. மாநாவி என்றது, மகாநவமி என்றபடி. 'மகாநவமி' உற்சவக் காட்சியைப் 'மாநாவி' என்று இலக்கணயாற் சொல்லுகிறபடி.

எதிர்கொண்டு இருப்பிடங்கள் கொடுக்கிறபடி'' என்பது. அதாவது - திருநாட்டிலே இப்படிப்பட்ட மரியாதை (சத்காரம்) பெறும் ஸ்ரீ வைணவர்கள் இந்த நாட்டில் இருக்கின்ற காலத்தில் இங்குள்ளவர்களால் ஒருவித மரியாதையும் பெறாததோடு மறுப்பும் பெறுகின்றார்களே என்று திருவுள்ளம் நொந்த அருளிச் செய்தவாறு.

இதற்காக ஓர் இதிகாசமும் அருளிச் செய்கின்றார் நம்பிள்ளை. ''மிளகாழ்வான் படைவீட்டிலே அகரத்திற்குச் (=அக்கிரகாரம்) செல்ல, 'நீ அந்தராளிகள்[6]; உனக்குப் பங்கு இல்லை' என்ன, 'நன்மையில் குறையுண்டாய்ச் சொல்லு கிறீர்களோ? அன்றோ?' என்ன, 'நன்மையில் குறையில்லை இது அன்றோ ஏது' என்ன, 'நம் நெஞ்சில் இல்லையாகிலும் இவர்களால் கைவிடப் பெற்றோம் அன்றோ?' என்று புடை வையை முடிந்து ஏறிட்டுக் கூத்தாடினான்''.

இதன் கருத்தை விளக்குவோம். மிளகாழ்வான் என்னும் பெரியார் ஒருவர், அரசன்புலவர்கட்கெல்லாம் கிராம பூமிகள் தானம் வழங்குகின்றான் என்று கேள்வியுற்று, தாமும் புலவனா கையாலே தமக்கும் அவை கிடைக்கக் கூடும் என்று எண்ணி அவ்வரசனிடம் சென்றார்; அரசன் சைவப்பற்றுடையவனாகை யாலே 'உமக்கு ஒன்றும் தாரேன்' என்றான்; 'தாரேன் என்பது ஏன்? எனக்குத் தர்க்கம் தெரியாதா? மீமாம்சை தெரியாதா? வியாகரணம் தெரியாதா? எந்தச் சாத்திரம் வேண்டுமானாலும் பரீட்சை செய்து கொள்' என்றார்; அரசன், 'உனக்குப் புலமையில் ஒருகுறையும் இல்லை; நீ பெரும் புலவன் என்பதை அறிவேன்; ஆயின் வைணவனாகையாலே தாரேன்' என்றான்; அது கேட்டு மிளகாழ்வான் 'உண்மையில் நமக்கு வைண வத்துவம் இல்லையாகிலும் இவன் எண்ணத்தி லாவது வைணவத்துவம் நமக்கு உண்டாகப் பெற்றேதே' என்று ஆனந்தத் கூத்தாடினர் என்று கிராம பூமிகள் பெற்றதற்கு மேலாக மகிழ்ந்தார் என்பதைத் தெரிவித்தபடி.

(5) ஆதிவாகிகர் தலைவர்களான வருணன் இந்திரன் முதலானவர்களும் மற்றும் உள்ளாரும் இவர்கட்குச் செய்யும் உபசாரங்கள் கூறப் பெறுகின்றன. திருமகள் கேள்வனான அடியார்கள் போகும் வழியில் வருணன் இந்திரன் பிரஜாபதி

6. அந்தராளிகள் - நடுவே இருப்பவன்; சம்சாரத்திலும் சேராது முக்தர்களிலும் சேராது நடுநிலையில் இருக்கிற முமுட்சு என்றபடி.

ஆகியோர் 'இங்ஙனே எழுந்தருள வேண்டும், எம் அதிகாரங்களைக் கை கொள்ள வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார்கள். கின்னரர்களும் கருடர்களும் பாடினார்கள். வேதங்களை ஓதுகின்ற நல்வாயினையுடைய முனிவர்கள் யாகத்தைச் செய்ததனாலாய பயன்களை அவர்கள் திருவடிகளில் சமர்ப்பித்தார்கள். முக்திக்குச் செல்லுகின்றவர்கள் எதனையும் விரும்பாமல் சென்றாலும், தங்கள் அதிகாரங்களைக் கொடுப்பாரும் பாடுவாரும் யாக பலன்களைச் சமர்ப்பிப்பாரும் ஆகின்றார்கள் தங்கள் தங்கள் விருப்பத்தாலே. அங்ஙனம் ஆவது அவர்கள் சத்தைப் பெறுவதற்காக.

(6) திவ்விய அப்சரஸ்ஸுகள் வாழ்த்தினபடி கூறப் பெறுகின்றது. வைதிகர்கள் வேள்விப் பயன்களைச் சமர்பித்த அளவில், ஒருசிலர் தூபங்களை இட்டு நறுமணம் மிக்க புகையை எங்கும் பரவும்படி செய்தார்கள்; வேறு சிலர் காளங்களையும் சங்குகளையும் மாறிமாறி எங்கும் ஒக்க ஒலிக்க செய்தனர். 'எம்பெருமானுடைய கையும் திருவாழியுமான அழகிலே ஈடுபட்டவர்களன்றோ நீங்கள்? வாருங்கள் இவ்விடத்தை யாளுங்கள்!' என்று சொல்லி திவ்விய அப்சரஸ்ஸுகள் மகிழ்ந்து வாழ்த்தினார்கள். ''வேறு தேசத்திற்குப் போன குழந்தையைத் தாய்மார்கள் குளிர நோக்குமாப்போலே, இந்தத் திவ்விய மகளிர் ஒளியையுடைய தங்கள் அழகிய கண்களாலே குளிர நோக்கின படி'' என்பர் நம்பிள்ளை. முடிவில் அவர், ''இங்கு பகவானு டைய சம்பந்தமே காரணமாக நீசராலே பரிபவம் செய்யப் பெற்றவன், உடலைவிட்டுப் பிரிந்த காலத்தில் தங்களுக்கு மேலே ஒருவர் இல்லாதாரான தேவர்கள் கொண்டாடும்படி அன்றோ இவன் பேறு?'' என்பர்.

(7) மருத் கணங்களும் வசுக்கணங்களும் தங்களுடைய எல்லைக்கப்பாலும் தொடர்ந்து வந்து தோத்திரம் செய்தல் கூறப்பெறுகின்றது. 'கடலிலே சயனித்திருகின்ற கேசவனும், குடந்தையில் திருக்கண்வளர்கின்ற கோவலனுமான எம் பெருமானுடைய அடியவர்கள் இவர்கள்' என்று தெய்வமகளிர் பல்லாண்டு பாடின அளவில் மருதரும் வசுக்களும் எல்லா இடங்களிலும் தொடர்ந்து வந்து தோத்திரத்தைப் பாடினர். ஒரு கணநேரத்தில் ''ஓர் உலகத்திலிருந்து வேறு உலகத்திற்கு போகும் ஆற்றல் வல்லவர்கள் ஆகையாலே, தங்கள் எல்லைக்குள் புகழ்ந்த அளவால் மனம் நிறைவு பிறவாமையாலே தொடர்ந்து

புகழ்ந்தார்கள். அவர்கள் சடக்கெனப்போகிற இதற்கு அடி என்? என்னில்: 'கண்ணன் விண்ணூர் தொழவே, சரிகின்றது சங்கம்' (திருவிருத். 47) என்றும், ''காண்பது எஞ்ஞான்று கொலோ?'' (திருவாய் 5.9:6), 'மாக வைகுந்தம் காண்பதற்கு என்மனம், ஏகம் எண்ணும் (மேலது 9.3:7) என்றும், 'உடன் கூடுவது என்று கொலோ?' (மேலது 2.3:10) என்றும் இருக்கையாலும் 'நான் பிராட்டியைப் பிரிந்து கண நேரமும் உயிர் வாழேன்' (இராமா. சுந்தர.66:10) என்ன இருப்பவனுடைய கருத்து அறிபவர் களாதலாலும் ஆம்.

'குடந்தை எம்கோவலன்'

என்று குறிப்பிடுவதானல், நம்மாழ்வார்க்குத் திருநாட்டிலும் கூட மறக்கமுடியாதபடி திருக்குடந்தையின் அநுபவம் செல்லா நின்றது என்பது தெரியவரும். திவ்வியப் பிரபந்தங்கள் எல்லாம் வழக்கற்றுப் போன ஒரு காலத்தில் நாதமுனிகள் அவற்றை மீண்டும் வழக்குக்குக் கொணர்வதற்குத் திருக்குடந்தைப்பற்றிய 'ஆராவமுதே' (திருவாய் 5.8) என்ற திருவாய்மொழியே மூலகாரணமாயிற்று என்று ஓர் ஐதிகம் உள்ளது. முக்கால மூணர்பவரான ஆழ்வார் திருவுள்ளத்தில் புகழ்ச்சி இடம் பெற்றது எனலாம். மங்கை மன்னன் சடகோபனின் திருவுள்ளத்தையே பின்பற்றிப் பேசுபவராதலால், நம்மாழ்வார்க்குத் திருக்குடந்தை மீது அளவு கடந்த ஆசை மிகுதி (=அபிநிவேசம்) உண்டு என்பதை அறிந்தே தாம் திருமொழி பாடத் தொடங்கும்போதே 'தூவிசேர் அன்னம் துணையொடும் புணரும் சூழ்புனல் குடந்தையே தொழுது' (பெரி.திரு.1.1:2) என்றும், 'சொற்பொருள் ஆளீர்; சொல்லுகேன் வம்மின்; சூழ்புனல் குடந்தையே தொழுது' (மேலது 1.1:7) என்றும் அருளிச்செய்து, திருநெடுந்தாண்ட கத்தின் முடிவிலும் 'தண்குடந்தைக் கிடந்த மாலை நெடியானை அடி நாயேன் நினைந்திட்டேன்'(29) என்று திருக்குடந்தை யையே பேசித் தலைக்கட்டினார். திருக்குடந்தைக்கு என்றே **'திருவெழுக் கூற்றிருக்கை'** என்ற தனிப்பிரபந்தமும் திருவாய் மலர்ந் தருளினார்.

(8) நித்தியசூரிகள் இவர்களை எதிர்கொள்ளலை இயம்புவது. '(நித்தியசூரி நாதனாயிருக்கின்ற எம்பெருமான் அந்த நித்தியசூரி நாதத்துவத்தைக் குறைவாக நினைத்து) மண்ணுலகிலே இடையர் குலத்திலே வந்து பிறந்து பசு மேய்த்தலாகின்ற இழிதொழில் செய்து இதையே தனக்குப்

பெருமேன்மையாக நினைக்கின்றவன் என்று இந்த சௌலப்பிய குணத்திலே தோற்று அடிமைப்பட்டவர்கள் இவர்கள்' என்று சொல்லிக் கொண்டு நித்தியர்களும் முக்தர்களும் முறை முறையே எதிர்கொள்ளுகின்றனர். இப்பாசுரத்தில் அவதாரத்தின் பெருமையைச் சொல்லி மரியாதை பண்ணினார்கள். அடியவர்கள் வருகின்றார்கள் என்று கொடிகளாலே அலங் கரிக்கப்பெற்றிருந்த திருமதிள்கள் சூழ்ந்த 'திருக்கோபுரத்தைச் சென்று கிட்டி எதிர்கொள்ளுகின்றார்கள் 'முடியுடைய வானவர்கள்'- எம்பெருமானுக்கு திருமுடி உள்ளது. நித்தியசூரிகட்கும் அஃது உண்டோ? என்ற ஐயத்திற்குப் பரிகாரம் உணர்த்துகின்றார் நம்பிள்ளை. "அவன் பாதுகாப்பதற்கு முடிசூடி இருப்பன்; இவர்கள் அடிமை செய்வதற்கு முடிசூடி இருப்பர்" என்று. பாசுரத்தில் வரும் 'வடிவுடை மாதவன்' என்பதற்கு நம்பிள்ளை அருளிச் செய்வது: "கிழத்தன்மையை விட்டு வசுதேவன் காளைப்பருவத்தை அடைந்தான்" (விஷ்ணுபுரா. 5.20:52) என்கின்றபடியே கம்சவதத்திற்குப் பிறகு பிள்ளையைக் கண்ட வசுதேவரைப் போலவும், தேவகிப் பிராட்டியாரைப் போலவும், பெருமாளைக் கண்ட சக்கரவர்த்தி "மீண்டும் இளமைப் பருவத்தை அடைந்தார்" (இராமா. அயோத்12:105) என்று சொல்லப் பெற்றாற் போலவும் தங்கள் வரவால் உண்டான மகிழ்ச்சிப் பெருக்காலே புதுக் கனித்தது வடிவு" என்பது. இங்ஙனம் ஏற்பட்ட புதுக்கணிப்பு பெருமாளுக்கு - மாத்திரமன்று, பிராட்டிக்குங்கூட என்று காட்டுவதற்காக 'மாதவன்' என்றது.

(9) நித்தியசூரிகள் இவர்களைக் கண்டு 'இப்படிப் பரமபதத்தில் வருவது பாக்கியம்' என்று வியந்து மகிழ்தல். இவர்கள் பரமபதத்திலே சென்று கிட்டின அளவிலே திருவாசல் காக்கும் முதலிகள், 'வைகுந்தத்துக்கு அடியவர்களாக வருகின்ற இவர்கள் எமக்கு சுவாமிகள்' என்றார்கள். இன்னும் 'எமது பதவியை வகித்து நிர்வகிக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு கையிலே பிரம்பையும் கொடுப்பார்கள்' ஆயிற்று. "பயிலும் திருவுடையார் எவரேலும் அவர், எம்மை ஆளும் பரமர்' (திருவாய் 3.7:1) என்ற இவரைப் போலே அங்குள்ளாரும் இருப்பது. சென்று புகுகின்றவர்கட்கும் அடிமை வேலையே உத்தேசியம்; அங்கு இருக்கின்றவர்கட்கும் அடிமையே தொழில் ஆகையால் இவர்கள் கொள்ளுவதும் அது; அவர்கள் கொடுப்பதும் அது, பரதாழ்வானையும் இளைய பெருமானையும் போலே குணாநுபவமே போதுபோக்காக இருப்பவர்கள் கைங்கரியமே

காலட்சேபமாயிருப்பவர்களும்; 'கடலிலே உள்ள நீர் மலையிலே ஏறக்கொதித்தாற்போன்று இவ்வுலகில் பிறவியிலே உழன்று திரிகின்றவர்கள் பரமபதத்தில் புகுவதற்கு ஈடாகப் புண்ணியத்தைப் பண்ணுவதே' என்று வியந்து ஆழங்காற்பட்டார்கள். இதன் தாற்பரியம் யாதெனில், ''திருமங்கையாழ்வார் 'ஏரார் முயல்விட்டுக் காக்கை பின் போவதே' (சிறிய திருமடல்) என்று சொல்லி லீலா விபூதியின் அநுபவந்தான் உண்மையில் சிறக்குமாகையாலே அப்படிச் சிறந்ததான தேசவிசேடத்திலே சென்று நாங்கள் அநுபவிக்கப் பார்த்திருக்கையில் நீங்கள் அங்கிருந்து இங்கே வந்தீர்களே! இஃது எங்களுடைய பரம பாக்கியமன்றோ?'' என்று கொண்டாடினார்களாம் என்கை.

(10) நித்திய சூரிகள் இவர்களைக் கொண்டாடும்படியை அருளிச் செய்வது. 'மண்ணவர் விண்ணவராகப் பெற்றது நம்முடைய பாக்கியம் அன்றோ?' என்று சிலர் சொல்லத் தொடங்கினர். ''இங்ஙனம் அன்று'' என்று வேறு சிலர், ''விஷயங்கள் நடையாடுகின்ற இவ்வுலகத்திலிருந்து வேறு பயனைக் கருதாதவராய், பகவானுடைய குணங்களை அநுபவிக்கின்ற மகாபுருஷர்களாய் 'விண்ணுளாரிலும் சீரியர்' (திருவிருத்.79) என்று கொண்டாடப் பெற்றவர்கள் இங்கே வந்து புகப்பெற்றது நம்முடைய பாக்கியம் என்று ஒரு தடவை சொன்னால் போதுமோ?'' என்கின்றனர். முன் பாசுரத்தில் 'வைகுந்தம் புகுவது' என்றார். இங்கு 'புகுந்தனர்' என்கையாலே தங்கள் புண்ணியத்தைக் காட்டுகின்றது. இப்பாசுரத்தில் வரும் 'நல்வேதியர்' என்பதற்கு புருஷசூக்தம் முதலியவற்றிலே சொல்லப்பட்டவர்கள் என்பதைக் குறிக்கின்றது. இங்ஙனம் கொண்டாடின அளவோட நில்லாமல் ஆதிசேடன், பெரிய திருவடி முதலானவர்கள் தங்கள் திருமாளிகைகளிலே கொண்டு சென்று 'இவன் பிறப்பு இறப்புகளில் உழன்று திரிந்து போந்த ஒருவன்; நாம் சம்சாரத்தின் வாசனை சிறிதும் தீண்டப் பெறாதவர்கள்' என்று பாகுபாடு காட்டாமல் இவனைச் சீரிய சிங்காதனத்தில் உயரவைத்து, அவர்கட்குப் பாங்காகத் தாதம் இருந்து திருவடிகளை விளக்குவார்கள். இந்நிலையில் பகவானுக்குத் தொண்டு செய்கின்றவர்கள் வந்து எதிர் ஏற்பார்கள்; ஸ்ரீவைணவர்கட்குச் செல்வமான திருவடி நிலைகளையும், திருச்சுண்ணப் பிரசாதத்தையும், நிறைகுடங்களையும் மங்கள தீபங்களையும் ஏந்திக் கொண்டு வந்தனர். இங்கு

'மதிமுக மடந்தையர்' என்ற பாசுரத் தொடரின் உட்கருத்தை நம்பிள்ளை, ''தேசாந்தரம் போன பிள்ளை (=பிரஜை) வந்தால் தாய் முகம் குளிர்ந்திருக்குமாப்போலே மகிழ்ச்சிப் பெருக்காலே (=ஹர்ஷத்தாலே) பூர்ணசந்திரனைப் போலே இருக்கின்ற முகங்களையுடையவர்கள் வந்து எதிர்கொண்டார்கள்'' என்று விவரிப்பர்.

(11) இத்திருவாய் மொழிகற்றார் நித்திய சூரிகளோடு ஒப்பர் என்பது பயன். ''வந்து அவர் எதிர் கொள்ளள'' என்ற பாசுரத் தொடருக்கு 'பிராட்டியாரோடு கூட எம்பெருமான் வந்து எதிர்கொள்ள' என்று பொருளை அருளிச் செய்வர் நம்பிள்ளை. அயர்வறும் அமரர்களும் அவர்களது அதிபதியுமாக எல்லாரும் வந்து எதிர்கொள்ளத் தட்டில்லையே. இப்படி எதிர் கொண்டவர்கள் அனைவரும் புடைசூழ ஆனந்தமயமான திருமாமணி மண்டபத்திலே அந்தமில் பேரின்பத்து அடியார்களின் அழகோலத்தில் ''அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ?'' (திருவாய் 2.3:10) என்று ஆசைப்பட்டபடியே இருந்தபடியாயிற்று. ஆழ்வார் திருநாட்டில் எம்பெருமானை அநுபவிக்கப் பெற வேண்டும் என்று ஆசைப்பட்டார் அல்லர்; அடியாரோடு இருக்க ஆசைப்பட்டார். ஆசைப்பட்டபடியே பெற்ற பேற்றைத் தெரிவித்தபடி, 'அந்தமில் பேரின்பத்து' என்ற பாசுரத் தொடருக்கு ஈடு: ''இவ்வுலக வாழ்க்கையில் சுகம் என்று நினைப்பது ஒருவித மயக்கமே; உள்ளது துக்கமேயாம். பாண்டு, மான் உருக் கொண்ட தன் மனைவியோடு சேர்ந்திருந்த ஒரு முனிவனின் மேல் அம்பைவிட, அவன் (அந்த முனிவன்) 'இவ்வுலக வாழ்க்கையில் ஆயிரம் கூற்றில் ஒரு கணமாயிற்றுச் சுகம் உள்ளது; அதனையும் அநுபவிக்க ஒட்டிற்றில்லையே என்றானே அன்றோ?''.

முனியே நான்முகனே (*10.10*) : முன் திருவாய் மொழியில் அர்ச்சிராதிமார்க்க கதியைப் பரக்கப் பேசி 'அந்தமில் பேரின்பத்து அடியாரோடு பரமபதத்தில் இருந்தமை' (*10.9:11*)யைக் குறிப்பிட்டார். திருக்கண்களைத் திறந்து பார்த்தவுடன் திருப்புளியாழ்வார் அடியிலேயே தாம் வீற்றிருக்கக் கண்டார்: தாம் நித்திய முக்தர்களிடையே இருந்த இருப்பு ஞான அநுசந்தானமாத்திரமாய் இருந்தது. அதற்கு மேலே 'இலங்லை கண்டீர் இன்பம்' (திருவாய். *9.1.6*) என்றும், 'பிறப்பாம் பொல்லா

அருவினைமாயவன் சேற்று அள்ளல் பொய்ந்நிலம்' (திருவிரு.100) என்றும் தாம் பிறருக்கு உபதேசிக்கின்ற இவ்வுலகிலே உடலோடு கட்டுப்பட்டவராய் இருக்கக் கண்டார். கண்டு மேருவின் உச்சியிலே துக்கம் இல்லாதவனாய் இருக்கின்றான் ஒரவன், பலப் பல துக்கங்களை உடையதாய்ப் பேர் ஆழமாய் ஓரிடத்திலும் நிலை இல்லாமல் இருக்கும்படியான பாதாளத்திலே விழுந்து நோவுபடுமாறு போலே துக்கம் கொண்டவரானார். அதற்கு மேலே, பண்டு அவன் தமக்குக் கைவந்த படியையும், தன்னைப் பெறுவதற்குத் தானே உபாயம் (சித்தோபாயம்) தானே அல்லது வேறு இல்லாது இருக்கிற படியையும், தன் தலையிலே ஓர் உபாயத்தை ஏறிட்டுக் கொண்டு ஒழுகுபவனுக்கும் காப்பாற்றுகின்றவனாய் இருக்கும் படியையும் நினைத்து அக்கணத்திலே பெறாமை யாலே, 'இப்படி இருக்கின்றவன் நம்மை இங்ஙனம் நோவுபட விட்டு வைப்பது தகுமா?' என்று மிகவும் துக்கம் கொண்டவர் ஆனார். தம்முடைய ஆகிஞ்சிந்நியத்தையும்[7] அநந்யகதித் துவத்தையும்[8] நன்குணர்ந்த எம்பெருமான் இன்னமும் தம்மை இப்படி நோவுபட வைத்திருப்பது என்னே! என்று மனம் நொந்து, தாய் தந்தையர்கள் முன்னே இருக்கப் பசியாலும் தாகத்தாலும் நோவுபடுகின்ற சிறுகுழவி துன்பத்தின் மிகுதியாலே தாய் பேரைச் சொல்லி கூப்பிடுமாறு போலே ''வளவேழ் உலகின்'' (திருவாய் 1.5) என்ற திருவாய் மொழியிற் கூறிய தன்மையை யுடையதாம். தம் தன்மையை நினைக்க ஆற்றலற்றவராய்த் தூதர் மூலமாக அறிவித்தற்கும் இயலாத வராய் அவன் எதிரே நின்று பிராட்டி ஆணையிட்டுத் தமக்கு (நாணம்) அற்றுச் சொல்லும் படியான ஆற்றாமையொடே, ஈர நெஞ்சு இள நெஞ்சு இல்லாதாருடைய இதயங்களும் கூட இரங்கும்படியாக வும், அவனுக்குத் தம்மைக் காப்பாற்றி அல்லது பரமபதத்திலும் இருப்பு அரிதாம்படியாகவும் காட்டுத் தீயில் அகப்பட்டாரைப் போலே துயர ஒலியோடே பெருமிடறு செய்து கூப்பிட்டு, தரிக்கமாட்டாமையாலே, அவன் திருவடிகளில் சரணம் புகுந்தார்.

7. ஆகிஞ்சந்நியம் - கன்மஞான பக்திகளாகின்ற உபாயங்களில் தொடர்பற்றிருத்தல்.

8. அநந்நியதித்துவம் - ஆன்மரட்சணத்திற்கு எம்பெருமானைத் தவிர வேறொரு இரட்சகப் பொருள் அற்றிருத்தல்.

இவர் சரணம் புக, அவன் அருட்கடல் ஆகையாலே 'இவரை இப்படி நோவுபட வைத்தோமே அன்றோ?' என்று இவரைக் காட்டிலும் தான் நொந்து, பிராட்டியோடே கூட பெரிய திருவடிமேலே இவர் விரும்பியபடியே எல்லாவற்றாலும் நிறைந்தவனாய் வந்து தேற்றி, இவருடைய உடல் சம்பந்த தையும் அறுத்து, ''அடியார் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ?'' (திருவாய் 2.3:10) என்று இவர் ஆசைப்பட்டபடியே அத்திரளிலே புகப்பெற்று 'என் அவா அறச் சூழ்ந்தாயே' (திருவாய் 10.10.10) என்றும், ''அவா அற்று வீடு பெற்ற'' (மேலது 10.10:10) என்றும் இவர்தாமே சொல்லலாம்படி இவர்விடாய்க்கும் அவ்வருகான தன் விடாயும் தீரும்படி கலந்தருளினான்.

இப்பிரபந்தத்துக்குத் தலைவன் (பிரமேயம்) சர்வேசுவரன்; இப்பிரபந்தம் (பிரமாணம்); அவாவில் அந்தாதி (நூல்). நூலை அருளிச் செய்தவர் (பிரமாதா) மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார். இனி, இவருடைய அவதாரம்தான் சர்வேசுவர னுடைய அவதாரத்தைப்போன்று சாதுக்களினுடைய புண்ணி யத்தின் பலம் (சுச்ருபலம்).

(1) ஒருவித காரணமும் இல்லாமலே நின்வடிவழகைக் காட்டி உன்னையொழியச் சொல்லாதபடி என்னை ஈடுபடுத்தி பொறுக்கக் கூடாத இவ்வுலகிலே இன்னமும் தள்ளிவைப்பது தகுதியன்று எனல்.

'உலகத்தைப் படைப்பதற்காக நினைப்பிட்டவனே! நான்முகனுக்கும் சிவனுக்கும் அந்தர்யாமியாக இருந்து படைப்பு அழிப்பு ஆகியவற்றைச் செய்பவனே! நின் வடிவழகைக் காட்டி அநுபவிப்பித்தனே! எனக்குப் பரிபூர்ணப் பிராணனானவனே என்னைக் சரணமாக ஏற்றுக் கொண்ட பின்பு நீ என்னை விட்டு அகன்று போக இசையேன். ஆர்த்திமிக்க என்னை ஒருவிதமான வஞ்சனையையும் செய்யலாகாது'' என்கிறார்.

ஆழ்வார் திரிமூர்த்திகள் சமம் என்ற கருத்தோ, அவை ஒன்று என்ற கருத்தோ உடையவரல்லவர். ''திண்ணன் வீடு'' (2.2), ''ஒன்றும் தேவும்'' (மேலது 4.10) முதலான் திருவாய் மொழிகளிலே நன்கு பரத்துவ நிர்ணயம் பண்ணியருளினே வருடைய திருவாக்கான இதில் வேறு வகையான பொருள் காண்பதற்குக் காரணம் இல்லை. ''நீராய் நிலனாய்த் தீயாய்க்

காலாய் நெடுவானாய், சீரார் சுடர்களிண்டாய்ச் சிவனாய் அயனானாய்'' (திருவாய்6.9:1) என்பது போன்ற இடங்களிற் சரீர - ஆத்மபாவனை நிபந்தமான ஐக்யவ்பதேசம் என்று உணர்தல் வேண்டும். நான்முகனையும் முக்கண் அப்பனையும் அநுப்ர வேசித்து படைத்தல் அழித்தல்களை நடத்தி வரும் முனியே! என்றபடி. எந்தக் காரியத்திற்கும் மானசமான சங்கல்பத்தைப் பண்ணுபவன் என்ற பொருளில் 'முனி' எனப்பட்டது.

(2) தான் விரும்பியதைச் செய்தல்லது நிற்க ஒண்ணாதபடி அவனுக்குத் 'திரு ஆணை' இடல். 'என்னை வஞ்சியாது ஒழிய வேண்டும்; உனக்கு கூடச் செல்வமாய் இருக்கிறவளும், உன் திருமார்பிற்கு மாலைபோல் அலங்காரமாய் இருக்கின்றவளும், குணங்களுக்கெல்லாம். கொள்கலமாக இருப்பவளும், உன் திருமேனிக்கும் வாசனையைக் கொடுக்கின்ற அழகிய கூந்தலை யுடையவளுமான பிராட்டி மேல் ஆணை; நின்மேல் ஆணை; என் உடலைக் கண்டு அருவருக்காமல் அன்பு வைத்து என் உயிர் வேறாகத் தோன்றாதபடி உன்னோடு என்னை ஒன்றாகவே அங்கீகரித்தாய்; ஐயகோ! வந்து என்னைக் கூவிக் கொள்ள வேண்டும்; உன்னை அணுகி அநுபவிக்கும்படி செய்ய வேண்டும்'.

பெரியாழ்வார், ''வளைத்து வைத்தேன்; இனிப் போகல் ஒட்டேன்; உன்தன் இந்திரஜாலங்களால், ஒளிதிடில், நின் திருவாணை கண்டாய்'' (பெரியாழ் திரு.5.3:2) என்று திருமாலிருஞ்சோலைப் பருமானிடம் பிராட்டி ஆணை மட்டும் இட்டார். இவர் இருவர் மேலும் இடுகின்றார். 'என் காரியம் செய்து தலைக்காட்டாமல் நீங்கள் இட்ட அடிபெயரவொண் ணாது' என்றபடி.

இங்ஙனம் ஆணையிட்ட ஆழ்வாரை நோக்கி, 'சேஷியான நாம் செய்தபடி கண்டிருத்தலே சேஷபூதரான உமக்கு சொரூ பமாக இருக்க, இங்ஙனம் நீர் ஆணையிடுவது சொரூபத்திற்குத் தகாது' என எம்பெருமான் அருளிச் செய்ய, தாம் ஆணையிடற்குத் தகும் என்பதைத் தம் ஆற்றாமையின் மிகுதியைச் சொல்லி அதனால் ஆணையிடத் தகும் என்பதை விளக்குகின்றார்.

''பெரியபிராட்டியார் பக்கலிலும் பண்ணாத நட்பை என் பக்கலிலே பண்ணி ஆன்ம வேறுபாடு இல்லாபடியன்றோ

என்னைக் கொண்டது?'' இரண்டு தத்துவம் என்று பிரித்துக் காணவொண்ணாதபடியன்றோ கலந்து உருமாறிற்று? என் பக்கலிலுள்ள குறைகளைக் கண்டால் கூசிக்காத வழிக்கு அப்பால் செல்ல வேண்டுமே. சிறிதும் கூசாமலன்றோ என்னோடு கலந்தாய்? ஆனபின்பு, என்னை ஈண்டென வந்து அணுகப் பாராய்; சாத்திரங்களால் அறிவிக்கும் அளவு போதாது; குணங் களை அநுபவிக்கும் அளவாலே போதாது; உட்கண்ணால் காணலும் போதாது; உன்னைக் கிட்டி அநுபவிக்கும்படி செய்ய வேண்டும். தன்னை ஒழியச் செல்லாமையைத் தானே விளைத்துக் கூப்பிட வந்து முகம் காட்டாது ஒழிவதே!''

(3) விடாய் கொண்டவன் 'தண்ணீர், தண்ணீர்' என்னுமா போலே மீண்டும் 'கூவிக்கொள்ளாய் வந்து அந்தோ!' என்கின்றார் 'ஆற்றாமை மிகுந்தாலும் நான் வந்து கிட்டுதல் முறைமையன்று; உனக்குத் தாழ்ச்சியுமாகும்! நீதானே கூசிக்கொண்டு போக வேண்டும்' என்கின்றார்.

''எனக்குத் தொளை செய்த கரிய மாணிக்கம் போன்ற வனே! பொருந்தித் தொழுகின்ற பிரமன் சிவன் இந்திரன் முதலான தேவர்களுக்கு எல்லாம் காரணமான திருநாபிக் கமலத்துக்கு மூலமாக இருப்பவனே ! பிரமன் முதலான தேவர்கட்கும் அப்பாற்பட்டிருக்கின்ற நித்திய சூரிகட்கும் அடையத்தக்க பொருளாக இருப்பவனே! என் உயிருக்குப் பற்றுக்கோடாக வுள்ள ஒரு கொம்பு உன்னைத் தவிர வேறு அறிகிலேன் யான்; ஆதலால், நீதான் வந்து அழைத்துக்கொண்டு அருளல் வேண்டும்; ஐயோ! நின் காரியத்தை யான் கூற வேண்டுவதே!''

நீ இப்படிப்பட்ட வடிவழகு படைத்தில்லையாகில் நாம் இங்ஙனம் கதற வேண்டியிருக்குமோ? ' நீ அழைத்தபோது கண்டிருக்கல் ஆயிற்றே, நீ அன்றிக்கே இருந்தாயாகில்; கிரமத்தில் அழைக்க நினைத்தாயாகில் அழகைக் காட்டி உனக்கே உரியனாகும்படி செய்தது ஏன்?' - என்பத ஈடு.

''கொள் கொம்பை யொழியக் கொடி நிற்குமோ? வேரை அறுத்துப் 'படர்' என்றால் படருமோ? என் ஆன்மா பிழைப் பதற்குக் காரணமாய் இருப்பது ஒன்று, உன்னையொழிய வேறு காண்கின்றிலேன்'' என்கிறார்.

இவ்வாறு சொன்ன ஆழ்வாரை நோக்கி ''பேற்றுக்கு உறுப்பாக நீர் ஏதேனும் செய்திருக்கின்றீரோ?'' என்று எம்பெருமான் கேட்க, ''பிரமன் சிவன் முதலானோர் கூடத் தங்கள் காரியத்தை தாங்களே செய்து கொள்ளுகின்றார்களோ? இல்லையே. ''ஆவிக்கோர் பற்றுக் கொம்பு நினையலால் அறிகின்றிலேன்யான்' என்று கூட அவர்கள் சொல்லியறியார் களே. அப்படிப்பட்டவர்களையும் நிர்வகிக்கின்ற உனக்கு என்னை நிர்வகித்தல் மிகையோ? ஆகவே, என்னைக் கூவிக் கொள்ளாய்'' என்கின்றார்.

(4) 'எல்லாப் பொருள்கட்கும் நிர்வாககனாக இருக்கும் நீ என் காரியத்தை நானே செய்து கொள்வேனாகப் பார்த்தருளினா யாகில், நீ என்னைக் கைவிட்டாய் அன்றோ?' எனல்.

எல்லாவற்றும் மேலே உள்ள அழகிய குளிர்ந்த மூலப் பகுதியும் நியே, அம்மூலப்பகுதியில் இருக்கும் ஆன்மாக்களும் நீயே; ஆகாயமும் சிறந்த ஒளிமயமான நெருப்பும் நீயே; அந்த ஐம்பெரும் பூதங்களாலான உலகத்திலே இருக்கின்ற பிரமனும் சிவனும் நீயே; தேவர்களையும் மற்றுமுள்ள மனிதர்கள் முதலானர்களையும் படைத்த முனிவனான அவனும் நீயே; என் காரியத்தை நீயே செய்வதாக ஏறிட்டுக் கொண்டு, பின் அதனைச் செய்யாமல் அறிவில் பொருள்களைப் போக விடுமாறு போலே போகுமாறு விட்டாயே!'' என்கின்றார்.

மகாந் முதலான காரியங்களுக்கு எல்லாம் காரணமாகை யாலே மேலாய், தன்னுடைய ஒரு கூற்றாலே காரியவர்க்கத்தைப் பிறப்பிக்கும் ஆற்றலையுடையதாய், வியக்கத்தக்க பரிணா மத்தையுடையதாய், ஆன்மாக்களுக்குப் போகத்தையும் மோட்சத்தையும் விளைத்துக் கொள்ளும் நிலமாய் இருந்துள்ள மூலப்பகுதிக்கு நிர்வாககன் எம்பெருமான். இந்த மூலப்பகுதி ஆன்மாக்களுக்குச் சரீரமாய், அம்முறையில் ஈசுவரனுக்கு உடலாயிருத்தல், ஆன்மாக்களுக்கு வேறுபட்ட தான அறிவில் பொருளுக்கும் அவனையொழிய நிர்வாககர் இலர் என்பதையும் தெரிரிவித்தல். அசித்திலே மறைந்து நிற்கும் சிறப்புடையதான ஆன்மாவுக்கும் நிர்வாககன் எம்பெருமான் என்பதையும் தெரிவத்தல். இதனால் தூவிலமான சிதத்தையும் அசித்தையுமட் உடலாகவுடையவன் எம்பெருமான் என்பதால் காரியமாம் தன்மை சொல்லுதல். உன்னால் அல்லது செல்லாத என்னை குணம் நடையாடாத தேசத்தில் தள்ளினாய் எனல். தெளிந்த ஞானத்தினை உண்டாக்கிப் பேற்றின் அளவும் செல்லாமல்

இருக்கின்ற இது, நளன் தமயந்திக்கு வழிகாட்டி விட்டாற் போலே இருப்பது.

(5) 'எல்லாப் பொருள்களையும் பாதுகாக்கின்ற நீ கைவிட்டால் என் காரியம் நான் செய்யவோ? பிறர் செய்யவோ? முடிந்தேனே அன்றோ?' எனல்.

'உன் பக்கல் நின்றும் அகற்றிவிட்டு வேறுகதி இல்லாத என்னைப் புறம்பே போக்குவதற்கு நினைத்தால், பின்னர் எந்த உபாயத்தை மேற்கொண்டு எந்தப் புருஷார்த்தத்தை முடித்துக் கொள்வேன்? ஐயோ! என்னுடையது என்பது ஒரு பொருள் உண்டோ? யான் என்பது ஒரு பொருள் உண்டோ? தன் காய்ச்சல் திரும்படி இரும்பினாலே உண்ணப்பட்ட நீர் போன்றுஅ என் அரிய உயிரை முற்றும் பருகுவதற்கு எனக்குத் தெவிட்டாத அமுதமாக இருந்து என்னை அகப்படுத்தினாயே!' என்கின்றார்.

அறிவின்மை, ஆற்றலின்மை, வேறுகதியின்மை ஆகிய வற்றிற்கெல்லாம் எல்லையான என்னை ஞானத்தாலும் ஆற்ற லாலும் நிறைவுற்றிருக்கின்ற நீ; அல்லது எல்லாப் பொருள் களையும் பாதுகாக்கின்றவனான நீ உன்பக்கலில் நின்றும் பிரித்துக் கைவிட்டாய். 'ஆள் பார்த்து உழி தரும் நீ' (நான். திருவந்.60) நமக்கு ஆட்படுபவன் கிடைக்ககூடுமோ என்று தேடித்திரியும் 'எதிர் சூழல்புக்குத் திரியும்' (திருவாய் 2.9.6) (=எனக்கெதிரே சூழ்ச்சியோடு அவதரித்துத்திரியும்) என்றபடி. கண்ணும் காலும் இல்லாதிருப்பான் ஒருவன், கண்ணும் காலும் உடையனாய் இருப்பான் ஒருவன் - யாருக்கு யார் வழி காட்டு வார்? ''உன்னால் அறியப்படாத பொருள் ஒன்றும் இல்லை; நீ ஒருவருக்கும் அறிய ஒண்ணாதவனாக உள்ளாய்''.

புகல் ஒன்று அடியேனை அளவில்லாத ஆற்றலையுடைய வனான நீ கைவிட்ட பின்பு நான் எந்த உபாயத்தைக் கொண்டு என்ன புருஷார்த்தைச் சாதிப்பது? ''என்னையே புகலாகப் ப்ற்று'' (கீதை 18:66) என்று உபதேசிக்க வேண்டுமோ? எனது என்பது என்? யான் என்பது என்? - ஒன்றும் இல்லை; முடிந்தேன் என்பது தானே. நெருப்பினாலே நன்கு காய்ச்சப் பெற்ற இரும்பு காய்ச்ல் தீர நீரை மமுற்றும் உண்ணுமாறு போலே, என் ஆன்மா வை முற்றும் உண்ணுவதற்காக, எனக்கு உன்னுடைய எல்லை யில்லாத இனிமையைக் காட்டி என்னை அகப் படுத்தினாய், என் விடாய் தீரக் கலந்தாய் என்று இருந்தேன்; உன்விடாய் தீரும்படி யாய் இருந்ததே அன்றோ? உனக்காக அன்றோ உன்னைக் காட்டினாய் என்றபடி.

அல்லது என் ஆருயிர் உன்னை ஆரப் பருக என்னவுமாம்; அப்போது காய்ந்த இரும்பு அக்காய்ச்சல் தீரும்படி நீரைப் பருகுமாறு போலே, என் ஆர் உயிர் என் தாபம் எல்லாம் தீரும்படி உன்னை அநுபவிக்க எனக்குப் பண்டு எல்லை இல்லாத இனியன் ஆனவனே என்று முடியும்.

''எம்பெருமான் உம்மதானால் அதற்குச் செய்ய வேண்டிய உபாயமும் உம்முடைய தலையிலே ஆகவேண்டா வோ?'' என்று எம்பெருமான் கூற, அதற்கு ஆழ்வார்'' 'எனக்கு உபாயமாக இருப்பது ஒன்று உண்டு' என்பதோர் பொருள் உண்டோ? பிரிந்து நிற்றற்குத் தகுதியாய் இருப்பது ஒரு 'நான் உண்டோ? சரீரியை (=ஆன்மாவை சரீரமாகவுடைய சர்வேசு வரனை) ஒழியச் சரீரத்தைப் பாதுகாப்பதற்கு வேறு சிலர் உளரோ?'' என்கின்றார்.

(6) பெரிய பிராட்டியார் பக்கல் போலே என் பக்கல் மிக்க காதலையுடையவனாய், என் உடலிலும் ஆன்மாவிலும் மிக விருப்பத்தைச் செய்து அநுபவித்த நீ என்னைக் கைவிடாமல் விரைவில் ஆட்கொண்டருள வேண்டும் எனல்.

''புனத்திலே உள்ள காயாம் பூ போன்ற நிறத்தினையும் செந்தாமரை போன்ற திருக்கண்களையும் சிவந்த கொவ்வைக் கனி போன்ற திருஅதரத்தையும் உடைய உனக்குத் தகுதியாக வடிவு படைத்திருக்கின்ற பெரியபிராட்டியாருக்கு அன்பனே! என் விஷயத்தில் அன்பே வடிவெடுத்தாற் போன்று இருப் பவனே! எனக்குத் தெவிட்டாத அமுதாய், என் உடலையும் இனிய உயிரையும் உன்னுடைய மனம் நிறைவு பெறாமலே பொருந்தி அநுபவித்தாய். இனிக் குறையும் அநுபவிக்க வேண்டும்'' என்கின்றனர்.

தேவர்கள் உண்ணும் அமுதம் போலன்று ஆழ்வாருடைய ஆராவமுது. ''எப்பொழுதும் நாள் திங்கள் ஆண்டு ஊழிஊழி தொறும் அப்பொழுதைக்கப்பொழுது என் ஆராவமுதமே'' (திருவாய் 2.5:4) என்னும் படியான அமுதமன்றோ? என் உடம்பையும் என் உயிரையும் எவ்வளவு அநுபவித்தாலும் இதயத்துக்குத் திருப்தி பிறவாமல் நிரந்தரமாக உண்டிட்டாய். நீயே முடிப்பதன்றோ அழகு? நடுவே குறை கிடக்க விடுவதுண் டோ? விட்ட மிகுதியைப் புசிப்பாருமுண்டோ? நீயே புசித்து நிறைவு செய்வாய்.

உன்னுடைய வடிவழகும் கண்ணழகும் வாயழகும் பிராட்டியின் சேர்த்தியழகும் அன்றோ என்னை ஈர்த்தன. 'உனக்கு ஏற்கும் கோலம்' என்று பிராட்டியின் அழகினை இங்கு ஏறிடுகின்றார். ஏறிடுதல் முழுவதும் ஒத்திருத்தால் அன்றோ? காளமேகம் போன்ற நிறம் முதலானவற்றை பொன்னிறத்தை யுடைய இவளிடத்தில் ஏறிடுதல் கூடுமோ? என்பதற்கு நியாயாதி தேசம் பண்ணுகின்றார் என்று அதற்கு விடை அருளிச் செய்கின்றார். இது சொருபத்தால் ஏறிடுதல் (அதிதேசம்)' அன்று. அவனைப் போன்று இவளும் அழகுடையவள் என்று சொல்வது. கோல மலர்ப் பாவைபக்கல் அன்புடையவன் என்று தோற்றி இராநின்றது; தம்பக்கல் அன்பு என்றும் அது உடையவன் என்றும் தெரிவிக்கப் போகிறதில்லை; ஞானத்தை யுடையவனை ஞானம் என்ற சொல்லால் கூறுவது போன்று.

(7) 'நான் பெரிய பிராட்டியைச் சார்ந்தவன் ஆகையாலே பிரளயத்திலே பூமிப் பிராட்டியை எடுத்து அவளோடே கலந்தாற் போலவும், கடலைக் கடைந்து பெரிய பிராட்டியாரோடே கலந்தாற் போலவும், பிறவிக்கடலில் மூழ்கின என்னை எடுத்து என்னோடே கலந்தருளி என்பக்கலிலே மிக்க காதலைச் செய்த உன்னைப் பெற்ற பிறகு இனித் தப்பவிடுவனோ?' என்கின்றார்.

''அழகிய தாமரைப் பூவில் வீற்றிருக்கின்ற பெரிய பிராட்டிக்கு அன்பனாக இருக்குமதனாலே என்னிடத்திலும் அன்புடையவனாக இருக்குவமனே! கரிய நிறத்தையுடைய ஒரு மலையானது இரண்டு பிறையைக் கவ்விக் கொண்டு புறப் பட்டாற் போன்று, ஒப்பற்ற அழகிய வராகமாகி, பாதாளத்தில் அழுந்திக்கிடந்த பூமியைத் தந்தத்திலேயே கொண்டு காப் பாற்றின எந்தையே! நீலநிறத்தையுடைய கடலைக் கடைந்த வனே! உன்னை அடைந்த பின்பு இனி நழுவ விடுவனோ!'' என்கின்றார்.

பிராட்டிபக்கல் உள்ள அன்பின் மிகுதியாகலே அந்த அன்பே காரணமாக அவளால் அங்கீகரிக்கப் பெற்ற (பரிக்ரக மான) என் பக்கலில் மிக்க அன்புள்ளவன் எனல். பட்டர் தம் முடைய இறுதிக் காலத்தில் அருளிச் செய்த வார்த்தை : ''பெரிய பிராட்டியாருக்கு அன்பன் ஆகையாலே அவளால் அங்கீகரிக்கப் பெற்ற நமக்கு அன்பனாம் என்று இப்பாசுரத்தை 'நம்முடையார்' துவயத்தின் அர்த்தத்தோடு அங்கீகரிப்பர் என்பது. ''திருமால் என்னை ஆளும் மால்'' (திருவாய் 10.7:6) என்னும் படியே

தம்முடைய அன்புக்கு அடி சொல்லுகின்றார். அந்தப்புரத்தைச் சார்ந்தவன் அன்றோ? என் அன்புக்கு அடி இல்லையோ?

ஒரு நீலமலை இரண்டு பிறையைக் கவ்வி நிமிர்ந்தாற் போல மிக அழகான மகாவராகமாய் பூமியை எயிற்றிடைக் கொண் டெடுத்த எம்பெருமான் எனல். பிறையில் மறுவைப் போன்ற தாயிற்று திருஎயிற்றில் கிடந்த பூமி. ''மாசு உடம்பில் நீர் வார நின்ற நிலை'' (நாச்.திரு.11.8) அன்றோ இவருக்கு ஆலத்தி வழிக்கும் விஷயமாயிற்று? ''பாசி தூர்த்துக் கிடந்த பார்மகள்'' (மேலது) என்கின்றபடியே காதலி அழுக்கோடே இருக்கத் தாமானபடியே வருவாராகில் காதலுக்குக் குறைவாம் அன்றோ என்னுதல். அவன் அழிவுக்கு இட்டவடிவிற்கே அன்றோ இவர் ஆலத்தி வழிக்கிறது? வராகத்தின் இனத்தோடு சேர்ந்ததாய் என்னுதல்; மூன்று உலகங்களையும் கண் செறியிட்டாற் போலே விட்டு வளர்ந்தபடி ஒப்பற்றதாய் என்னுதல். பிரளயம் கொண்ட பூமியை அண்டத்தினுடைய சுவரிலே புக்குத் திருஎயிற்றிற் கொண்டு எடுத்தாற் போலே பிறவிக் கடலில் மூழ்கின என்னை எடுத்தவன் எனல்.

ஆழ்வார் முதற்பிரபந்தமான திருவிருத்தத்தில் ''பெருங் கேழலார் தம் பெருங்கண் மலர்ப்புண்டரீகம் நம்மேல், ஒருங்கே பிறழவைத்தார்'' (45) என்று வராகப் பெருமானுடைய கடாட்ச விசேடமே தமக்கு நிதியானதென்று அருளிச் செய்து அப் பிரபந்தத்தின் முடிவிலும் ''ஏனத்துருவாய் இடந்த ஞானப் பிரானையல்லால் இல்லை நான் கண்ட நல்லதுவே'' (99) என்று அருளிச் செய்திருக்கையாலே, அவற்றுக்குச் சேர, திருவாய் மொழி தலைக்கட்டும்போதும் வராகவதார ப்ரசம்சையாகிறது. ''மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கக் கூற அவதரித்த மங்கையர் கோனும்'' (உபதேசரத்னமாலை-9) ''பன்றியாய் அன்று பாரகங் கீண்டபாழியான் ஆழியான் அருளே நன்று'' (பெரி.திரு.1.1:4) என்று தமது பெரிய திருமொழித் தொடக் கத்தில் இவற்றைப் பின்பற்றியே அருளிச் செய்தார் என்பர் சம்பிரதாயம் வல்லபெரியோர்.

பிராட்டியைப்பெறுதற்காகக் கடைந்த கடல் பாற்கடலா யிருக்க, 'நீலக்கடல்' என்று - கடைகின்ற பெருமான் காளமேக நிறத்தவனாகையாலே அவனது திருமேனியின் நிழலீட்டாலே கடலும் கறுத்ததாகத் தோன்றிற்று என்று காட்டுதற்காக. அல்லது எல்லா மருந்துகளையும் போடுகையாலே வந்த நிறவேறு

பாட்டால் சொல்லுகிறார் என்னவுமாம். அல்லது, 'நீலம்' என்பது நீல இரத்தினத்தைச் சொல்லுவதாகக் கொண்டு அவைமிக்கிருக்கின்ற காரணத்தால் 'இரத்தினாகரம்' என்ற பெயரை நோக்கிக் கூறுகின்றார் என்னவுமாம்.

பூமிப் பிராட்டியைப் பெறுதற்குச் செய்த செயலையும், பெரிய பிராட்டியைப் பெறுதற்குச் செய்த செயலையும் என்னைப் பெறுகைக்காகச் செய்து, என்னைக் கிட்டப் பெற்ற பின்பு உன்னைப் போகவிடுவனோ? நீ செய்த செயலின் பலத்திலே சேர்ந்த நான் கைப்பட்ட செல்வத்தை விடத்தக்கவனோ?

(8) 'சிறிதும் அறியமுடியாதவனான உன்னைப் பெற்ற பின்பு இனிவிட உபாயம் இல்லை' என்கின்றார்.

''ஆன்மாவோடு கலந்து கிடக்கின்ற இருவகைப்பட்ட நல்வினை தீ வினைகளை நியமிப்பவனாய், அவற்றிலே கட்டுப்பட்டுக் கிடக்கின்ற உயிரை நியமிப்பவனாய், அந்த நல் வினை தீ வினைகளினுடைய பலன்கட்கு நிர்வாககனாய், இவை எல்லாமாகின்ற மூன்று உலகங்கள் என்கின்ற தூற்றை உண்டாக்கி, இவ்வுலகமாகின்ற தூற்றிலே புகுந்து எங்கும் பரந்து ஒருவராலும் அறியமுடியாத தன்மையனாய் இருக்கின்றாய்; என்னுடைய நற்செயல்களுக் கெல்லாம் காரணமாய் இருப்பவனே! என்னுடைய பெரிய ஒப்பற்ற ஆன்மாவாய் இருக்கின்ற உன்னைப் பெற்ற பின்பு நெகிழவிடுவேனோ? விடேன்'' என்றவாறு.

எனக்கு மிகவும் தாரகனான உன்னைப் பெற்ற பிறகு இனி நான் விடுவேனோ? ஆன்மாவைப் பற்றிக் கிடக்கின்ற நல்வினை தீவினைகட்கு நிர்வாககன், நல்வினை தீவினைகளைச் செய்கின்ற ஆன்மாவுக்கு நிர்வாககன் அந்த இருவினைகளைச் செய்கின்றவன்தான் உனக்கு உரியவன் அன்றாகில் அன்றோ உன்னை விடலாவது? அந்த வினைகளின் பலனுக்கு நிர்வாககனாய் நல்வினை தீ வினைகளின் பலன் உன்னை யொழிய வேறு சிலரால் கிடைக்கின்றது என்று இருந்தேனாகில் அன்றோ விடலாவது? இவையெல்லாம் சொல்லுகிறது எதற்காக என்னில் நம்மிடத்தில் ஒன்றும் எதிர்பார்க்க நியாயமில்லை என்பதற்காக.

முற்றவுமான இம்மூவுலகங்களாகின்ற சம்சாரம் நீ இட்ட வழக்கு. அந்த சம்சாரம் புதர் போன்றது. விடத்தக்கதான இந்த உலக வாழ்க்கை உன்னையொழிய வேறு என்று நினைத்திருந் தேனாகில் அன்றோ விடலாவது? இந்த உலக வாழ்க்கை புக்க இடமும் போந்த இடமும் தெரியாமல் இருக்குமாதலின் 'பெருந்தூறு' எனப்பட்டது. இங்ஙனம் பெரும் தூறாயிருக்கின்ற சம்சார நிலமெங்கும் வியாபித்து ஒருவரும் அறியாதபடி நின்றாய். நீ வியாபித்திராதது ஓர் இடம் உண்டாகில் அன்றோவிடலாவது? எனக்கு முதல் புண்ணியமானவனே! நானாக நாடி ஓரடி வந்திலேன். அப்படியாகில் ஆறியிருக்கலாம். ஆனால் முதலே பிடித்து கிருஷிபண்ணினவன் நீயேயன்றோ? ஆக, இத்தகைய ஏதுக்களால் உன்னை இனிப்போக்குவேனோ? என்கின்றார்.

(9) முதல் தனி வித்தேயா? முழுமூ
வுலகுஆதிக்கு எல்லாம்!
முதல்தனி உன்னைஉன்னை எனைநாள்
வந்து கூடுவன்நான்
முதல்தனி அங்கும் இங்கும் முழுமுற்
றுறுவாழ் பாழாய்
முதல்தனி சூழ்ந்தகன்று ஆழ்ந்துயர்ந்த
முடிவி லீயோ! (திருவாய் 10.10:9)

(க-து) : எம்பெருமான் உலகங்களையெல்லாம் தனக்கு உடலாகக் கொண்டு எங்கும் பரந்தவனாயிருப்பது 'சாதாரண காரம்' எனப்படும். திருநாட்டிலே திவ்விய விக்கிரகத் தோடே எழுந்தருளியிருப்பது 'அசாதாரணகாரம்' எனப்படும். 'தீயெம் பெருமான் நீர் எம்பெருமான். திசையும் இருநிலனும், ஆய்எம் பெருமான் ஆகிநின்றால் அடியோம் காணோமால்' (பெரி.திரு. 4.9:5) என்று திருமங்கையாழ்வார் அருளிச் செய்தபடியே ஆழ்வார்கள் 'சர்வசாதாரண காரம்' கொண்டு மனநிறைவு கொள்வர்கள் அல்லர். ஏனெனில் ஜகத் காரணனாயிருக்கும் இருப்பு உகந்தார்க்கும் உகவாதார்க்கும் பொது வாயிருந்தது. அசாதாரண காரம் அப்படிப்பட்டதன்று. ஆகவே அதனைக் கண்டே மனநிறைவு பெறவேண்டும் என்றிருப்பார்கள். அப்படிப்பட்ட மன நிறைவு தந்தருள வேண்டும் என்கின்றார் இப்பாசுரத்தில்.

(பொ.ரை): "முழுவதுமான மூன்று உலகங்கள் முதலான எல்லாப் பொருள்களுக்கும் நிமித்த காரணமும் முதற்காரணமும் ஆனவனே! அண்டத்துக்கு அப்பாலும் அண்டத்துக்குள்ளும் இருக்கின்ற முழுவதுமான எல்லாப் பொருள்களிலும் பரந்திருந்து அவற்றை வாழச் செய்கின்ற முதன்மை பெற்ற ஒப்பில்லாத மூலப்பகுதிக்கு ஆன்மாவாய், முதன்மை பெற்றவனவாய், ஒப்பில்லாதவனவாய்ச் சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந் திருக்கின்ற முடிவில்லாத ஆன்மாக்களுக்கு ஆன்மாவாய் இருப்ப வனே! முதன்மை பெற்றவனாய் ஒப்பில்லாதவனாய் இருக்கின்ற உன்னை, பரமபதத்தில் எழுந்திருக்கின்ற உன்னை எப்பொழுது வந்து கூடுவேன்?"

விளக்கம் : முதல் தனி வித்தேயோ : இங்கு முதல் - நிமித்த காரணம் ; தனி - துணைக் காரணம் ; வித்து - முதற் காரணம். 'மூவுலகு ஆதிக்கு எல்லாம் முதல் தனி வித்தேயோ!' என்று கூட்டி முடிக்க.

முதல் மூஉலகு ஆதிக்கு எல்லாம் : மூவுலகு : கிருதகம் - கற்பாந்த காலத்தில் அழிவது; அக்ருதகம் - கற்பாந்த காலத்து அழியாதது; கிருதகாகிருதகம் - அழிந்ததும் அழியாமலுமாக இருப்பது என்ற மூவகைப்பட்ட அண்டங்களைச் சொல்வது 'முழு' என்பதால், "அந்த மூலப்பகுதியில் ஆயிரம் அண்டங்களி னுடைய ஆயிரம் பதினாயிரமும் இப்படிப்பட்ட அண்டங்கள் பல கோடிகள் இங்கு இருக்கின்றன" (விஷ்ணுபுரா 2.7:27) என்று சொல்லப் பெற்ற எல்லை இல்லாத அண்டங்கள் என்பது பெறப்படுகின்றது. "ஒன்றனுக்கொன்றுநின்றெழில் பகரின், நுற்றொரு கோடியின் மேற்படி விரிந்தன"[10] என்பர் மணிவாசகப் பெருமான்.

- இங்கு

நடைபெறும் உலகங்கள் கணக்கில வாம்!
தொக்கன அண்டங் கள் - வளர்
தொகைபல கோடிபல் கோடிக ளாம்![11]

என்று பாரதியாரும் பகர்வர். 'ஆதி' என்பதால் இந்த அண்டங்கட்குக் காரணமான ஆவரணங்களை (=மதிள்களை)ச் சொல்லுகிறது என்பதாகக் கொள்ள வேண்டும். **முதல் தனி**

10. திருவா. திருவண்டப்பகுதி - அடி (3-4)

11. பா.க.தோ.பா. கோமதியின் மகிமை - 4

உன்னை : முதல்வனாய், ஒப்பு இல்லாமல் குணம் விபூதி முதலியவற்றால் நிறைந்தவனாய், உலகத்தை உருவமாகக் கொண்டிருக்கின்ற உன்னை. ஆக, இதுவரை லீலா விபூதியோடு இருக்கின்ற இருப்பு சொல்லப் பெற்றது.

இனிமேல் சொல்வது நித்திய விபூதியைப் பற்றியது: **(இரண்டாவது) உன்னை** - நீயாகிய உன்னை என்பர் நம் பிள்ளை. அசாரணகாரத்தோடு கூடிய உன்னை என்பது தாற் பரியம். அதாவது பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் நிலையைக் குறிப்பிடுகின்றது. இஃது எப்படி? "ஒண் தொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்பக் கண்டசதிர்" (திருவாய் 4.9:10) என்ற ஆழ்வார் திருவாக்கால் அவனையும் அவளையும் சொல்லவே பரமபதம் அடங்கிற்று அன்றோ?

இன்னும், 'உன்னை' என்பதற்கு ஈட்டாசிரியர் குறிப்பிடும் அற்புத விளக்கத்தையும் காண்போம். "முடிச்சோதியாய் முகச்சோதி மலர்ந்ததுவோ?" (திருவாய். 3.1:1) என்று ஐயுறும் படி இருக்கின்ற திருமுடியும்; "மாயன் குழல், விள்கின்ற பூந்தண் துழாய் விரைநாற வந்து" (மேலது. 7.7:9) என்பதில் குறிப்பிட்ட திருக்குழலும்; "கோளிழைத் தாமரையும் கொடியும் பவளமும் வில்லும், கோளிழைத் தண்முத்தமும் தளிரும் குளிர்வான பிறையும், கோளிழையா வுடைய கொழுந்சோதி வட்டம்கொல்" (மேலது. 7.7:8) என்னும்படியான அழகிய திருமுக மண்டலமும்[12] நாய்ச்சி மாருடைய திருக்கரங்களின் ஆபரணங் களாலே அடையாளம் செய்யப் பெற்றதாய் கமுகினுடைய இளங்கழுத்தையும் சங்கையும் ஒத்ததாகவுள்ள திருக்கழுத்தும் "கற்பகக்கா அனநற் பலதோள்களும்" "(திருவாய் 6.6:6); பெரிய பிராட்டியார்க்குக் கோயிற் கட்டணமாய் என்றும் அநுபவித்துக் கொண்டே இருக்கும் இருப்பையும் "அகலகில் லேன் இறையும்" (மேலது 6.10:10) என்று அவளைப் பிச்சேற்றும்படி "குருமாமணிப் பூண்குலாவித் திகழும் திருமார்பும்" (பெரியாழ். திரு. 1.3:10); "உள்ளத்துள் நின்று உலாகின்றதே"[13] (அமலனாதி-4) என்று கூறியவாறு நித்தியர் முக்தர் இவர்களுடைய உள்ளங்களிலே

12. பராங்குச நாயகி உரு வெளித் தோற்றத்தில் கண்ட எம்பெருமானை வருணிப்பது.

13. 'திருப்பாதாதிகேசம்' - வருணிப்பது.

அழகு சென்று ஏறுகின்ற உதரபந்தமும்; வனப்பாகிய வாரிதி இட்டருளப் பெற்றுச் சுழித்தாற் போலே இருக்கின்ற திருவுந் தியும்; ஓர் அடைமொழி இடவேண்டாததாய் உள்ள "அல்குலும்" (திருவாய் 5.5:8) என்னும்படி இருக்கின்ற அல்குலும்[14] சிற்றிடையும்; மாலைக் காலத்தே தோன்றுகின்ற செந்நிறத்தாலே அழகு பெற்ற ஆகாசம் போலே இருக்கத் திருஅரை பூத்தாற் போலே இருக்கின்ற "அந்திபோல் நிறத்து ஆடையும்" (அமலனாதி-3); வாழை மரம் முதலானவற்றைப் போன்று கம்பீரமான திருத் தொடைகளும்; தாமரை நாளம் போலே முட்களோடு கூடிய[15] திருக்கணைக் கால்களும், சங்கு, சக்கரம், கற்பகம், கொடி, தாரை அங்குசம், வஜ்ஜிரம் ஆகிய அடையாளம் பண்ணப் பட்டதாய், நாய்ச்சிமாருங் கூடக் கூசித் தொட வேண்டும்படி மெல்லடியாய் "தேனே மலரும் திருப் பாதம்" என்கின்றவாறு எல்லையில்லாத இனியனவான திருவடி களையும் உடையையாய் ஏழு உலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருந்தருள்கின்ற உன்னை;

'எனைநாள் வந்து கூடுவன் நான்:' திருநாட்டின் சுவடு அறிந்தவனும் அசாதாரண விக்கிரக சேவையை ஆசைப்பட்ட வனுமான நான் என்று வந்து கூடுவேன்? **நான்** - அவ்வடிவினைக் காண ஆசைப்பட்ட நான். 'முதல் தனி அங்கும் இங்கும் முழு முற்று உறு வாழ் பாழ் ஆய்:' முதன்மை பெற்றதாய், உபமானம் இல்லாததாய், அங்கும் இங்குமான 'மகத்' தத்துவங்கள் முழு வதிலும் பரந்து, மக்களுக்குப் போகங்களையும் மோட்சத்தையும் விளைவித்துக் கொள்ளுவதற்கு ஈடாகக் கருநிறமாய் உள்ள மூலப் பகுதிக்கு ஆன்மாவாய் இருப்பது. இங்கு முதல் - மூலப் பகுதியை நோக்கத் தான் முதன்மை பெற்றதாய் நியமிக்கக் கூடியதாய், தனி உவமானம் இல்லாததாய் என்று பொருள்படுகின்றது. சூழ்ந்து - மூலப்பகுதியிலும் மூலப் பகுதியாலாகிய பொருள்களிலும் பரந்து (வியாபித்து); அகன்று ஆழ்ந்து உயர்ந்த - பரந்திருக்கு மிடத்தில், தர்ம பூத ஞானத்தாலே பத்துத் திக்குகளிலும் பரந்து உயர்ந்த; முடிவு இலீயோ - அளவிட்டு அறிய முடியாத ஆன்ம தத்துவத்திற்கு முடிவு இல்லாதவனே. முடிவு என்பது அழிவினைக் குறிப்பதாகக்

14. அரையின் (இடுப்பின்) கீழே இருக்கும் ஓர் உறுப்பு (Buttocks) சந்துபட்டை; இரு பாலார்க்கும் பொதுவானது.வைணவ நூல்களில் புட்டகம் என்று கூறப்பெற்றிருப்பது.

15. பிராட்டிமார் தீண்டுகையால் கணைக்கால்கள் மயிர்க் கூச்செறிந்திருக்கையால் 'முட்களோடு கூடிய திருக்கணைக்கால்களும்' என்கின்றார்.

கொண்டு, உடலைப் போன்று அழிந்து போவதன்றி என்றும் உள்ளதான ஆன்மத்துவம் என்றும் பொருள் பொள்ளலாம்.

பாசுரத்தை மீண்டும் நோக்குவோம். முதல்தனி அங்கும் இங்கும் முழுமுற்று உறு வாழ்பாழாய், முழுமுவுலகு ஆதிக்கு எல்லாம் முதல் தனிவித்தாய், முதல் தனி சூழ்ந்து அகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவிலியாய் இருக்கின்ற முதல் தனி உன்னைக் கண்டேன்; பரமபதத்திலே நித்தியசூரிகளுக்கு இனியனாய் இருக்கின்ற உன்னை எனை நாள் வந்து கூடுவன் நான்? காரண காரியங்களான இரண்டு நிலைகளையுடைய சித்துக்கும் அசித்துக்கும் நிர்வாககனாய் இருக்கின்ற இருப்பைக் காட்டி அநுபவித்த இவ்வளவு போதாது; உனக்கே உரிய விக்கிரகத்தையுடையவனாய் பரமபதத்திலே இருக்கும் இருப்பைக் கண்டு அநுபவிக்க வேண்டும்.

(10) சூழ்ந்து அகன்று ஆழ்ந்துஉயர்ந்த முடிவில்
பெரும்பா ழேயோ!
சூழ்ந்துஅத னில்பெரிய பரநன்
மலர்ச்சோ தீயோ!
சூழ்ந்துஅத னில்பெரிய சுடர்ஞான
இன்ப மேயோ!
சூழ்ந்துஅத னில்பெரிய என்அவா
அறச்சூழ்ந் தாயே! (திருவாய் 10.10:10)

(க-து): பெரிய பிராட்டியார் ஆணையிட்டுத் தடுத்துப் பெரிய ஆர்த்தியோடே கூப்பிட்ட ஆழ்வாருடைய காரியம் நிறைவேற்றியே தீர வேண்டும் என்ற நிலை எம்பெருமானுக்கு ஏற்பட்டது. அதனால் இவர் வேண்டிக் கொண்டபடியே எல்லாவற்றாலும் நிறைந்தவனாய் வந்து கலந்தருளினான். அது கண்டு 'என்னுடைய அளவற்ற விடாயெல்லாம் தீர வந்து என்னோடு கலந்தருளினாய்; என்னுடைய விருப்பமும் ஒருபடி நிறைவேற்றப்பட்டது' என்று பேரின்பம் பொழிய விண்ணப்பம் செய்கின்றார்.

(பொ.ரை) : ''தன் காரியத்தின் கூட்டமான மகத்து முதலான தத்துவங்களை அடங்கச் சூழ்ந்து பத்துத் திக்குகளிலும் புகுந்து எங்கும் பரந்து அழிவு இல்லாததாய் அளவிடக் கூடாததாய் மக்களுக்குப் போக மோட்சங்களை விளைத்துக் கொள்ளலாம் நிலமான மூலப் பகுதிக்கு ஆன்மா ஆனவனே! அந்த

மூலப்பகுதியை ஞானம் என்னும் குணத்தால் வியாபித்து அதனைக் காட்டிலும் பெரியதாய் அதற்கு மேலானதாய் விவ காரங்கள் இல்லாமையாலே சிறந்ததாய் மலர்ந்த ஒளி உருவமான ஆன்மாவிற்கும் ஆன்மா ஆனவனே! இவ்விரண்டனையும் வியாபித்து அவற்றைக் காட்டிலும் பெரியதாய் கல்யாண குணங்களால் பிரகாசிக்கின்ற ஞான ஆனந்த இலட்சண சொரூபத்தையுடையவனே! மேலே கூறிய அசித்து சித்து ஈசுவரன் என்று மூன்று தத்துவங்களையும் சூழ்ந்து கொண்டு அவற்றைக் காட்டிலும் பெரியதான என் அவா நீங்கும்படி வந்து கலந்தாய்'' என்கின்றார்.

விளக்கம் : பாசுரத்தின் மூன்று அடிகளும் முறையே அசித்து, சித்து, ஈசுவர தத்துவங்களைக் கூறுகின்றன. ஈற்றடி ஆழ் வாருடைய அவாவின் பெருக்கினைத் தெரிவித்து, அத்தகைய அவா குறையும்படி சர்வேசுவரன் வந்து கலந்த தன்மையைக் கூறுகின்றது.

எம்பெருமான் அசித்து சித்து ஆகியவற்றை உடலாகக் கொண்டு தான் அவற்றின் ஆன்மாவாக இருப்பவன் என்பது வைணவ தத்துவம். தன்னிடத்து உண்டான மகத்து முதலான தத்துவங்களைப் பத்துத் திக்கிலும் புக்கு எங்கும் ஒக்கப்பரந்து, என்றும் உள்ளதாய், அளவிட முடியாததாய் மக்களுக்குப் புருஷார்த்தை விளைவித்துக் கொள்ளலாம்படியான நிலமான மூலப்பகுதிக்கு ஆன்மாவானவன் எம்பெருமான். இந்த அசித்துக்குள்ளும் பரந்து, அதனைக் காட்டிலும் பெரியதாய், அதனை ஏவுகிறது ஆகையால் மேலானதாய், விகாரம் முதலியன இல்லாமையாலே சிறந்ததாய், மலர்ந்த ஒளிஉருவமான ஆன்மப் பொருளுக்கும் ஆன்மா ஆனவன் எம்பெருமான். பேறு பெறுகின்ற இப்போது மூலப்பகுதியையும் ஆன்மாக்களையும், 'பாழேயோ, சோதியோ' என்று சாமாநாதி கரணமாக (ஒன்றாக)ச் சொல்லுகிறதற்குக் காரணம் தம்முடைய காதல் பெரியவற்றிலும் பெரியது என்று விளக்குவதற்காக, இந்த இரண்டுக்கும் ஈசுவரனை ஒழியத் தோன்றுதல் நிலைத்தல் இல்லாமையாலே அவ்வளவும் சொல்லுகின்றது.

சுடர் ஞான இன்பமேயோ?: இதற்கு இரண்டு பொருள். முதற் பொருளில் 'சுடர் இன்ப ஞானேயோ? என்று மாற்றுக. ஞானமேயோ?' என்றது, ஞானத்திற்கு இருப்பிடமானவன் என்ற பொருளில். 'சுடர்' என்பதற்கு நினைவின் உருவமான

சங்கல்பரூபமான என்பது பொருள். தடை இல்லாத ஒளியுடன் கூடிய தாகையாலே சங்கல்பத்தைச் 'சுடர்' என்ற சொல்லால் அருளிச் செய்கின்றார். 'சுடர் ஞான இன்பமேயோ?' அந்த ஞானத்தையும் இன்பத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டு அவற்றுக்கு நிர்வாகமாய் நினைவின் உருவமாய் சுகத்தின் உருவமான ஞானத்தை உடையவனே என்று நினைவின் உருவமான ஞானத்தினைச் சொல்லுதல்; அல்லது 'சுடர் ஞான இன்பமேயோ' என்று ஒளி உருவனும் இன்பத்தின் உருவனுமானவனே என்று எம்பெருமானைச் சொல்லுதல். சூழ்ந்து - மேலே கூறிய மூன்று தத்துவங்களையும் விளக்கு தலைக் கொண்டு, **அதனில் பெரிய** - அவை குளப்படியாம்படி பெரிதான, **என் அவா** என்னுடைய காதலை, **அறச் சூழ்ந்தாயே** - அதனினும் பெரிய உன் காதலைக் காட்டி வந்து கலந்தாயே! என்னுடைய கூப்பீடும் ஒருபடி ஓவும்படி பண்ணிற்றே! பெருமாள் காட்டில் நின்று மீண்டெழுந்தருளி பரதாழ்வானை மடியிலே வைத்து உச்சி மோந்து உகந்து அணைத்தாற் போலே யாயிற்று, ஆழ்வாருடைய விடாய்கெடும் படி கலந்தது.

(11) அவாஅறச் சூழ்அரியை அயனை
அரனை அலற்றி,
அவாஅற்று வீடுபெற்ற குருகூர்ச்
சடகோபன் சொன்ன
அவாஇல் அந்தாதிகளால் இவைஆ
யிரமும் முடிந்த
அவாஇல் அந்தாதிஇப்பத்துஅறிந்தார்
பிறந்தார் உயர்ந்தே (திருவாய் 10.10:11)

(க-து): பரபக்தி, பரஞானம், பரமபக்தி நிலைகள் என்று மூன்று உண்டல்லவா? 'சூழ்விசும்பணி முகில்' *(10.9)* திருவாய் மொழிக்கு முன் வரையில் பரபக்தி நிலையாகச் சென்றது 'சூழ்விசும்பணி முகில்' *(10.))* திருவாய்மொழி பரஞான நிலையில் சென்றது. 'முனியே நான்முகனே' *(10.10)* என்கின்ற இத்திருவாய்மொழி பரமபக்தி நிலையில் சென்றது. பரமபக்திக்கே 'முடிந்தஅவா' என்று பெயர். இப்படிப்பட்ட பரமபக்தி பேசுவித்த இத்திருவாய் மொழிவல்லவர்கள் இவ்விருள் தரமா ஞாலத்தில் பிறந்திருந்தாலும் 'நித்தியசூரிகளே இவர்கள்' என்னும் படியான பெருமையுடன் பொலிவார்கள் என்று பயன் உரைக்கப்படுகிறது.

(பொ. ரை) : பிரமனுக்கு அந்தரான்மாவாக உள்ளவனும். சீவனுக்கு அந்தரான்மாக உள்ளவனும், தன்னைக் காண வேண்டும் என்ற அவாவினையுடைய அடியார்களுடைய அவா தீரும்படி வந்து கலக்கும் அரி என்னும் திருப்பெயரை யுடையவனுமான எம்பெருமானைக் கூப்பிட்டு, உலகப்பற்று நீங்கி, துக்கம் அற்றவரான திருக்குருகூரில் அவதரித்த சடகே ாபராலே பரபக்தியால், அருளிச் செய்யப் பெற்ற அந்தாதித் தொடையாக அமைந்த ஆயிரம் திருப்பாசுரங்களும் பரமபக்தி யால் அருளிச் செய்த அந்தாதியாகிய இப்பத்துத் திருப்பாசுரங் களையும் ஓதவல்லவர்கள் உயர்ந்த பிறவியினை யுடையவர்கள் ஆவர்.

விளக்கம் (ஈடு) : முடிவில் எல்லாக் குற்றங்களுக்கும் எதிர்த்தட்டு ஆனவனாய்[16] மங்களங்கட்கெல்லாம் நிலைக் களனாய், ஞான ஆனந்தங்களையே வடிவாக உடையனாய், உயர்வுஅற உயர்நலம் உடையவனாய், வனப்பு முதலான வற்றோடு[17] கூடிய நித்தியமான மங்களம் பொருந்திய திரு மேனியை (விக்கிரத்தை) உடையவனாய், அளவு இல்லாத[18] திவ்விய ஆபரணங்களால் நிறைந்தவனாய், எல்லா ஆயுதங் களையும் உடையவனாய்,[19] திருமகள்,[20] பூமகள் ஆய்மகள் இவர்கட்கு நாயகனாய், அஞ்ச வேண்டாத[21] இடங்களிலும் அஞ்சக் கூடியவர்களான ஆதி சேடன் பெரிய திருவடி முதலான நித்திய சூரிகளாலே எப் பொழுதும் தொண்டு செய்யப் பெறுகின்ற திருவடித் தாமரை களை உடையவனாய், வை குண்டத்தில் எழுந்தருளியிருப்ப வனாய், சர்வேசுவரனாய், தன்னால் ஏவப் பெறுபவர்களான[22] பிரமன் சிவன்

16. 'மன்னக மலற' (1.1:2) என்கின்ற பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றி 'எல்லாக் குற்றங்கட்கும்' என்று தொடங்கப் பெறுகின்றது.

17. 'துயர் அறுசுடரடி' (1.1:1) என்பதனைத் திருவுள்ளம்படி 'வனப்பு முதலானவற்றோடு' என்று தொடங்கப் பெறுகின்றது.

18. 'பலபலவே ஆபரணம்' (2.5:6) என்பது போன்றவைகளைத் திருவுள்ளம் பற்றி 'அளவு இல்லாத' என்று தொடங்கப் பெறுகின்றது.

19. 'ஒண்சங்கு கதைவாள் ஆழியான்' (8.8:1) என்பது போன்றவைகளைத் திருவுள்ளம் பற்றி 'எல்லா ஆயுதங்களையும் உடையவனாய்' என்று தொடங்கப் பெறுகின்றது.

20. 'தேவிமார் ஆவார்' (8.1.:1) என்பது போன்றவைகளைத் திருவுள்ளம் பற்றி 'திருமகள்' என்று தொடங்கப் பெறுகின்றது.

21. 'அயர்வறும் அமரர்கள் அதிபதி' என்பது போன்றவைகளைத் திருவுள்ளம் பற்றி 'அஞ்ச வேண்டாத' என்று தொடங்கப் பெறுகின்றது.

22. 'அயனை அரனை' (10.10:11) என்பதனைத் திருவுள்ளம்பற்றி 'தன்னால் ஏவப்படுபவர்களான' என்று தொடங்கப்பெறுகிறது.

முதலானவர்கட்கும் அந்தரான்மாவாய், தன்னைக் காண வேண்டும்[23] என்று விடாய் கொண்டு அடைகின்ற அடியார் களுடைய விடாய் தீரக் கலக்கும் தன்மையான எம்பெருமானைக் காண வேண்டும் என்று கூப்பிட்டு, அவனைப் பெற்றுத் துக்கம் அற்றவராய், எல்லாத் தடைகளும் நீங்கினவரான ஆழ்வாரின் பக்தியினுடை[24] தூண்டுதல் காரணமாகப் பிறந்தது ஆயிரம் திருவாய் மொழியும்; அவற்றில் வைத்துக் கொண்டு, மேலே கூறியவைபோல் அல்லாமல் பெற்று அல்லது தரிக்கவொண் ணாதபடியான பரமபக்தியாலே பிறந்த அந்தாதியான இத்திரு வாய்மொழி.

முதல் பத்திலே 'அஞ்சிறைய மடநாராய்' (1.4) என்ற திருவாய் மொழியில் 'அருளாத நீர்' (6) என்ற திருநாமம் சாத்தின ஆழ்வாரே இப்போது 'அவாஅறச்சூழ்அரி' என்று திருநாமம் சாத்துகின்றார். ஆசைதீர வந்து கலந்த சர்வேசுவரன் என்றபடி. அரி என்பது அடைந்தவர்களின் தாபங்களை அரிபவன் என்பது பொருள். அப்பொருள் இப்போதுதான் நிலை பெற்றது என்று காட்ட இங்கே **'அரியை'** என்கின்றார். உடனே **'அயனை அரனை'** என்றது அயனான நான்முகனுக்கும் அரனான சிவனுக்கும் அந்தர்யாமியானவனை என்றபடி. அயனை அரனை என்று சாமாநாதி கரண்யத்தால் (ஒன்றாகச் சொல்லு வதால்), பிரமன் சிவன் என்னும் இவர்கள் ஈசுவரர்கள் ஆவரோ? என்று மக்கள் கொள்ளும் ஐயத்தை அறுக்கின்றார். அவ்ர்களது உண்மை, நிலைபேறு, செய்தல், செய்யாமை இவை சர்வேசு வரனுடைய அதீனமாகையாலே அவர்கட்குப் பாரதந்திரியமே சொரூபம்; தலைவர்களாக இருக்கும் தன்மை அவர்களுடைய செயல்கள் காரணமாக வந்தவை இத்தனையும்.

அலற்றி அவா அற்று வீடு பெற்ற : கூப்பிட்டு அவனைப் பெற்று எல்லாத் தடைகளும் (சமஸ்பிரதி பந்தகங்களும்) நீங்கியவர் ஆகையாலே துக்கம் இல்லாதவரான ஆழ்வார் அருளிச் செய்த, அவாவில் அந்தாதிகளால் இவை ஆயிரமும்: இத்திவ்வியப் பிரபந்தத்திற்கு 'திருவாய்மொழி' என்று திருநாமம்

23. 'அவா அறச்சூழ் அரியை' என்றதனைத் திருவுள்ளம் பற்றித் 'தன்னைக் காண வேண்டும்' என்று தொடங்கப் பெறுகின்றது. (10-10;11)

24. 'அவாவில் அந்தாதிகளால் இவை ஆயிரமும்' என்றதனைத் திருவுள்ளம் பற்றிப் 'பக்தியினுடைய' என்று தொடங்கப் பெறுகின்றது. (10.10:11)

புகழ் பெற்றிருந்தாலும், ஆழ்வார் (பக்தியின் தூண்டுதலால்) அவதரித்த அந்தாதித் தொடையான திவ்வியப் பிரபந்தம் என்றபடி. தத்துவார்த்தங்களையெல்லாம் பராசரபகவான் மேலும் மேலும் விரிவாகக் கூறியது, மைத்திரேய பகவான் வினாக்கள் கேட்ட பின்பு ஆகையாலே அந்த மைத்திரிய பகவான் இடத்தில் இங்குப் பக்தி (அவா) நிற்கின்றதாயிற்று. விஷ்ணு புராணத்திற்கு மைத்திரேய பகவான் காரணமானாற் போலே, திருவாய்மொழி என்ற இப்பிரபந்தத்திற்கு இவருடைய பக்தி மூலம் என்றபடி. அல்லாமல், அவா உபாத்தியாயராய் நடத்த, 'நடந்த ஆயிரம்' என்றும் சொல்லலாம். ஆழ்வாருக்குப் பிறகு தங்களுடைய கவித்துவத்தைக் காட்டுவதற்கென்று புகழ் பெற வேண்டும் என்றும் பிரபந்தங்கள் இயற்றுவார் பலர் உண்டு. அப்படியல்லாமல் இவருடைய பிரபந்தம் பக்தியின் உறைப் பாலே பிறந்ததாயிற்று இவ்வாயிரம். அவற்றை விட்டு இவ்வாழ் வாரின் பிரபந்தத்தைப் பற்றுகைக்கு அடி, இவருடைய காதற் பெயருக்கு வழிந்து புறப்பட்ட சொல்லாதலால் அன்றோ?

இவ்விடத்தில் ஆசாரிய ஹிருதயத்தின் (188) ''நீர் பால் நெய் அமுதாய் நிரம்பின ஏரி நெளிக்குமா போலே ...... அவாவில் அந்தாதி என்று பேர்பெற்றது'' என்ற சூத்திரத்தின் மணவாள மாமுனிகளின் வியாக்கியானம் சேவிக்கத்தக்கது. ''நீர் பாலாய், பால்நெய்யாய், நெய் அமிர்தமாய் நிரம்பின ஓர் ஏரி[25] பெறாமல் நெளிந்து உடையுமாறு போலே, கர்மத்தாலும் ஞானத்தாலும் உண்டாகின்ற பக்தியின் கட்டத்திலே பகவானு டைய திருவருளாய், அது காரணமாகப் பரபக்தி தொடங்கிப் பிறக்கையாலே ஞானம் முதலிலே பரபக்தி ரூபமாய், பரபக்தி யானது பரஞானமாய், பரஞானமானது பரமபக்தியாய், அந்தப் பரபக்தி முதலியவைகளால் நிறைந்த ஞானமாகிய அமுதக் கடலானது தான் தரித்திருக்கும் பொருட்டு வெள்ளிமிட வேண்டும் என்ற விருப்பம் பிறந்த நெளிகின்றவாய் கரையாலே

25. நீர் பாலாய், பால் நெய்யாய், நெய் அமுதாய் அதனாலே நிரம்பின ஓர் ஏரிக்கு ஆழ்வாரை உவமிக்கின்றார் இச்சூத்திரத்தில் கர்மத்தாலும் ஞானத்தாலும் உண்டாகின்ற பக்தியின் நிலையிலே இறைவனுடைய திருவருள் நிற்க. அது காரணமாக பரபக்தி தொடங்கிப் பிறக்கையாலே, ஞானம் முதலில் பரபக்திருபமாய், பரபக்தியானது பரஞானமாய், பரஞானமானது பரமபக்தியாய் முதிர்ந்தபடியை நோக்குங்கால் நீர் பால் நெய் அமுதாய் நிரம்பின ஓர் ஏரியாக ஆழ்வாரைக் கொள்ளத் தட்டில்லை.* நீரின் நிலையிலே ஞானம். பாலின் நிலையிலே பரபக்தி, நெய்யின் நிலையிலே பரஞானம். அமுதின் நிலையிலே பரமபக்தி.

சொற்கள் தாம் 'நாம் இங்குத் தொண்டு செய்தோமாக வேண்டும்' என்று 'என்னைக் கொள்க, என்னைக் கொள்க' என்று மேல் விழுகையாலே நெருங்கிக் கொண்டு, சொற்கள் உருவகமாகப் பெருக்கெடுத்து, இப்படிப் பரபக்தி முதலிய மூன்று நிலையை அடைந்து பக்தியாலே தூண்டப் பெற்று அவதரிக்கையாலே, 'அவாவில் அந்தாதி' என்று பேர் பெற்றது; பக்தி பலாத்காரத்தால் பிறந்த அந்தாதியான ஆயிரம் என்று பேராயிற்று'' எனல்.

முடிந்த அவாவில் அந்தாதி இப்பத்து : தரிக்க ஒண்ணாத படியான பரமபக்தியாலே பிறந்ததாயிற்று இத்திருவாய்மொழி. முடிந்த அவா - பரமபக்தி. இந்த அவாவிற்கு உதவிற்றிலனாகில் ஈசுவரனுக்கே சைதந்யம் (சித்தின் தன்மை, ஞானம்) இல்லாமல் ஒழியும். பகவானது திருஅருள் பாதியும் தாங்கள் பாதியுமாகச் சொல்லுபவர்கட்கு சரீரத்தின் முடிவிலே இப்பரபக்தி முதலான வைகள் உண்டாம்; இவர் அடியிலே மயர்வற மதிநலம் அருளப் பெறுகையாலே எழுந்தருளியிருக்கும் போதே உண்டாயின.

அறிந்தார் பிறந்தார் உயர்ந்தே : இதனை அறிந்தவர்கள் இந்த உலகிலே பிறந்திருந்தும் நித்தியசூரிகளோடு ஒப்பர். எம்பெருமான் இந்நிலத்தில் பிறந்திருந்தாலும் உயர்த்தியில் குறைவற்றிருப்பது போன்று, இத்திருவாய்மொழி வல்லார்களும் ப்ராக்ருதல்களின் கருத்தாலே சம்சாரிகளாய், தத்துவ ஞானத்தின் திருவுள்ளத்தாலே நித்திய முக்தர்களாய் விளங்குவார்கள். **பிறந்தே உயர்ந்தார்:** சர்வேசுவரனுடைய அவதாரத்தைப் போன்றதாம் இவர்களுடைய பிறப்பும்.

மணவாள
மாமுனிகள்

மணவாள மாமுனிகள்

இப்பெருமகனார் கூறுவது :

இந்தவுடல் விட்டுஇரவு மண்டலத் தூடுஏகி
இவ்வண்டம் கழித்திடையில் ஆவரணம் ஏழ்போய்
அந்தமில்பாழ் கடந்துஅழகார் விரசைதனில் குளித்தங்கு
அமானவனால் ஒளிக்கொண்ட சோதியும் பெற்றஅமரர்
வந்தெதிர்கொண்டு அலங்கரித்து வாழ்த்தி வழிநடத்த
வைகுந்தம் புக்குமணி மண்டபத்துச் சென்று
நந்திருமால் அடியார்கள் குழாங்களுடன் கூடும்
நாளெனக்குக் குறுகும்வகை நல்கென் எதிராசா.[1]

அர்ச்சிராதி கதி, பரமபதத்தில் சீவர்கள் நிலை இவற்றை முன்னோர் கூறியதைப் போலவே இவரும் உரைப்பர்.

1. ஆர்த்தி பிரபந்தம் - 24



First Paper: *என்ன ஆச்சரியம்?* **"Enna Aacharyam !" [1949]**

ஓர் அறிமுகம்

பேராசிரியர்

ந சுப்பு ரெட்டியார்







Six Goswamis in Vaishnavism

Books Published : **135 + 1**
Papers Published : **200** [Tamil 173 + English 27]
Endowments established: **10**
Endowment Lectures : **12**
Awards received: **8**
Prizes won : **14**
Titles conferred : **8**

Masterpieces:

1) Tamil Payitrum Murai [1957]
2) Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar [English][His PhD thesis] [1977]
3) Kalvi Ulaviyal Kotpaadukal [1989]
4) Vainava Selvam [1995]

Financial Aid for publishing the Books:

a) Tirumala Tirupathi Devasthanams - 21
b) Directorate of Tamil Development
Government of Tamil Nadu - 6

Research on Professor's Books

a) University of Madras - 1993 (leading to PhD)
b) Madurai Kamaraj University - 2017 (leading to PhD)
c) Bharathiyar University - 2019 (leading to PhD)

Research Study

Students/Scholars [doing MA/MEd/MPhil] are conducting research study based on Professor's Books. Na Subbu Reddiar 100 Educational Trust is offering Fellowships to these students.

IBSN:978-81-943850-9-7

www.nasubbureddiar100.in